# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: உதயன் - 28
சிறப்பிதழ் - 28
சுடர் 32 | கதிர் 139 | வள்ளுவர் ஆண்டு 2048 | சித்திரை 01 வெள்ளிக்கிழமை 14.04.2017



வாசகர்கள், அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும் உதயனின் இனிய ஏவிளம்பி சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக.

## இலங்கைக்கு ஜப்பான் 6,300 கோடி ரூபா உதவி

கொழும்பு, ஏப். 14
6 ஆயிரத்து 300 கோடி ரூபாவை ஜப்பான் அரசு இலங்கைக்கு உதவியாக வழங்கவுள்ளது.
டோக்கியோவில் நேற்று முன்தினம் நடந்த இலங்கை ஜப்பானிய உச்சி மாநாட்டில் இந்த நிதியுதவியை வழங்க இணக்கம் காணப்பட்டது.
இலங்கை மற்றும் ஜப்பானிய தலைமை அமைச்சர்களின் முன்னிலையில். >> 24



## ஜி.எஸ்.பி. கிடைக்கும் கூட்டு அரசு நம்பிக்கை

பெல்ஜியம் விரைகிறது சிறப்புக் குழு

கொழும்பு, ஏப். 14
மனித உரிமைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் கடந்த அரசின் பொறுப்பற்ற செயற்பாட்டினால் இழக்கப்பட்ட ஜி.எஸ்.பிளஸ் வரிச் சலுகை மே மாதம் மீண்டும் இலங்கைக்குக் கிடைக்கும். >> 24

## வங்கிக் கணக்கில் வறட்சி நிவாரணம்

விவசாயிகள் மகிழ்ச்சி

கொழும்பு, ஏப். 14
வறட்சி நிவாரணமாக விவசாயிகள் ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட வங்கிக் கணக்குக்கு முதற்கட்டமாக தலா 8 ஆயிரத்து 650 ரூபா வைப்பிடப்பட்டுள்ளது.
கொழும்பு அரசின் விவசாய அமைச்சின் கீழ் உள்ள கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் அலுவலகத் தகவலில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.
கமநலக் காப்புறுதிச் சபையின் ஊடாக கமநல அபிவிருத்தித்திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் 2016 - 2017ஆம் ஆண்டுக்கான காலபோக நெற் செய்கையை >> 24

### வடக்குக் காணி விடுவிப்பு;

## முப்படைத் தளபதிகளுடன் ஏப். 17 கூட்டமைப்பு பேச்சு

யாழ்ப்பாணம், ஏப். 14
வடக்கு மாகாணத்தில் பாதுகாப்புத் தரப்பினர் வசமுள்ள காணிகள் தொடர்பில் முப்படைத் தளபதிகள், பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஆகியோருக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமையே நடைபெறும். >> 24

# இலங்கை இராணுவம் மீது மீண்டும் பாலியல் மீறல் குற்றச்சாட்டு

### ஹெய்டியில் அமைதிப் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் சிறுவர்களை துர்நடத்தைக்கு உட்படுத்தினர்

கொழும்பு, ஏப்ரல் 14
ஹெய்ட்டியில் ஐ.நா. அமைதிப் படையில் பணியாற்றிய இலங்கைப் படையினர், அங்குள்ள சிறுவர்களைத் துர்நடத்தைக்கு உட்படுத்தினர் என மிகப்பெரிய குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. சுமார் 130 இலங்கை இராணுவத்தினர் மீது இந்தக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. இந்தத் தகவலை >> 24

## வாக்குறுதி தவறிவிட்டார் அரச தலைவர் மைத்திரி

தேர்தல் கண்காணிப்பு அமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 14
2017 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதத்துக்குள் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வழங்கிய வாக்குறுதியை அவர் நிறைவேற்றத் தவறி விட்டார்.
இவ்வாறு தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் தலைவர் ரோஹன ஹெட்டி ஆராச்சி தெரிவித்துள்ளார்.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தான் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. இந்த ஆண்டு முடிவடைவதற்குள் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படும் என்று புதிய வாக்குறுதியை வழங்கியுள்ளார். எப்படியிருப்பினும் இந்த வருட முடிவுக்கு முன்னர் தேர்தலை நடத்துவதற்கான வாய்ப்புகள் குறைவானதாகவே உள்ளது - என்றார். (5)

## வடக்குப் பட்டதாரிகளுடன் அரச பிரதிநிதி நாளை பேச்சு

அரச வேலைவாய்ப்பு வழங்குவது குறித்து

யாழ்ப்பாணம், ஏப். 14
வடக்கு மாகாண வேலைதேடும் பட்டதாரிகளை அரச தலைவரின் செயலாளர் நாளை சனிக்கிழமை சந்திக்கவுள்ளார். >> 24

## ஆரவாரமில்லாமல் பிறந்தது ஏவிளம்பி



யாழ்ப்பாணம், ஏப். 14
ஏவிளம்பி புதுவருடம் இன்று அதிகாலை பிறந்தது. கடந்த ஆண்டுகளைப் போன்று பட்டாசு வெடிச் சத்தங்கள் எதுவுமில்லாமல்-ஆரவாரமில்லாத புத்தாண்டாகப் பிறந்தது.
தமிழ்-சிங்களப் புத்தாண்டான ஏவிளம்பி, இன்று அதிகாலை12.48மணிக்கு உதயமானது. புத்தாண்டுப் பிறப்புப் பூசைகள் ஆலயங்களில் நடைபெற்றன. மக்கள் ஓரளவில் கலந்துகொண்டனர். >> 22

## சுழிபுரத்தில் நாளை மாபெரும் புத்தாண்டு விழா

யாழ்ப்பாணம், ஏப். 14
சித்திரைப் புதுவருட விழா, சுழிபுரம் வழக்கம்பரை முத்துமாரி அம்மன் கோயிலடியில் நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது. >> 22

## இலங்கையில் அமைதியை பாதுகாக்க உதவவேண்டும்

ஜப்பானில் ரணில் கோரிக்கை



கொழும்பு, ஏப். 14
எதிர்காலத்தில் பன்னாட்டு ரீதியில் இந்தோ பசுபிக் சமுத்திர வலயம் மிகவும் முக்கியமானதொருவலயமாக மாறும். இந்த வலயத்தில் சுதந்திரமான கப்பல் போக்குவரத்தை உறுதி செய்ய வேண்டுமாயின், இங்கு சமாதானத்தைப் பாதுகாக்கப் பிராந்திய நாடுகள் பாடுபடவேண்டும்.
இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.
ஜப்பானின் முன்னணி தொழில் >> 24

## சுவாமிநாதன் மீது குற்றச்சாட்டு

வீடமைக்கும் பணிகள் எதுவுமே நடக்கவில்லை உயிரிழந்த பல்கலை மாணவரின் பெற்றோர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஏப்.14
துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் குடும்பத்தினருக்கு வீடு அமைத்துக் கொடுக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். >> 24

## வைத்தியசாலையில் விழுந்த காய்ச்சல் நோயாளி உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஏப். 14
கனடாவிலிருந்து வந்த முதியவர் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு யாழ்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவர் அங்கு மலசலகூடத்தில் விழுந்து காயமடைந்து குருதிப் பெருக்கினால் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
திருநெல்வேலி >> 22

## கிணற்றில் தவறி விழுந்து பெண் சாவு

தென்மராட்சி, ஏப். 14
தண்ணீர் எடுக்கச் சென்ற குடும்பப் பெண் கிணற்றினுள் தவறி வீழ்ந்தபோது அயலவர்களால் காப்பாற்றப்பட்டு >> 22



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுத்திட்டப் பணி தடைப்படாதவாறு மணல் விநியோகம்

## யாழ். மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்14

யாழ்.மாவட்டத்தில் இடம்பெறும் வீட்டுத் திட்டப் பணிகள், அபிவிருத்திச் செயற்பாடுகள் தடைப்படாத வகையில் மணல் விநியோகம் மேற்கொள்ளப்படும் என யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இதுவரை காலமும் மேற்கொள்ளப்பட்டு வந்த மணல் விநியோகத்துக்குத் தடை ஏற்பட்டுள்ளது. இதனால் மாற்று ஏற்பாடாக வேறு ஒரு இடத்தில் மணல் அகழ்வதற்கான நடவடிக்கைகள் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது தொடர்பாக இனம் காணப்பட்டுள்ள குறித்த பிரதேசத்தின் பிரதேச அமைப்புக்கள், மக்களுடன் மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கலந்துரையாடல் நடத்தப்பட்டது. இதன்போதே மாவட்டச் செயலர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது இடம்பெறும் வீட்டுத் திட்டப் பணிகள், அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பன தடைப்படாத வகையில் மணலை விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதன் மூலம் கிடைக்கும் வருமானமும் வேலை வாய்ப்பும் மணல் அகழப்படும் பகுதிக்கே வழங்கப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும். குடாநாட்டில் மணல் விநியோகம் தடைப்பட்டால் மாவட்டத்துக்குக் கிடைக்கும் வீட்டுத் திட்டமும் அபிவிருத்திப் பணிகளும் பாதிப்படையும். இதனைத் தமது வாழ்வாதாரத் தொழிலாகக் கொண்டுள்ள பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களும் வேலைவாய்ப்பை இழக்கும் நிலமை ஏற்படும்.

மாவட்டச் செயலக வழிகாட்டலின் கீழ் பிரதேச செயலகத்தால் அனுமதிக்கப்பட்டு மணல் அகழ்வு இடம்பெற்ற பகுதியை வனஜீவராசிகள் திணைக்களம் தனது ஆளுகைப் பகுதியாக வர்த்தமானி ஊடாக அறிவித்தமையே மண்ல் விநியோகம் தடைப்படுவதற்கு காரணம். ஆயினும் அந்தத் தடையை நீக்க நிர்வாக ரீதியில் நாம் உரிய நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றோம். அரசியல் ரீதியாகவும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் முயற்சிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதன் மூலம் குறித்த பிரதேசத்தை மீண்டும் வனஜீவராசிகள் திணைக்களத்திடமிருந்து பெறமுடியும் என எதிர்பார்க்கிறோம். இது குறித்து வனஜீவராசிகள் அமைச்சில் கடந்த வாரம் இடம்பெற்ற கலந்துரையாடலில் எமது தரப்பில் பிரதேச செயலாளர் நேரில் பங்கு கொண்டு விவரங்களை வழங்கியுள்ளார். இதனால் அந்தப் பிதேசம் எந்தவகையிலும் மீளக் கிடைக்கும் என்றே நம்புகிறோம்.

அதற்குரிய வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டாலும் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு தீர்மானமாக நிறைவேறி வர்த்தமானி அறிவித்தல் வரவேண்டும். அது வருவதற்கு 3 மாதம் வரை செல்லக்கூடும். அது வரை மணல் விநியோகத்தை நிறுத்தி வைக்க முடியாது.


இதனால் அம்பனை அண்டிய இடத்தில் உள்ள உயர்ந்த திட்டியிலிருந்து இயந்திரங்களைப் பயன்படுத்தாமல் மனித வளங்களை மட்டுமே பயன்படுத்தி மணலை விநியோகிக்க முடிவாகியுள்ளது.

சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையிலும், அந்தப் பகுதியில் உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கக்கூடியவாறும் மணல் விநியோகத்தை மேற்கொள்ளும்போது அவர்களுக்கு நிச்சயமாகத் தமது கிராமங்களில் அதிக அக்கறை இருக்கும். பாதிப்பான முறையில் மணல் அகழ்வில் அவர்கள் ஈடுபடமாட்டார்கள் என்ற நம்பிக்கையும் உண்டு.

அந்தப் பகுதியில் ஏற்கனவே ஒரு நிறுவனம் மணல் விநியோகம் என்ற பெயரில் பெரும் குழிகள் தோண்டி ஆபத்தையும் சுற்றுச் சூழல் பாதிப்பையும் ஏற்படுத்தியுள்ளதாகவும், அதனை இதுவரை சீர் செய்யவில்லை எனவும் குற்றம் சாட்டியிருந்தீர்கள். பொறுப்பாக இருந்த அதிகாரிகள் கூட இதனைத் தடுக்கவோ தட்டிக்கேட்கவோ திராணியற்று இருந்ததாகவும் உங்கள் மன ஆதங்கங்களை தெரிவித்திருந்தீர்கள்.

அதனைத் தடுக்கவில்லை என்பதை நானும் ஏற்றுக்கொள்கின்றேன். இருப்பினும் அப்போது இருந்த சூழலில் அதிகாரிகள் எவ்வாறு செயல்படமுடியும் என்பதை நான் கூறித்தான் நீங்கள் அறியவேண்டியதில்லை. இனியாவது குறித்த நிறுவனத்தின் ஊடாக அதனை நிவர்த்தி செய்து தரவேண்டும் என்கிறீர்கள். அதனை ஆராய்கின்றோம். .

எனவே குறிப்பிட்ட காலத்துக்குச் சூழலுக்குப் பாதிப்பில்லாத முறையில் மணல் விநியோகத்தில் ஈடுபட ஒத்துழைக்கவேண்டும் - என்றார். (த-101)



# பதவி துறப்பு எனக்கு புதிய விடயமே அல்ல

## கூறுகிறார் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்

கொழும்பு, ஏப். 14

மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகப் பதவி விலகுவது என்பது எனக்குப் புதிய விடயமல்ல. அது பழைய விடயம். இதற்கு முன்னரும் மக்களின் உரிமைகளுக்காகப் பதவி விலகும் சூழல் வந்தபோது முதலில் பதவி விலகியவன் நான்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சி தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

எமக்கு உரிய தீர்வைப் பெற்றுத்தர முடியாவிட்டால் தலைவர் சம்பந்தன் உட்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சகல அரசியல் தலைவர்களும் பதவிகளைத் துறந்து எம்மோடு வீதியில் இருந்து போராடவர வேண்டும் என கேப்பாபுலவு மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். இது தொடர்பிலேயே எதிர்க்கட்சி தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

"தற்போது தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்வதற்காகப் பக்குவமாக செயற்படவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

காணிகளை இழந்துள்ள மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள வேண்டும். அவற்றை உதாசீனம் செய்யக்கூடாது. மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நாங்கள் தொடர்ந்து செயற்பட்டு வருகிறோம்" என்றும் அவர் குறிப்பிட்டார். (த-4)

# துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஏப். 14

கடுவலை - கொத்தலாவல பிரதேசத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 2 பேர் கொல்லப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த 2 பேரை அணுகிய, பிறிதொரு மோட்டார் சைக்கிளில் சென்ற இனந் தெரியாத நபர்களே துப்பாக்கிச் சூடு நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

பாதாளக் குழுக்களுக்கு இடையிலான முறுகலே இந்தச் சம்பவத்துக்குக் காரணமாக இருக்கலாம் என்று சந்தேகிப்பதாக நவகமுவ பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான விசாரணை மேற்கொண்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த ஜயகொடி தெரிவித்தார். (த-4)

# சிறப்புத் தொடருந்து சேவை இடைநிறுத்தம்

யாழ்பாணம், ஏப். 14

புதுவருடதினத்தை முன்னிட்டுப் பயணிகளின் நன்மை கருதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறப்புத் தொடருந்துச் சேவை நிறுத்தப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணத் தொடருந்து நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன .

பண்டிகைக் காலத்தில் பயணிகளின் நன்மை கருதிக் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி இடம்பெறவிருந்த சிறப்புத் தொடருந்துச் சேவையே நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவித்தல் கிடைத்துள்ளதாகத் தொடருந்து நிலைய வட்டாரங்கள் கூறின.

பயணிகளின் எண்ணிக்கை, ஆசனப் பதிவு எண்ணிக்கை என்பன குறைவாகக் காணப்பட்டமையால் இந்தச் சிறப்புத் தொடருந்துச் சேவை நிறுத்தப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது. (த-ரி)

# பொலிஸ் சேவைக்கான விண்ணப்பத் திகதி நீடிப்பு

கொழும்பு, ஏப். 14

இலங்கைப் பொலிஸ் திணைக்களத்துக்குப் பொலிஸாரை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த விண்ணப்பத்துக்கான திகதி நேற்றுடன் நிறைவடைந்துள்ளபோதிலும் மே மாதம் 2ஆம் திகதி வரை அதனை நீடித்துள்ளதாகப் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள், கான்ஸ்டபிள்கள் மற்றும் பொலிஸ் சாரதிகள் ஆகியோருக்கான விண்ணப்பங்களே கோரப்பட்டுள்ளன.

வடக்கு மற்றும் கிழக்கைச் சேர்ந்த தமிழ் மொழி பேசத் தெரிந்த இளைஞர்கள் மற்றும் இளம் பெண்களை அதிகளவில் உள்வாங்குவதற்கு எதிர்பார்த்துள்ளதாகப் பொலிஸ் தலைமையகம் மேலும் கூறியுள்ளது. (த-4)

# குடும்பத் தலைவருக்கு நடுவீதியில் கத்திக்குத்து

யாழ்ப்பாணம், ஏப். 14

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டுப் பகுதியில் பட்டப்பகலில் நடு வீதியில் வைத்துக் குடும்பத் தலைவர் ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்காகியுள்ளார். இனம்தெரியாத நபர்கள் அவரைக் கத்தியால் குத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். காயமடைந்த அவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மதியம் இடம் பெற்றது.

தலை, வயிற்றுப் பகுதிகளில் கத்திக்குத்துக்கு இலக்காகிய உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் சோதிநாதன் (வயது-53) என்ற குடும்பத் தலைவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கத்திக்குத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை எனவும், இது தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (த-ரி1)

# கல்வி அதிகாரிகளுக்கு அமைச்சர் கட்டுப்பாடு

கொழும்பு, ஏப். 14

அரச தேசியப் பாடசாலைகளுக்கு அதிபர்களை நியமித்தல், இடமாற்றம் செய்தல் உட்பட பாடசாலைகளுடன் தொடர்புடைய 10 நடவடிக்கைகளை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் கல்வி அமைச்சர் தனது நேரடிக் கட்டுப்பாட்டில் எடுத்துள்ளார்.

இது தொடர்பான அறிவித்தலை அமைச்சின் கீழ் உள்ள சகல மேலதிகச் செயலாளர்களுக்கும், திணைக்களங்களுக்கும், நிறுவனப் பிரதானிகளுக்கும் அவர் அனுப்பி வைத்துள்ளார்.

தகவல் தொழில்நுட்ப பீடம் அமைத்தல், அதனுடன் தொடர்பான நடவடிக்கைகள், கல்வியுடன் தொடர்புடைய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடுதல் போன்றவற்றுக்கும் கல்வி அமைச்சரின் அனுமதி அவசியம்.

அமைச்சின் கொள்கைகளுக்கு மாற்றமாகச் செயற்படுவதாகக் கிடைக்கப் பெற்ற தகவல்கள் உறுதி செய்யப்பட்டதன் பின்னர் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-4)



# புது வருட விற்பனையில் பாடசாலைச் சீருடைகள்

யாழ்ப்பாணம், ஏப். 14

புதுவருட வியாபாரத்தின்போது பாடசாலைமாணவர்களின் சீருடைகளும் தைத்து விற்பனையா கின்றன.

புதுவருடக் கொண்டாட்டத்துக்காக [illegible] ஆடைகளைக் கொள்வனவு செய்யப் படையெடுத்துள்ளனர். இந்த நிலையில் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள வியாபாரிகள் பாடசாலை மாணவர்களின் சீருடைகளையும் இம்முறை தைத்து விற்பனைக்குக் கொண்டுவந்துள்ளனர்.

பல்வேறு அளவுகளில் அவை தைக்கப்பட்டு விற்பனையாகின் றன. அவற்றைக் கொள்வனவு செய் வதில் மக்கள் ஆர்வம் காட்டியுள்ளனர். (த-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் துன்ப துயரங்கள் அனைத்துமே நீங்கட்டும்



இன்று சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு பிறந்திருக்கின்றது. இன்று பிறந்திருக்கும் புத்தாண்டுக்கு "ஏவிளம்பி வருஷம்" என்ற பெயர். இற்றைநாள் வரையும் பட்ட துன்ப துயரங்கள் அனைத்தும் நீங்கப்பெற்று இலங்கை மணித்திருநாட்டில் வாழ்கின்ற எல்லோரும் மகிழ்ச்சியான மங்கள வாழ்வில் திளைத்திருக்கவேண்டுமென்று வாழ்த்துகின்றோம்.

இன்றைய தமிழ்ப் புத்தாண்டு நன்னாளில் புத்தாடை அணிந்து தமது உற்றார் உறவினர்களுடன் கலந்து உறவு கொண்டாடி, சொந்தபந்தங்களை மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்தி, எல்லாருமே ஆனந்தமயமான நல்வாழ்க்கை அமைந்து சிறப்புடன் திகழ நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து அருளாசிகள் நல்கி வாழ்த்துகின்றோம்.

பழைய ஆண்டிலே பழையன கழிதலும் புதிய ஏவிளம்பி வருடத்திலே இதயு சுத்தியுடன் ஒருவருக்கொருவர் உதவிகள் புரிந்து எல்லாம் நன்றே நடக்கவும் இறையருளை நாடி ஆசிவழங்கி உள மாரப்பிராத்தித்து மகிழ்ந்து இறும்பூதெய்தி வாழ்த்துகின்றோம்.

ஈழம் வாழ்மக்கள்அனைவருமே இனியாவது நிம்மதியுடன் நித்திரையும் பெற்று மகிழ்வுடனே வாழ்வதற்கு வழிபிறக்க வேண்டும் என்று நல்லைக் கந்தப்பெருமானின் பத்ம மலர்ப்பாதம் பணிந்து அருளாசிகள் வழங்கி வாழ்த்துகின்றோம்

"என்றும் வேண்டும் இன்ப அன்பு

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்
ஆதின குருமுதல்வர்

# சுகாதார அமைச்சை அரச தலைவரே பொறுப்பேற்பது பொருத்தமானது

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்ரல் 14

இலங்கையில் எச்1 என்1 இன்புளுவென்சா வைரஸ் தொற்று பரவி வரும் நிலையில் சிகிச்சைக்குத் தேவையான மருந்துக்குத் தட்டுப்பாடு காணப்படுகின்றது. சுகாதார அமைச்சின் செயல்பாடுகளைச் சீராக முன்னெடுத்துச் செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதால் சுகாதார அமைச்சை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவே, பொறுப்பேற்க வேண்டும் என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரியுள்ளது.

இது தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உதவிச் செயலர் நலிந்த ஹேரத், பி.பி.சி. செய்திச் சேவைக்கு வழங்கியுள்ள நேர்காணலில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எச்1 என் நோயாளர்களின் சிகிச்சைக்குத் தேவையான 'தமிப்ளு' மருந்துக்கு கொழும்பு தேசிய வைத்தியசாலை மற்றும் பேராதனை போதனா வைத்தியசாலை உட்பட அரச வைத்தியசாலைகளில்தட்டுப்பாடுகாணப்படுகின்றது. மருந்துத் தட்டுப்பாடு காரணமாக மக்கள் உயிரிழக்கின்றனர்.

இதுபோன்ற பிரச்சினைகளைத் தெரியப்படுத்தும்போது அரசைக் கவிழ்க்க முற்படுவதாகச் சுகாதார அமைச்சரால் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மீது குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்படுகின்றன. சுகாதார அமைச்சர், தனது இயலாமையை மூடி மறைக்கவே இது போன்ற குற்றச்சாட்டுகளை முன் வைக்கின்றார். 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் மைத்திரிபால சிறிசேன சுகாதார அமைச்சராகப் பதவி வகித்தார். அந்தக் காலத்தில் சுகாதார அமைச்சின் பணிகள் திருப்திகரமாக இருந்தன. சுகாதார அமைச்சை அரச தலைவர் பொறுப்பேற்க வேண்டும் என்றார். இதேவேளை எச்1 என்1 வைரஸ் காய்ச்சல் சிகிச்சைக்கு தேவையான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு இல்லை. தேவையை விடக் கூடுதல் கையிருப்பு இருப்பதாகச் சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது. (த-5)

# தமிழக அமைச்சர்களுடன் முதலமைச்சர் திடீர்ச் சந்திப்பு



சென்னை, ஏப். 14

வருமான வரித்துறைச் சோதனை, ஆர்.கே. நகரத் தேர்தல் இடைநிறுத்தம் போன்ற பரபரப்புக்கு மத்தியில், நேற்றுக் காலை தலைமைச் செயலகத்தில் முதல்வர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் மூத்த அமைச்சர்கள் திடீர் ஆலோசனை நடத்தினர். இதில் சுகாதாரத்துறை அமைச்சர் விஜயபாஸ்கரும் பங்கேற்றார்.

ஆர்.கே. நகரில் வாக்காளர்களுக்கு வழங்கப்பட வைத்திருந்ததாகச் சொல்லப்படும் பெருந்தொகைப் பணமும் துண்டுப்பிரசுரங்களும் விஜயபாஸ்கர் வீட்டில் கைப்பற்றப்பட்டன. இந்த விவகாரம் தமிழகத்தில் பூதாகரமாக வெடித்துள்ளது. வருமான வரித்துறையும் சம்பந்தப்பட்டவர்களிடம் வாக்குமூலங்களைப் பெற்று அடுத்த கட்ட நடவடிக்கைக்குத் தயாராகி வருகிறது. இந்தப் பின்னணியில் திடீர்ச் சந்திப்பு இடம்பெற்றது.

முதல்வர் எடப்பாடி பழனிசாமி தலைமைச் செயலகம் வந்தார். அவரை அமைச்சர்கள் திண்டுக்கல் சீனிவாசன், செங்கோட்டையன், தங்கமணி, எஸ்.பி.வேலுமணி, டி.ஜெயக்குமார் ஆகியோர் சந்தித்து பேசினர். அப்போது சுகாதாரத்துறை அமைச்சர் விஜயபாஸ்கரும் உடன் இருந்தார் என்று இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன. அமைச்சர் விஜயபாஸ்கரை அமைச்சரவையிலிருந்து நீக்கவேண்டும் என எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# தங்காலையில் மகிந்தவின் புதுவிதப் புத்தாண்டு விழா





கொழும்பு, ஏப்ரல் 14

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் தலைமையில் கூட்டு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் இணைந்து தங்காலை கால்டன் இல்லத்தில், புதுமையான புத்தாண்டு விளையாட்டுப் போட்டிகளை நேற்று நடத்தியுள்ளனர்.

இந்த விளையாட்டுப் போட்டியில் இடம்பெற்ற நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றுக்கும் வித்தியாசமான பெயர்களை வைத்திருந்தமை அனைவரினதும் கவனத்தையும் ஈர்த்தது.

இதன்படி, முட்டி உடைத்தல் போட்டிக்கு - மத்திய வங்கி முறி எனவும், பலூன் உடைத்தல் நிகழ்ச்சிக்கு - கூகுல் வைபை எனவும், யானைக்குக் கண் வைத்தல் நிகழ்ச்சிக்கு - தங்க யானைக்கு கண் வைத்தல் எனவும், கயிறு இழுத்தல் நிகழ்ச்சிக்கு - அரசிலுள்ள பிரதான இரு கட்சிகளின் பெயர்களையும், மாவில் நாணயம் தேடல் நிகழ்ச்சிக்கு - லம்போ கினி தேடல் எனவும் பெயர் வைத்திருந்தனர்.

போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு லம்போ கினி விளையாட்டுக் கார்கள், மகிந்த ராஜபக்சவினால் வழங்கப்பட்டன. (த-5)

# குளவிகள் கொட்டியதால் சுற்றுலாவிகள் 6பேர் காயம்

கொழும்பு, ஏப். 14

நீர்கொழும்பிலிருந்து நுவரெலியாவுக்குச் சுற்றுலா சென்றுக் கொண்டிருந்த சுற்றுலாப் பயணிகள் 6 பேர் நேற்று மதியம் குளவிக் கொட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று வைத்தியசாலைத் தரப்பு தெரிவித்தது.

நுவரெலியாவில் நடைபெற்று வரும் வசந்தகால நிகழ்வுகளை கண்டுகளிப்பதற்காக நீர்கொழும்பிலிருந்து சென்று கொண்டிருந்த சுற்றுலாப் பயணிகள் டெவோன் நீர்வீழ்ச்சிக்கு அருகாமையில் பகல் உணவு சமைத்துக் கொண்டிருந்தவேளை அப்பகுதியில் மரத்தில் இருந்த குளவிக் கூடு கலைந்து குளவிகள் இவர்களைத் தாக்கியுள்ளன.

இதில் 6 பேர் குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளதாகவும், அதில் 2 பேர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளதாகவும், 4 பேர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் கூறின. (த-4)

# 36 பேருக்கு டெங்குத் தொற்று

யாழ்ப்பாணம் ஏப். 14

பருத்தித்துறை புலோலி உட்பட 6 கிராம சேவகர் பிரிவுகளில் 36 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் எனப் பருத்தித்துறை பொதுச் சுகாதார வைத்திய பணிமனை தெரிவித்துள்ளது.

கடந்த மாதங்களுடன் ஒப்பிடுகையில் மார்ச் மற்றும் ஏப்ரல் மாத காலப் பகுதியில் 36 டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளதாகவும், டெங்கு நோய்த் தொற்று குறித்து மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் எனவும், வீட்டுச் சூழலில் நீர் தேங்கக் கூடிய பொருள்களை கண்டுபிடித்து அளிக்குமாறும் மக்களுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. (த-ரி-26)

# அதிவேகப் பாதைகளில் தீவிர பொலிஸ் ரோந்து

கொழும்பு, ஏப். 14

பெருநாள் தினங்களில் அதிவேகப் பாதையினூடாகப் போதைப் பொருள் கடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளதாகக் கிடைக்கப் பெற்ற தகவலையடுத்து பொலிஸார் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதிவேகப் பாதையின் வெளியேறும் இடங்களில் போதைப் பொருள் சுற்றிவளைப்புக்காகப் பொலிஸ் குழுக்கள்நியமிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வடக்கில் அதிகளவில் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்கள் பிடிபடுகின்றன. சிலர் கைது செய்யப்படுகின்றனர். பல சம்பவங்களில் எவருமே கைது செய்யப்படாத நிலையில் கஞ்சா மட்டும் பிடிபடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-4)

# வெட்டிய மரக்கிளை விழுந்து காயமடைந்த மூதாட்டி சாவு

யாழ்ப்பாணம், ஏப். 14

மரக்கிளையை வெட்டியபோது அது மூதாட்டியின் தலையில் விழுந்ததால் காயமடைந்து அவர் உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

வட்டுக்கோட்டை கிழக்கில் நேற்று முற்பகல் சம்பவம் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த சிவசம்பு பொற்கொடி (வயது 77) என்பவரே உயிரிழந்தார்.

பின்வளவு மரக்கிளையில் முட்டியவாறு காணப்பட்டது. இதனால் பக்கத்து வீட்டு நபரை அழைத்து மரக்கிளையை வெட்டி உதவுமாறு மூதாட்டி கோரியதால் மரத்தில் ஏறி வெட்டினார். இதன்போது மூதாட்டி தலையில் மரக்கிளை விழுந்து காயமடைந்தார். சங்கானை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்படும்போது உயிரிழந்திருந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேமகுமார் மற்றும் பொலிஸார் விசாரணை கொண்டனர். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசமைப்புக்கு ஜப்பான் முழு ஆதரவு

## ரணிலிடம் கூறினார் சின்சோ அபே



கொழும்பு, ஏப்ரல் 14

புதிய அரசமைப்பு, மறுசீரமைப்புக்கு ஜப்பான் தனது முழுமையான ஆதரவை வழங்கும் என்று அந்த நாட்டின் தலைமை அமைச்சர் சின்சோ அபே தெரிவித்துள்ளார்.

ஜப்பானுக்கு உத்தியோகபூர்வப் பயணம் மேற் கொண்டுள்ள கொழும்பு அரசின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்கவுக்கும், ஜப்பான் தலைமை அமைச்சருக்கும் இடையிலான சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்பிலேயே ஜப்பானிய தலைமை அமைச்சர் மேற்படி விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இனங்களுக்கு இடையே தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக உருவாக்கப்படும் புதிய அரசமைப்பு மறுசீரமைப்புக்கு ஜப்பான் முழுமையான ஆதரவை வழங்கும். இலங்கையின் துறைமுகம், போக்குவரத்து, உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வேறு தேசிய மட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார். (த-5)

# விமலை விடுவிக்க ரணிலின் தலையீடு

## ஏற்கமுடியாது என்கிறார் விக்கிரமபாகு

கொழும்பு, ஏப்ரல் 14

நாட்டில் இரத்தக் களரியை ஏற்படுத்த முயன்ற விமல் வீரவன்சவுக்கு பிணை வழங்குவதற்காக, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நீதித் துறையில் தலையீடு செய்தமையை ஏற்றுக் கொள்ள முடியாது. அதற்கு நாம் கண்டனத்தை வெளியிடுகின்றோம்.

இவ்வாறு நவசமசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துக் கூறுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது இனவாதத் தலைவர்களான சிங்கத்தின் இரத்தம் உள்ளவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து புத்தாண்டில் எவ்வாறு உணவு அருந்துவது என்று கேட்கின்றனர். புத்தாண்டில் உணவு அருந்த முடியாதாம். புத்தாண்டு தமக்கில்லையாம். புத்தாண்டில் உண்பதற்கான நிலைமையை இந்த அரசு இல்லாது செய்துள்ளது என்று குற்றம்சாட்டி பரப்புரை முன்னெடுத்து வருகின்றனர்.

அந்த நிலைமைக்குள் இருந்து கொண்டு தற்போது மேற்கொள்வதற்கு முயற்சிக்கப்பட்டுவரும் அரசமைப்பு மறுசீரமைப்பு, வடக்கு கிழக்கு மக்களின் பூர்வீகக் காணிகளை மீளப் பெற்றுக் கொடுத்தல், காணாமற் போனேரைக் கண்டறிதல் போன்ற செயற்பாடுகளுக்கும் தடைகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த நேரத்தில் விமல் வீரவன்சவுக்குப் பிணை வழங்குவது தொடர்பில், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நீதித்துறையில் தலையிட்டமை, இனவாதிகளுக்கு மேலும் ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. தேவையான நேரத்தில் வெளியில் எடுப்பதற்கும், வேண்டாம் என்ற போது உள்ளே வைப்பதற்குமா நீதிமன்றம் உள்ளது என்று மக்கள் கேட்கின்றனர். அது சரியான செயற்பாடு அல்ல. எந்தவொரு தருணத்திலும் அதற்கு இணங்க முடியாது. நாங்களும் சிறையில் இருந்தவர்கள். 1980 ஆம் ஆண்டுகளில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலப்பகுதியில் மகசின் சிறைச்சாலையில் மூன்று மாதங்கள் வரை நாம் இருந்தோம். அன்று எம்மீது பரிதாபம் காட்டி, வெளியில் எடுக்கவில்லை.

விமல் வீரவன்ச என்பவர் இனவாதத்தைத் தூண்டி நாட்டில் மீண்டும் ஒரு இரத்தக் களரியை ஏற்படுத்துவதற்காகக் குரல் கொடுத்தவர். தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க என்ற தேசத் துரோகியை தூக்கிலிட வேண்டும் என்று கூறியவர்தான் வீரவன்ச. அவ்வாறான ஒருவருக்கு நியாயம் வழங்க வேண்டும் என்று நீதித்துறையில் கை வைக்க வேண்டாம் - என்றார். (த-5)

# சன சமூக நிலைய 77ஆவது ஆண்டு விழா நிகழ்வு

யாழ்ப்பாணம் ஏப்ரல் 14

அராலி ஸ்ரீ முருகன் சன சமூக நிலையத்தின் 77ஆவது ஆண்டு விழாவின் இரண்டாம் நாள் கொண்டாட்டம் இன்று வெள்ளிக்கிழமை. மாலை சன சமூக நிலைய முன்றலில் நடைபெறும் .

நிகழ்வின் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (த-ரி)

# வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி

யாழ்ப்பாணம்,ஏப்.14

யாழ். மாநகரப் பிரதேசத்தில் வளர்ப்பு நாய்களுக்கான விசர் நோய்க்கான தடுப்பூசி மருந்து ஏற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொழும்புத்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் எதிர்வரும் 17 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரை வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி மருந்து ஏற்றப்படும்.

ஜே 61,62;63, 64, 65, 66 ஆகிய கிராம சேவைகர் பிரிவுகளைச் சேர்ந்த வளர்ப்பு நாய்களுக்கு இந்தத் தடுப்பூசி மருந்து ஏற்றப்படும் என்று மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தெரிவித்தது. (த-17)

# பரிசளிப்புவிழா

யாழ்ப்பாணம் ஏப்ரல் 14

நயினாதீவு செம்மணத்தம்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த உயர் திருவிழாவை முன்னிட்டு நயினாதீவு ஸ்ரீ கணேச சனசமூக நிலையம் நடத்திய 33வது சைவசமயப் போட்டிப் பரீட்சையின் பரிசளிப்புவிழா நாளை சனிக்கிழமை ஆலயத்தின் நிகழ்ச்சி அரங்கில் இரவு 7 மணிக்கு நடைபெறும். (த-ரி)

# நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தில் 12 ஆயிரத்து 458 வீடுகள் தரிசிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.17

யாழ். மாநகரப் பிரதேசத்தில் இடம்பெற்ற தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தின்போது சுமார் 12 ஆயிரத்து 458 வீடுகள் தரிசிக்கப்பட்டுள்ளன.

கடந்த மாதம் 29 ஆம் திகதி தொடக்கம் இந்த மாதம் 8 ஆம் திகதி வரை யாழ். மாநகரப் பிரதேசம் முழுவதும் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் இடம்பெற்றன.

இந்தக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின்போது 120 குடியிருப்புகளில் நுளம்புக் குடம்பிகள் காணப்பட்டன. அத்துடன் மூவாயிரத்து 560 குடியிருப்புக்கள் நுளம்பு பரவக் கூடிய இடமாகக் காணப்பட்டன.

அதனைவிட 797 குடியிருப்புக்கள் டெங்கு பரவக்கூடிய சூழலாக காணப்பட்டதால் அவற்றை உடனடியாகத் துப்புரவு செய்யும் வகையில் சிவப்பு ஸ்ரிக்கர்களும் ஒட்டப்பட்டதாகச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (த-17)

# புத்தாண்டு விளையாட்டு விழா

யாழ்ப்பாணம் ஏப்.14

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு அனலைதீவு அருணோதயா சனசமூக நிலையமும் அருணோதயா விளையாட்டுக் கழகமும் இணைந்து, புத்தாண்டு விளையாட்டு விழாவை இன்று பி.ப.2.30 மணிக்கு கழக மைதானத்தில் நடத்தவுள்ளன.

சனசமூக நிலையத் தலைவர் இ.அனோராஜ் தலைமையில் நடைபெறும் விழாவில் இருபாலாருக்குமான தலையணைச் சண்டை, முட்டி உடைத்தல், முட்டை ஏந்துதல், பந்து பரிமாற்றம், வேகநடை, கிடுகு பின்னுதல், தடை ஓட்டம் ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெறுபவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும். (த-9)

# முதியோர் சங்க ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், ஏப்.14

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் ஒன்றுகூடல் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை மு.ப.10மணிக்கு சங்கமண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு அனைத்து மூத்த குடிமக்களையும் தவறாது சமூகம் தந்துதவுமாறு சங்கத்தின் செயலாளர் ந.கனகலிங்கம் அறிவித்துள்ளார். (த)

# மருமகள் தாக்கி மாமியார் காயம்

தென்மராட்சி, ஏப் 14

கடைக்குச் சென்று பொருள்கள் வாங்கி வர மறுத்ததால் ஆத்திரம் கொண்ட மருமகள் கையில் அகப்பட்ட கொட்டனால் மாமியாரைத் தாக்கினார் எனக் கூறி 70 வயது மூதாட்டி சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டுள்ளார். இந்தச் சம்பவம் தென்மராட்சில் நேற்று இடம்பெற்றுள்ளது.

சித்திரைப் புத்தாண்டுக்காகக் காணியைத் துப்பரவு செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த மருமகள் வீட்டில் அமர்ந்திருந்த மாமியை அருகில் உள்ள கடைக்குச் சென்று சமையலுக்குத் தேவையான பொருள்களை வாங்கி வருமாறு பணம் கொடுத்தார் என்றும், இதனால் கோபமுற்ற மாமி கடைக்குச் செல்ல மறுத்ததுடன் மருமகளை ஏசியுள்ளார் எனவும், மருமகள் ஆத்திரமுற்று அங்கு காணப்பட்ட கொட்டனால் தாக்கியுள்ளார் எனவும் கூறப்பட்டது. இதனால் தலையில் காயமேற்பட்டதென மூதாட்டியை வைத்தியசாலைக்கு அழைத்து வந்த மூதாட்டியின் உறவினர்கள் தெரிவித்தனர். (த-9)

# கணவன் மனைவி பிணக்கில் காயமடைந்தார் மைத்துனர்

யாழ்ப்பாணம், ஏப். 14

கணவன்மனைவிக்கு இடையே ஏற்பட்ட பிணக்கு கைகலப்பாகியதால் மனைவியின் தம்பி காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் எனத் வட்டாரங்கள் தெரிவித்தன.

கொக்குவில் வராகி அம்மன் கோயிலடிப் பகுதியில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கணவனும் மனைவியும் பிரிந்து வாழும் நிலையில் நேற்றுமுன்தினம் கணவன் தனது மகனைப் பார்க்க மனைவி வீட்டுக்குச் சென்றுள்ளார்.

இதன்போது மனைவி வீட்டாருக்கும் கணவனுக்குமிடையே வாக்கு வாதம் ஏற்பட்டு கைகலப்பாக மாறியது.

இதனைத் தொடர்ந்து கணவன் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-ரி-)

# வவுனியாவில் குண்டு மீட்பு



வவுனியா, ஏப். 14

வவுனியா உக்கிளாங்குளத்தில் 15 கிலோ நிறையுடைய வாகனத் தகர்ப்பு வெடிகுண்டு நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

'புதுவருடத்தினை முன்னிட்டு வீட்டு வளவினைத் துப்புரவு செய்துள்ளனர். இதன்போது மண்ணில் புதையுண்ட நிலையில் 15 கிலோ வெடிபொருள் காணப்பட்டுள்ளது. உடனடியாக எமக்குத் தகவல் வழங்கப்பட்டது. நீதிமன்ற அனுமதியுடன், சிறப்பு அதிரடிப் படையின் உதவியைப் பெற்று வெடிபொருளை செயழிலக்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது' என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-5)

# வருடாந்த ஒன்று கூடல்

பருத்தித்துறை, ஏப். 14

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்த ஒன்று கூடல் நாளை 15 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு, சங்கத்தலைவர் நா.கந்ததாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

விளையாட்டுப் போட்டியுடன் ஆரம்பமாகும் நிகழ்வு கல்லூரி மண்டபத்தில் இடம் பெறும் இராப் போசனத்துடன் நிறைவுபெறும். (த-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ் சிங்களப் புத்தாண்டு வியாபாரத்தால் வவுனியா நகரம் முழுவதும் களைகட்டியது. வெளிமாவட்டங்களிலிருந்தும் மக்கள் வருகை தந்து புத்தாண்டுக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்தனர். (ஐ)

# 10 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் ,பொருள்கள் கொள்ளை

## இளைஞர் ஒருவர் கைது

கொழும்பு.ஏப்.14

வீடொன்றில் 10 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் உட்பட பொருள்களைக் கொள்ளையிட்ட சந்தேகத்தில் எல்பிட்டிய, பிட்டிகல பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என்று நீர்கொழும்பு பிராந்திய குற்றத்தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

நீர்கொழும்பு, கட்டுவபிட்டி, நுகவெல வீதியிலுள்ள விகாரை முன்பாக வைத்து, குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தளுபத்தை, திம்பிரிகஸ்கட்டுவ பிரதேசத்தில் அமைந்துள்ள உல்லாசப் பயணிகளுக்கான விடுதி உரிமையாளரின் இரண்டு மாடிகளை கொண்ட வீட்டிலேயே குறித்த சந்தேகநபர் கொள்ளையடித்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வீட்டில் 4 மணித்தியாலங்கள் தங்கியிருந்த சந்தேகநபர், வீட்டிலிருந்த நகைகள், மாணிக்கக் கற்கள், அலைபேசி மற்றும் கமரா ஆகியவற்றைத் திருடியுள்ளார்.

சில காலங்களுக்கு முன்னர், சந்தேகநபர், அந்த வீட்டின் கூரை சீரமைப்பு வேலைகள் செய்துள்ளார். அதன்மூலம் குறித்த வீட்டில் கொள்ளையடிப்பதற்கான வழிகளைக் கண்டறிந்து கொண்டு கொள்ளையடித்துள்ள சந்தேகநபர், தனது இரண்டாவது மனைவி யின் உதவியுடன், நீர்கொழும்பில் அமைந்துள்ள அடகு வைக்கும் நிலையங்களில் நகைகளை அடகு வைத்தமை, ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# பல்பொருள் அங்காடிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை

கொழும்பு,ஏப்.14

கொழும்பில் முன்னிலையிலுள்ள 3பல்பொருள் அங்காடிகளுக்கு எதிராக, சட்ட நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக கொழும்பு மாநகர சபையின் சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது. கொழும்பு மாநகர சபையின் சுகாதாரப் பிரிவி னர்,கொழும்பு ஹைட்பார்க்கிலுள்ள பல்பொருள் அங்காடிகள் மூன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை திடீர் சோதனைகளை மேற்கொண்டனர். "வழமையாக புத்தாண்டுகாலத்தில், பல்பொருள் அங்காடிகளில், முறையான பாதுகாப்புடன் பெருமளவிலான பொருள்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கும். ஆனால், மேற்படி அங்காடிகளில், திகதி குறிப்பிடப்படாத, காலாவதியான பொருள்களே அதிகம் இருந்தன. இதேவேளை, பாவனைக்கு உதவாத பொருள்கள், அதிகமாக விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தன" என்று, கொழும்பு மத்திய சுகாதார மருத்துவ அதிகாரி சுபாஷ் மெண்டிஸ் தெரிவித்தார். "இதேவேளை, அதிகமான உணவுப்பொருள்கள், குளிரூட்டியில் நெருக்கமாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. களஞ்சிய அறைகள், வழமைபோன்று குளிரூட்டப்பட்ட நிலையில் இருந்தன. குளிரூட்டிகள் அனைத்தும் உணவுப் பொருள்களால் நிரம்பி வழிந்தன. இவ்வாறு குளிரூட்டியில் மிக நெருக்கமாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த பொருள்கள், மனித பாவனைக்கு உகந்தவை அல்ல. எனவே, முன்னிலையிலுள்ள மேற்படி மூன்று அங்காடிகளுக்கு எதிராகசட்ட நவடிக்கை எடுக்கவுள்ளோம்" என்று அவர் மேலும் கூறினார். (ஐ)




## சிவன் ஜோதிடம்

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள
**பண்டித் ஜெயதேவ் சுவாமிகள்**
**076 585 9977 , 077 835 7307**

துல்லியமாக கணித்து சொல்லப்படும் விடயங்கள்

மெய்யன்பர்களே !

இந்தியாவின் புகழ் பெற்ற மாந்திரீக ஜோதிடர் இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. கணவன் மனைவி சண்டை பிரிவு, காதல் திருமண தடை இதுவரை திருமணமே ஆகாதவர்கள் பிள்ளைகள். பெற்றோர் சொல் கேளாமல் திரிவது. வேலை தொழில் உத்தியோகம் இப்படி பல பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். பணம் பெறாமையால் தொழில் பாதிப்பு பலன் சொல்வதோடு பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். புத்திர பாக்கியம் இல்லாதவர்களுக்கு புத்திரபாக்கியம் பலன்களை சொல்வார். மேலும் உங்கள் வீட்டில் செல்வம் கொழிக்க உதவும் லட்சுமி பூசை செய்து தருவார்.
தமிழ் மொழிகளில் ஜோதிடம் சொல்லப்படும்.

100% உத்தரவாதம்

**இல.394, 1/1 மணிக்கூட்டு வீதி,**
**(பெருமாள் கோயில் வீதி, லிங்கம் கிறீம் ஹவுஸ் அருகில்)**
**யாழ்ப்பாணம்.**
நேரம்: காலை 8.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை


# அரசியல் கற்கை நெறிகள் மே மாதம் ஆரம்பிக்கப்படும்

கொழும்பு,ஏப்.14

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரைக்கு அமைவாக, அரசியல் கல்வியைப் பயிற்றுவிக்கும் நிறுவனத்தின் கற்றல் நடவடிக்கைகள், எதிர்வரும் மே மாதம் 7 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதான உத்தியோகபூர்வத் தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றது. 18 தொடக்கம் 35 வயதுக்கு உட்பட்ட இளைஞர் மற்றும் யுவதிகள், இந்த நிறுவனத்தின் மூலம் கற்கை நெறிகளைத் தொடர முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)


## சேவை நலன் பாராட்டு




**திருமதி பேரின்பநாயகி சிவசுப்பிரமணியம்**
**( யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் பகுதித் தலைவர் )**

ஆசிரிய சேவைக்காலம்:-

| | |
|---|---|
| யா / மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயம் | - 08.06.1978 - 31.01.1983 |
| யா / பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை | - 01.02.1983 - 31.01.1985 |
| கிளி / பளை மத்திய கல்லூரி | - 01.02.1985 - 26.01.1993 |
| யா / மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி | - 27.01.1993 - 13.04.2017 |

யா / மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் விஞ்ஞானக் கல்வியின் உறைவிடமாய் இருந்து மாணவர் கல்வியில் அபரிமித கவனத்துடன் சேவையாற்றி பகுதித்தலைவராகத் தொடர்ந்து பணியாற்றி தனது சேவையிலிருந்து இன்று (14.04.2017) வெள்ளிக்கிழமை ஓய்வுபெறும் **திருமதி பேரின்பநாயகி சிவசுப்பிரமணியம்** அவர்களை சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துவதோடு வேம்படி விநாயகனையும் இறைஞ்சுகின்றோம்.

**வாழ்த்துவோர் : கல்லூரி சமூகம்,**
**யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.**



MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna

We wish our patrons a Happy New Year!

**கார்கில்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்










விசாரணை ☎ 021- 2227712

facebook MajesticCineplexSL
www.ceylontheatres.lk



**காணி விற்பனைக்கு**

உரும்பிராய் வடக்கில் பலாலி வீதிக்கு அருகில் சமையலறை மற்றும் நான்கு அறை வீட்டுடன் நான்கு பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

077 9783 206 / 077 4771 405



**மயிலிட்டித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்**
**வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் - 2017**

மேற்படி வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் 21.04.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**கு.குணராஜன்** — **உப தலைவர்.**
**ந.ரட்ணராஜா** — **செயலாளர்.**

**தெணியம்மன் கோயிலடி,**
**வியாபாரி மூலை, பருத்தித்துறை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலஞ்ச ஊழலை கண்காணிக்க சிறப்பு நடவடிக்கை

கொழும்பு,ஏப்.14

புத்தாண்டின் போது இலஞ்ச ஊழலில் ஈடுபடுகின்ற நபர்களைக் கைது செய்வதற்கான சிறப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு இதனைத் தெரிவித்துள்ளது.

புத்தாண்டை முன்னிட்டு தற்போது இலஞ்ச ஊழல் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்க பெற்றுள்ளன என்று ஆணைக்குழுவின் ஆணையாளர் நெவில் குறுகே தெரிவித்துள்ளார். (ஐ)

# 10 வருடங்களுக்கு மேலாக நிரப்பப்படாத பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.14

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ்.பிராந்திய காரியாலயத்தில் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக பல பதவிகள் நிரப்பப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டில் 15 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட போதும், இதுவரை நிரந்தரமாக்கப்படவில்லை.

மின்மானி வாசிப்பவர்களுக்கான 5 வெற்றிடங்கள் நீண்டகாலமாக வெற்றிடமாகவே உள்ளது.

இதனைவிடப் பிரதேசத்துக்கான பொறுப்பதிகாரிகள் மூன்று பேர் ஓய்வு பெற்றுச் சென்ற போதும், இதுவரை பொறுப்பதிகாரிகள் பதவிக்குரிய ஆளணிகளும் (தொழில்நுட்ப அலுவலர்கள் தரம்) இதுவரை மீள்நிரப்பப்படவில்லை.

இதனை முகாமைத்துவ உதவியாளர் பதவி, சாரதி, நிலையப் பராமரிப்பாளர் பதவி என பல வெற்றிடங்கள் தொடர்ந்து நிலவி வருகின்ற போதும், கொழும்பு தலைமையக நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் தலைமைக்காரியாலயம் பாராமுகமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கூட்டு அரசின் கீழ் குடிதண்ணீர்த் திட்டங்களுக்கான பல முன்னெடுப்புகள் முன்னெடுக்கின்ற போதும், பல பதவி அணிகள் தொடர்ந்து வெற்றிடமாக இருப்பதால் தேவைகளை உடன் நிறைவேற்ற முடியாது உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-50)

# தமிழ் மக்களின் உரிமைகளை அங்கீகரிக்கும் அரசமைப்பு தேவை

*அமைச்சர் துரைராசசிங்கம் வலியுறுத்து*

மட்டக்களப்பு, ஏப். 14



தமிழ் மக்களின் உரிமைகள் அங்கீகரிக்கும் வகையிலான அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும். அப்போதுதான் சமாதானமான ஒரு நிலைக்கு வரமுடியும். இவ்வாறு கிழக்கு மாகாண விவசாய அமைச்சரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளருமாகிய கிருஸ்ணபிள்ளை துரைராசசிங்கம் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற கட்சி உறுப்பினர்களுடனான சிறப்புக் கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்த நாட்டின் பன்மைத்துவத்தைப் பேணி இருக்கின்ற மக்கள் அனைவரும் அவர்களை அவர்களே கௌரவிக்கக் கூடிய விதத்திலான அரசமைப்பு இல்லாததன் காரணமாக இந்த நாடு மிகவும் சீரழிந்து இருக்கின்றது. எமது நாட்டில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. காலா காலத்துக்கு வறுமையைச் சொல்லிக் கொண்டிருக்கின்ற நாடாகவே இலங்கை இருக்கின்றது. இங்கிருக்கின்ற வளங்களை, வசதி வாய்ப்புகளை, இங்கிருக்கின்ற பிள்ளைகளை, சொத்துக்களைச் சரியான முறையில் பயன்படுத்துவதற்கு இன்னும் இலங்கை தயாராக இல்லை. இந்த நாட்டினுடைய மக்களைத் தமிழர் சிங்களவர், முஸ்லிம் என்று பிரித்து அவரவருக்கு உரிய உரிமைகளை அவர்களுக்கு கொடுக்காமல் எப்போதும் ஒருவரை ஒருவர் தூற்றிக் கதைக்கும் தன்மை தான் எமது நாட்டில் தற்போதும் இருக்கின்றது. ஆரோக்கியமான செயல்கள் நம்முடைய நாட்டில் இல்லை. அதற்கான காரணம் என்னவெனில் ஒரு ஒழுங்கான உறுதிப்பாடான அரசமைப்பு இங்கு இல்லை. முப்பது வருட காலம் போர் இடம்பெற்ற வியட்நாம் நாடு பொது உடமைக் கொள்கை எனும் கொள்கையால் இப்போது அந்த நாடு குறிப்பிட்ட காலத்துக்குள் பொருளாதாரத்திலே முன்னேறி இருக்கின்றது.

இலங்கை சுதந்திரம் அடைந்து 70 ஆண்டுகளை அண்மிக்கப் போகின்றோம் ஆனால் இன்னும் எமது நாடு சொல்லிக் கொள்ளக் கூடிய வகையில் எந்த வித முன்னேற்றமும் அடையாததாக இருக்கின்றது. இதற்கெல்லாம் காரணம் இங்கு ஒரு நிலையான அரசியல் கொள்கை இல்லை. இந்த நாட்டின் பன்மைத்துவத்தைப் பேணி அண்மையில் நான் ஒரு செய்தியைப் படித்தேன் 1409 ஆம் ஆண்டுகளில் ஒரு சீன கடற்படைத் தளபதி காளியில் ஒரு பட்டயம் எழுதி வைத்திருக்கின்றார். அது பாரசீக மொழியிலும், சீன மொழியிலும், தமிழ் மொழியிலும் எழுதப்பட்டிருக்கின்றது. அதில் குறிப்பிட்டுள்ளதாவது; தங்களின் இந்த கடற் பயணத்துக்குக் இந்துக் கடவுள்கள் அருள் பாலிக்க வேண்டும் என்று எழுதப்பட்டிருக்கின்றது. இதில் நாம் நோக்க வேண்டியது சீனர்கள் காலியில் எழுதிய அந்தப் பட்டயத்தில் தமிழ் மொழியை எழுதியிருக்கின்றார்கள் என்றால் காலியில் அப்போது யார் இருந்திருப்பார்கள். காலியில் தமிழர்களின் ஆதிக்கம் இருந்தமையால் தானே அங்கு தமிழ் மொழியில் எழுதப்பட்டிருக்கின்றது. இலங்கையில் ஐந்து ஈஸ்வரங்கள் என்பது வரலாறு அதில் ஒரு ஈஸ்வரமான தொண்டீஸ்வரம் என்பது காலியிலேயே இருந்தது. இதற்கு ஆதாரமாகத்தான் இந்த ஒரு செய்தியும் இருக்கின்றது. காலியில் ஒரு சிவன் ஆலயம் இருந்திருக்கின்றது என்றால் அங்கு இந்துக்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். இலங்கையில் உள்ள இந்துக்கள் எல்லாம் தமிழர்கள் அப்படியாயின் அங்கு தமிழர்கள் இருந்திருக்கிறார்கள். அவ்வாறு தமிழர்களின் மொழியான தமிழிலே எழுதப்பட வேண்டும் என சீனர்கள் நினைக்கும் அளவுக்கு அங்கு தமிழர்களின் ஆதிக்கம் இருந்திருக்கின்றது.

ஆனால் இப்போது நாங்கள் வடக்கு கிழக்கில் கூட நிம்மதியாக வாழ முடியாத நிலைமையில் இருக்கின்றோம். இவற்றையெல்லாம் அரசு உணர்ந்து கொள்ள வேண்டும் இவ்வாறு வளமும் பெருமையும் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு இனம் இந்த நாட்டிலே சுய கௌரவத்தோடு வாழக் கூடியதான ஏற்பாடுகளை அரசு செய்து கொடுக்க வேண்டும் என்கின்ற அந்த எண்ணம் அரசுக்கு இருக்க வேண்டும். இந்த செய்தியை வைத்துக் கொண்டு தற்போது இருக்கின்ற இந்த நல்லாட்சியில் இருந்து பெரிய கட்சிகள் சேர்ந்து தமிழர்களுக்கு உரிமையைக் கொடுக்கின்ற ஒரு செயற்பாட்டுக்கு வந்திருக்கின்றது.

ஆனால் அதற்குள் மக்களால் தோற்கடிக்கப்பட்டவர்கள் சிறு சிறு குழப்பங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். நம்மவர்கள் சிலரும் தலைமையை மாற்ற வேண்டும் என்கின்ற குழப்பத்தை ஏற்படுத்தியவர்களாக இருக்கின்றார்கள். இவ்வாறான நிலைமையில் தமிழ் மக்களின் உரிமைகள் அங்கீகரிக்கும் வகையிலான அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

அப்போதுதான் சமாதானமான ஒரு நிலைக்கு வருவோம். எனவே இந்த சமாதான நிலைமையைக் காப்பற்ற வேண்டியது மக்கள் அனைவரதும் பொறுப்பு என்பதை மறந்துவிடக் கூடாது என்றார். (ஐ-101)

# கந்தூரி உணவு விசமாகியமைக்கு ஒரு வகை பக்றீரியாவே காரணம்

கொழும்பு, ஏப். 14

அம்பாறை மாவட்டம் இறக்காமம் பிரதேசத்தில் இஸ்லாமிய வழிபாட்டு தலமொன்றில் வழங்கப்பட்ட கந்தூரி உணவு விசமடைந்தமைக்கு ஒரு வகை பக்றீரியாவே காரணம் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இறக்காமம் பிரதேசத்திலுள்ள வாங்காமம் பள்ளிவாசலில் சென்ற வாரம் நடைபெற்ற சமய நிகழ்வின்போது மாட்டிறைச்சி கலந்த சோறு கந்தூரியாக வழங்கப்பட்டிருந்தது.

இதனை உட்கொண்ட பெண்கள் , குழந்தைகள் உட்பட ஆயிரத்துக்கும் மேற்பட்ட உள்ளூர் மற்றும் அயல் பிரதேசவாசிகள் நோயுற்ற நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

இரு பெண்கள் உட்பட மூவர் உயிரிழந்தனர். தலையிடி ,மயக்கம் , வாந்தி மற்றும் வயிற்றோட்டம் போன்ற அறிகுறிகள் இவர்களிடம் காணப்பட்ட நிலையில் உணவு நஞ்சானதே இதற்குக் காரணம் என வைத்தியர்களினால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸாரால் பள்ளிவாசல் நிர்வாகம், சமையல் ஆள்கள் மற்றும் சமையலுக்கு உதவி ஒத்தாசை வழங்கியவர்கள் உள்ளிட்ட 25இற்கும் மேற்பட்டவர்களிடமிருந்து வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன. சமையல்காரர் இருவர் கைதாகி நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (த-10)

## கண்ணீர் அஞ்சலி



எமது பொருளாதார சமூக அபிவிருத்தி நிறுவன (ESDO) நிர்வாக உறுப்பினர்

**க.சிவகுமார்**

அவர்களின் அன்புத்தாயார்


**திருமதி**

**செல்லமணி கனகசபை**

அவர்கள் 12.04.2017 புதன் கிழமை காலமானதையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்

தலைவர், செயலாளர், நிர்வாக உறுப்பினர்கள்,
ESDO நிறுவனம், தம்பலகாமம்.

## மரண அறிவித்தல்



**இளையதம்பி சபாரட்ணம்**

**(ஓய்வுநிலை ஊழியர் - யாழ்.தபால்நிலையம்)**

திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் பணிக்கர்வளவு, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும், தற்போது கனடா(Canada Toronto) வில் வசித்தவருமான இளையதம்பி சபாரட்ணம் (யாழ்.தபால்நிலைய ஓய்வுநிலைய ஊழியர்)12.04.2017 புதன்கிழமை திருநெல்வேலியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், கந்தையா - அழகம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும், சறோஜினிதேவியின் அன்புக் கணவரும், பவானி (Canada), குமுதினி (Canada), காலஞ்சென்ற சாந்தினி (Canada) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ராமச்சந்திரநாதன் (Canada) மற்றும் இராசலிங்கம் (Canada) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் ஏகாயதாட்சி, யோகாம்பிகை, கதிரமலைநாதன் ( முருகன் - நல்லூர் ப.நோ.கூ.ச. எரிபொருள் நிரப்பு நிலையம்), பத்மராஜன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், இந்திராணி, குலசிங்கம் , காலஞ்சென்ற யோகேஸ்வரன் மற்றும் இராசலெட்சுமி ஆகியோரின் அன்பு சகலனும், சர்மிலா, அஜிதன், ரூபேசன், மகிஷா, சுதர்சன், துவாரகன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.04.2017 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் பலாலிவீதி, திருநெல்வேலி வடக்கு (றோயல் மிருக வைத்தியசாலை முன்பாக) அவரது மைத்துனர் கதிரமலைநாதன் (முருகன்) அவரது இல்லத்தில் நடைபெற்றுதகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

கு.வெங்கடேஸ் - 077 382 5654,
க.மயூரன் - 077 044 7103, 021 222 1996,
குமுதினி - 0019 0579 35602

# போதையில் குற்றம் புரிந்தோரே அதிகம் சிறையில்

சிறைகளில் வாடுவோரில் கூடுதலானோர் போதையால் உந்தப்பட்டு குற்றச்செயல் புரிந்தவர்களாகவே உள்ளார்கள்.

இவ்வாறு கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் துறைத் தலைவரும் மூத்த விரிவுரையாளர் எம்.ரி.எம். றிஷ்வி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மது, போதை வஸ்த்துக்கள் பாவனை என்பது இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ, பௌத்தம் சமூகத்துக்கு ஒரு சாபக்கேடாக உள்ளது. மது தனிமனித, குடும்ப, சமுக சீர்கேடுகளுக்கு அடிப்படை எனக் குறிப்பிட்ட அவர், ஆன்மிகம், அறிவு, ஒழுக்கம், பண்பாடு, ஆளுமை என அனைத்தையும் இழக்கச் செய்துவிடும் விடயமாக உள்ளது.

இந்த உலகம் அழிந்துபோகும் காலம் மிக நெருங்கி விட்டது. அதற்கான அடையாளங்களாக அறிவு குறைவதும், அறியாமை அதிகரிப்பதும், மதுபாவனை மேலோங்குவதும், விபச்சாரம் பகிங்கரமாகவே இடம்பெறுவதுமே காரணமாக உள்ளது. மதுபோதைப் பாவனை உள்ளத்துக்கும், உடலுக்கும் உணர்வுகளுக்கும் தீங்குதரக் கூடியவை என்பது உளவியல் மற்றும் விஞ்ஞானபூர்வ ஆதாரங்கள் ஆகும். என்றார். (ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைப்பெருமன்றம் - புங்குடுதீவு

# அம்பலவாணர் கலையரங்கம்

## திறப்புவிழா



### காலை அமர்வு

**இடம்: அம்பலவாணர் கலையரங்கம்**
**காலம்: 15.04.2017 சனிக்கிழமை, முற்பகல் 9.00 மணி**

**தலைவர்:**

**திரு.இ.இளங்கோவன்** அவர்கள்
(ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாணசபை)

**கௌரவவிருந்தினர்**

**கௌரவ த.குருகுலராசா** அவர்கள் (கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் - வடக்குமாகாண சபை)
**கௌரவ பொ.ஐங்கரநேசன்** அவர்கள்
(விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல், நீர் வழங்கல், நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சர், வடக்கு மாகாண சபை)

**பிரதம விருந்தினர்**

**மாண்புமிகு நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன்** அவர்கள்
(முதலமைச்சர், வடக்கு மாகாண சபை)
**உயர்திரு A.பத்திநாதன்** அவர்கள்
(பிரதம செயலாளர், வடக்கு மாகாணசபை)
**உயர்திரு நா. வேதநாயகன்** அவர்கள்
(அரச அதிபர், யாழ்.மாவட்டம்)

**சிறப்பு விருந்தினர்கள்**

திரு S.ஜயசுந்தர அவர்கள்
(A.S.P ஊர்காவற்றுறை, வட்டுக்கோட்டை)

Dr.S.சண்முகலிங்கம் அவர்கள்
(லண்டன் பிரதிநிதி)
திரு இளையதம்பி ஸ்ரீதாஸ் அவர்கள்
(சுவிற்சர்லாந்து)

அருள்நிதி சி.முருகானந்தவேல் அவர்கள்
(மனவளக்கலைப் பேராசிரியர்)
திரு கோ.மதிவாணன் (கோபு) அவர்கள்
(பிரான்ஸ் பிரதிநிதி)

### நிகழ்ச்சி நிரல்

★ விருந்தினர் அழைத்து வரல்
★ வரவேற்பு நடனம்
சுப்பிரமணிய மகளிர் வித்தியாலய மாணவிகள்
கமலாம்பிகை மகாவித்தியாலய மாணவர்கள்
★ மங்கல விளக்கேற்றல்
★ இறைவணக்கம்
★ சுற்றுமதில் கையளிப்பு நிகழ்வு
திருமதி விஜயலெட்சுமி கனகலிங்கம் அவர்கள்
★ கொடியேற்றல் நிகழ்வு
★ உருவச்சிலைகள் திறந்து வைத்தல்
பெரியவாணர் உருவச்சிலை திறந்து வைத்தல்
திரு.ஏ.பத்திநாதன் அவர்கள்
சின்னவாணர் உருவச்சிலை திறந்து வைத்தல்
திரு.நா.வேதநாயகன் அவர்கள்
★ கணினிக் கல்விக்கூடம் திறந்து வைத்தல்
திரு.சேனாதிராசா சுந்தரலிங்கம் அவர்கள் (கனடா)
★ தையல் பயிற்சி நிலையம் திறந்து வைத்தல்
கௌரவ த.குருகுலராசா அவர்கள்
★ சிறுவர் பூங்கா திறந்து வைத்தல்
கௌரவ பொ.ஐங்கரநேசன் அவர்கள்
★ விருந்தினர் விடுதி திறந்து வைத்தல்
திரு.சேனாதிராசா சுந்தரலிங்கம் அவர்கள்
★ கலையரங்கம் திறந்து வைத்தல்
மாண்புமிகு நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் அவர்கள்

**இலங்கை இந்திய பிரபல நாதஸ்வர, தவில் கலைஞர்களின்**
**மங்கள வாத்திய இசை**

★ நாதஸ்வர வித்துவான்கள்
அளவையூர் M.B. பாலகிருஸ்ணன் குழுவினர்
இணுவையூர் K.R. சுந்தரமூர்த்தி குழுவினர்
அளவையூர் S.S. சிதம்பரநாதன் குழுவினர்
கோண்டாவில் V.K.பஞ்சமூர்த்தி குழுவினர்
கோண்டாவில் K.P.குமரன் குழுவினர்
நல்லூர் S.பாலமுருகன் குழுவினர்
நல்லூர் P.S.ரஜீந்திரன் குழுவினர்
இணுவையூர் N.R.K.மாக்கையா குழுவினர்
அளவையூர் திரு. கேதீஸ்வரன்
அளவையூர் திரு.சுதந்திரன்
நெல்லியடி திரு.இரத்தினம்
தொண்டைமானாறு V.மயூரன்
(இன்னும் பல பிரபல நாதஸ்வர வித்துவான்கள் கலந்து சிறப்பிப்பார்கள்)

**தவில் வித்துவான்கள்**
இணுவையூர் K.R. புண்ணியமூர்த்தி
இணுவையூர் N.R.S. ரவீந்திரன் குழுவினர்
இணுவையூர் N.R.S. சுதாகரன் குழுவினர்
பருத்தித்துறை திரு.சதீஸ்குமார்(குட்டி)
தொண்டமானாறு திரு.துளசி
திரு.தெட்சணா
(இன்னும் பல பிரபல தவில் வித்துவான்கள் கலந்து சிறப்பிப்பார்கள்)

★ வரவேற்புரை - திரு நல்லையா தர்மபாலன் அவர்கள் (முன்னாள் அதிபர், புங்குடுதீவு மகா வித்தியாலயம்)
★ ஆசியுரை -
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்
★ பிரமச்சாரி ஜாக்ரத சைதன்யா சுவாமிகள்-சின்மாமிசன்
அருட்திரு.சின்னத்துரை லியோ ஆம்ஸ்ரோங் அடிகளார். (முன்னாள் புங்குடுதீவு பங்குத்தந்தை)
★ தலைமையுரை -
திரு.இ.இளங்கோவன் அவர்கள்
★ செயலாளர் உரை-
திரு.ச.சதாசிவம் அவர்கள்
(முன்னாள் அதிபர் புங்குடுதீவு கணேச மகா வித்தியாலயம்)
★ பொருளாளர் உரை -
திரு.சே.சுந்தரலிங்கம் (கட்டிடக்குழுப் பொருளாளர்)
★ சிறப்பு விருந்தினர் உரை
★ கௌரவ விருந்தினர் உரை
★ பிரதம விருந்தினர் உரை
MSS பவுண்டேஷன் வழங்கும் புலமைப்பரிசில்
★ திட்டம் அறிமுகம்
திரு.சின்னத்தம்பி கனகலிங்கம் அவர்கள் (கனடா)
★ ஒப்பந்தகாரர் மதிப்பளிப்பு
திரு.துவாரகன் அவர்கள்
★ நன்கொடையாளர் மதிப்பளிப்பு நிகழ்வு
★ கலையரங்க திறப்புவிழா மலர் வெளியீடு
வெளியீட்டுரை
★ திரு.நல்லதம்பி பேரின்பநாதன் அவர்கள் (முன்னாள் பொருளியல் துறை தலைவர், யாழ். பல்கலைக்கழகம்)

நன்றியுரை
★ திரு.தெ.வேழவேந்தன் அவர்கள்

### 15.04.2017 சனிக்கிழமை மாலை அமர்வு

காலம் : 15.04.2017 பிற்பல் 3.00 மணி
தலைவர் : பேராசிரியர் கா.குகபாலன் அவர்கள்

**பிரதமவிருந்தினர்**
கௌரவ சி.வி.கே.சிவஞானம் அவர்கள்
(அவைத்தலைவர், வட.மாகாண சபை)

**கௌரவ விருந்தினர்**
வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை அவர்கள்
(முன்னாள் துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)

**சிறப்பு விருந்தினர்கள்**
திரு.எஸ்.ஜெயகாந் அவர்கள்
(செயலாளர், பிரதேசசெயலகம், வேலணை)
திரு.அ.குருநாதன் அவர்கள்
(பிரதேச சபைச் செயலாளர், வேலணை)
அருள்நிதி.த.குழந்தைவேலு அவர்கள்
(அறிவுத்திருக்கோயில், யாழ்ப்பாணம்)
திரு.தம்பிஐயா தேவதாஸ் அவர்கள்
(ஓய்வு நிலை அதிபர்)
செல்வி பொ.ஜமுனாதேவி அவர்கள்
(அறங்காவலர், வட. இலங்கை சர்வோதயம்)

**நிகழ்ச்சி நிரல்**
★ வரவேற்புரை -
திரு.S.K.சண்முகலிங்கம் அவர்கள்
★ மங்கள விளக்கேற்றல்
★ தலைமை உரை
நான்காம், ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கு புலமைப்பரிசில் நூல்கள் வழங்கல்
(திரு.கோபாலபிள்ளை அருள்தீபன் அவர்கள்)
ஸ்ரீ கணேச மகா வித்தியாலய மாணவர்கள் வழங்கும்
★ கோலாட்டம்
ஸ்ரீ இராஜேஸ்வரி வித்தியாலய மாணவர்கள் வழங்கும்
★ குழு நடனம்
★ **சிறப்பு விருந்தினர் உரை**
சித்தி விநாயகர் மகா வித்தியாலய மாணவர்கள் வழங்கும்
★ கரகாட்டம் காவடி ஆட்டம்
★ கௌரவ விருந்தினர் உரை
★ பிரதம விருந்தினர் உரை
கொக்குவில் கலாபவன மாணவர்கள் வழங்கும்
★ நாட்டிய அளிக்கை
★ நட்டுவாங்கம் - கலாகீர்த்தி திருமதி சாந்தினி
★ சிவநேசன்
பாட்டு- திருமதி சுகன்யா அரவிந்தன்
★ மிருதங்கம் - நல்லை க.கண்ணதாஸ்
★ வயலின் - திரு.அ.ஜெயராமன்

ஸ்ரீ தேவி வில்லிசை
கலைமாமணி, டாக்டர் S.S.குருஜி அவர்களின்
தலைமையில்
"பக்த அனசூயா"

**அணிசேர் கலைஞர்கள்**
பக்கப்பாட்டு - வித்துவான் S.லோகநாதன்
ஹார்மோனியம் - இசைக்கலைமணி ந.செல்வச்சந்திரன்
மிருதங்கம் - லயஞானவினோதன் சதா.வேல்மாறன்
உடுக்கு - கலாவித்தகர் ஞ.பிரபாகரசர்மா
கடம் - வித்துவான் ஜெயசாந்

உலகப்புகழ் நாதஸ்வர இளவரசன் கோண்டாவில் V.K.பஞ்சமூர்த்தி குமரன் குழுவினர்,
நாதசங்கமம்
★ நன்றியுரை
திரு.ஞானதீபன் கிறிஸ்ரியுவராஜ்

### இரண்டாம் நாள் - காலை அமர்வு

காலம் : 16.04.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி
தலைமை : சட்டத்தரணி மு.நேமிநாதன் அவர்கள்
(பிரித்தானியா)

**பிரதமவிருந்தினர்**
கௌரவ மாவை. சோ.சேனாதிராசா அவர்கள்
(தலைவர், தமிழரசுக்கட்சி, பாராளுமன்ற உறுப்பினர், யாழ்.மாவட்டம்)

**கௌரவ விருந்தினர்**
கௌரவ சி.சிறீதரன் அவர்கள்
(பாராளுமன்ற உறுப்பினர், யாழ்மாவட்டம்)

கௌரவ ஈ.சரவணபவன் அவர்கள்
(பாராளுமன்ற உறுப்பினர், யாழ் மாவட்டம்)

கௌரவ விந்தன் கனகரெட்ணம் அவர்கள்
(உறுப்பினர், வடக்கு மாகாணசபை)

கௌரவ பா.கஜதீபன் அவர்கள்
(உறுப்பினர், வடக்கு மாகாணசபை)

சிறப்பு விருந்தினர்
திரு.மா.தியாகராசா அவர்கள்
(சட்டத்தரணி)
திரு.மா.இளம்பிறையன் அவர்கள்
(விரிவுரையாளர், உடற்கல்விப்பிரிவு, யாழ்.பல்கலைக்கழகம்)
Dr.யோகராஜா யதுநந்தன் அவர்கள்
(D.M.O. ஆதார வைத்தியசாலை, ஊர்காவற்றுறை)
திரு.சேனாதிராசா சுந்தரலிங்கம் அவர்கள்
திரு.சு.கருணாகரன் அவர்கள்
(தலைவர், புங் - நயினாதீவு ப.நோ.கூ.சங்கம்)
திரு.சி.கருணாமூர்த்தி அவர்கள்
(சுவிற்சர்லாந்து)

**நிகழ்ச்சி நிரல்**
★ மங்கள விளக்கேற்றல்
★ தாயகம் வழங்கும்
★ வரவேற்பு நடனம்

★ **வரவேற்புரை**
திரு.த.இரத்தினராசா அவர்கள் (கனடா)

★ ஆசியுரை
செஞ்சொற்செல்வர், கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்கள்
(தலைவர், துர்க்காதேவஸ்தானம், தெல்லிப்பளை)

★ தலைமையுரை
★ சிறப்பு விருந்தினர் உரை

துரைச்சுவாமி வித்தியாலய மாணவர்கள் வழங்கும்
தனிநடனம்

கமலாம்பிகை வித்தியாலய மாணவர்கள் வழங்கும்
சுளகு நடனம்

அமெரிக்கமிஷன் த.க.வித்தியால்ய மாணவர்கள் வழங்கும் கிராமிய நடனம்
★ கௌரவ விருந்தினர் உரை
★ பிரதம விருந்தினர் உரை

★ நூல் வெளியீடு
பேராசிரியர் கா.குகபாலன் அவர்களினால் எழுதப்பட்ட
தீவகம் : தொன்மையும் மேன்மையும்

★ வெளியிட்டு வைப்பவர்
பேராசிரியர் வேல்நம்பி அவர்கள்
(பீடாதிபதி, முகாமைத்துவ, வணிகபீடம், யாழ்.பல்கலைக்கழகம்)
★ ஆய்வுரை, சி.சிவலிங்கராசா முன்னாள் தமிழ்துறை தலைவர்
★ முதற்பிரதி வழங்கல்
★ சிறப்புப் பிரதி வழங்கல்

யாழ்.ஏழிசை மிருதங்க நர்த்தனாலய மாணவர்கள் வழங்கும்
"நாட்டிய அர்ப்பணம்"

நட்டுவாங்கம் - திருமதி பாலினி கண்ணதாஸ்
பாட்டு - திரு.தவநாதன் றொபேட்
மிருதங்கம் - நல்லை க.கண்ணதாஸ்
வயலின் - திரு.அ.ஜெயராமன்

சிறுப்பிட்டியூர்
கலைஞானமாமணி சத்தியதாஸ் குழுவினர் வழங்கும்
வில்லிசை நிகழ்ச்சி
தீர்க்க சுமங்கலி

★ நன்றியுரை
செல்வி கிருபாஜினி இராசரெத்தினம்

### இரண்டாம் நாள் - மாலை அமர்வு

காலம் - 16.04.2017 பிற்பகல் 3.00 மணி

தலைவர் - திரு.சு.நித்தியானந்தன் அவர்கள்
(தலைவர், கலைப்பெருமன்றம்)

**பிரதம விருந்தினர்கள்:**
கௌரவ திருமதி விஜயகலா மகேஸ்வரன் அவர்கள்
(சிறுவர், மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர்)

உயர்திரு சிறீ.ஏ.நடராஜன் அவர்கள்
(உதவி இந்தியத்தூதுவர், இந்தியத் தூதரகம்)

**கௌரவ விருந்தினர்**
திரு.S.சுந்தரசிவம் அவர்கள்
(கல்விப் பணிப்பாளர், வேலணை கல்வி வலயம்)

**சிறப்பு விருந்தினர்கள்**
திரு.வீ.கணேசராசா அவர்கள்
(பிரதிக்கல்விப் பணிப்பாளர், வேலணை கல்வி வலயம்)
திருமதி செல்வரத்தினம் வனஜா அவர்கள் (கலாசாரப் பணிப்பாளர், வடக்கு மாகாணசபை)
திரு.கனகரத்தினம் அவர்கள் (அதிபர், புங்குடுதீவு மகாவித்தியாலயம்)
திரு.சுப்பையா சஸ்பாநிதி அவர்கள் (பிரான்ஸ்)
திரு.சுப்பையா சஸ்பாநிதி அவர்கள் (பிரான்ஸ்)
திரு. செல்லையா மகேந்திரன் அவர்கள் (பிரபல வர்த்தகர் - கொழும்பு)

**நிகழ்ச்சி நிரல்**
★ மங்கல விளக்கேற்றல்
★ மங்கல வாத்திய இசை
★ சாவகச்சேரி சித்தார்த்தன் குழுவினர்
அளவையூர் T.உதயசங்கர் குழுவினர்

★ வரவேற்புரை
Dr. கணேச ஸ்ரீதரன் அவர்கள்

★ தலைமையுரை
கலையரங்க எதிர்காலச் செயற்றிட்டங்கள் ஓர் அறிமுகம்
திரு.நல்லையா தர்மபாலன் அவர்கள் (முன்னாள் அதிபர், புங்குடுதீவு ம.வி)

★ சிறப்பு விருந்தினர் உரை
மகா வித்தியாலய மாணவர்கள் வழங்கும்
விநாயக கௌத்தம், தனிநடனம்
றோமன் கத்தோலிக்க வித்தியாலய மாணவிகள் வழங்கும்
தனிநடனம்

வட இலங்கை சர்வோதயம் வழங்கும்
வில்லுப்பாட்டு

★ கௌரவ விருந்தினர் உரை
★ பிரதம விருந்தினர் உரை
★ பரிசில் வழங்கல் நிகழ்வு

நல்லை க.கண்ணதாஸ் தயாரித்து வழங்கும்
நாதலய வாத்திய இசைச் சமர்ப்பணம்
பாட்டு - திரு.தவநாதன் றொபேட்
புல்லாங்குழல் - திரு.இரா.வசந்தன்
நாதஸ்வரம் - திரு.எம்.பிரேமானந்தன்
கீபோட் - திரு.க.ஸ்ரீமுருகன்
மிருதங்கம் : நல்லை க.கண்ணதாஸ்
தவில் : திரு.இரா. ஆனந்தகணேசன்
தபேலா, கெஞ்சிரா :- திரு.இரா சிவராமன்
முகர்சிங் : திரு.ந.சதீஸ்குமார

ஈழத்து முன்னணி வாத்திய இசைக்கலைஞர்களுடன் இளைய மூத்த பிரபல பாடகர்கள் இணைந்து இசையமைப்பாளர் ஸ்ரீ குகனின் இசையமைப்பில் வழங்கும்
ஸப்தஸ்வரா இசைக்குழுவினரின்
இன்னிசை வார்ப்புக்கள்

இளம்பாடல் நட்சத்திரங்கள்
ஆயினி, மதிவாணன், அஸ்விதா, மதிவாணன், S.G.S. கோகுலன், S.சுலக்சன், தயா, றெஜீஸ், ராஜேந்திரன், மேரி, தர்க்ஷினி மற்றும் பல கலைஞர்கள்.

**நன்றியுரை**
திருமதி சுலோசனாம்பிகை தனபாலன்

**நிகழ்ச்சித் தொகுப்பு**
மாறன்

**விழாக்குழுவினர்,**
**அம்பலவாணர் கலையரங்கம்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர்களே!!!

## ஏப்ரல் இதழ் வெளிவந்துவிட்டது

## தரம் - 5

**சிங்கள**
**மொழி**
**பெயர்ப்பு**
**வினாத்தாள்கள்**
**(1 + 11)**

ஆசிரியர் உதயந்தி அமரதுங்க
(மௌபிம சிங்கள பத்திரிகை)

திருத்தல் சேவையுடன்

Free
கவியரங்கு கையேடு
போட்டிப்பரீட்சை கையேடு




- மேலிருந்து ஒரு மடல்
- தலைமுறை இடைவெளி
- நட்சத்திர இல்லத்தரசி
- வரலாற்று ஆளுமை
- அதிசய உண்மை
- கலை வளர்ப்போம்
- இல்லறம் இனித்திட
- குட்டீஸ் மூலையும் மூளையும்
- இலக்கிய முத்து

* இலக்கிய முத்து
* நட்சத்திர ஜோக்
* தரம் 5 பெறுபேறுகள்

- வாருங்கள் பேசலாம் வாழ்க்கை பற்றி!
- ஆசையிருந்தால் நீந்தி வா

**குடும்ப முன்னேற்றத்துக்கான அனைத்து ஆக்கங்களும் ஒரே சஞ்சிகையில்!**

பிரதிகளைப் பெற்றுக்கொள்ள:- கொழும்பு- 071- 8628372 வடக்கு: 077-6569617/071-8628369, கிழக்கு: 071-8724057, வவுனியா: 077-2772726, மலையகம்: 071 - 8724056, ஏனைய மாவட்டங்கள்: 071 - 4114990

உதயன், சுடர்ஒளி முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி அளவீடு ஆரம்பித்த பின்பே போராட்டம் தொடர்பாகத் தீர்மானம்

## கொத்தியாகும்பம் மக்கள் தெரிவிப்பு



முல்லைத்தீவு, ஏப்.14
காணிகளை அளவீடு செய்யும் பணிகள் ஆரம்பமாகட்டும். அதன் பின்னரே போராட்டத்தை முடித்துக் கொள்வது தொடர்பில் தீர்மானம் எடுப்போம். -
இவ்வாறு கொத்தியாகும்பம் மக்கள் தெரிவித்தனர்.
தமது காணிகளுக்கு காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்து கொத்தியாகும்பம் மக்கள் கடந்த 14 நாள்களாகப் போராட்டம் நடத்துகின்றனர்.
"2010ஆம் ஆண்டு எழுந்த காணி பிரச்சினை இதுவரை தீர்க்கப்படாது இழுத்தடிக்கப்பட்டது. அதனாலேயே நாம் போராட்டம் நடத்தும் முடிவை எடுத்தோம். கொத்தியாகும்பத்தைச் சேர்ந்த 77 குடும்பங்களுக்கு காணிகள் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது என்று அறிந்தோம். காணிகள் அளக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். அத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் காணிகள் அற்ற முஸ்லிம் மக்களுக்கு காணிகள் வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேணடும். அதன்பின்னரே எமது தொடர் அறவழிப் போராட்டத்தை முடித்துக் கொள்வது தொடர்பாக தீர்மானிப்போம்." என்று போராட்டம் நடத்தும் மக்கள் தெரிவித்தனர். (ற - 7)

# ஆளணிகள் அனுமதிக்கப்பட்டும் நிரப்பப்படாதுள்ள வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம், ஏப்.14
அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளுக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் (MSD) ஆளணி அனுமதித்த போதும் அதற்கான வெற்றிடங்கள் முழு மைப்படுத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.
2013 ஆம் ஆண்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் வடக்கில் உள்ள 34 உள்ளூராட்சி சபைகளுக்கும் அந்தந்த சபைகளின் ஆளணி தேவைக்கேற்ப ஆளணிகளை அங்கிகரித்தது.
பிரதேச சபை, நகரசபை, மாநகர சபைகளில் உள்வாரியாகவோ அன்றி வெளிவாரியாகவோ சில உள்ளூராட்சி சபைகளில் அங்கீகரிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்படாத ஆளணிகள் நிரப்பப்படாத நிலைமை காணப்படுகின்றது.
காரியாலய காரிய சகா, வேலை வெளிக்கள தொழிலாளி, காவலாளி, ஆயுள்வேத பரிசாரகர் நுலக பரிசாரகர், மயான தொழிலாளி சுகாதாரத் தொழிலாளி போன்ற 12க்கும் மேற்பட்ட பதவிப் பெயர்களைக் கொண்ட பதவி ஆளணிகள் உள்ளூராட்சி சபைகளில் ஆளணி அங்கீகரிக்கப்பட்ட நிலையில் பல வருடங்களாக நிரப்பட்டாது வெற்றிடமாகவே உள்ளன.
இதேவேளை அட்டவணைப்படுத்தப்படாத பதவி ஆளணிகள் அங்கீகரிக்கப்பட்ட நிலையிலும் பல வருடங்களாக நிரப்பப்படாதுள்ள ஆளணி விவரங்களை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள் ஒவ்வொரு சபை செயலாளரிடம். இருந்தும் விவரங்களைப் பெற கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.
(ற -50)

# காணி கிடைத்தாலே எமக்குப் புத்தாண்டு

## முள்ளிக்குளத்தில் போராட்டம் நடத்தும் மக்கள் ஆதங்கம்

மன்னார், ஏப்.14
எமது காணிகள் எமக்கு கிடைக்கும் வரை எமக்கு புது வருடமும் இல்லை, உயிர்ப்பு ஞாயிறும் இல்லை இவ்வாறு மன்னார் முள்ளிக்குளத்தில் போரட்டம் நடத்தும் மக்கள் ஆதங்கத்துடன் தெரிவித்தனர்.
தமது பூர்வீக நிலங்களில் நிலை கொண்டுள்ள கடற்படையினரை வெளியேற்றக் கோரி முசலி பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட முள்ளிக்குளம் கிராம மக்கள் கடந்த 22ஆம் திகதிமுதல் தொடர் போராட்டம் நடத்துகின்றனர். தேசிய மட்டத்தில் உள்ள முஸ்லீம் அமைப்புக்களின் பிரதிநிதிகள் நேற்று அவர்களைச் சந்தித்து கலந்துரையாடி தமது ஆதரவைத் தெரிவித்தனர்.
"புதுவருடத்தை கொண்டாடி மகிழ்வாக இருப்பதற்கு எங்களுக்கு மனம் இடம் கொடுக்கவில்லை.எங்களுக்கு வேண்டியது எல்லாம் எங்களுடைய பூர்வீகக் காணிகள். எமது சொந்த நிலம் தான் எமக்கு வேண்டும். அதற்குப் பின்னரே புதுவருடக் கொண்டாட்டங்கள்."-என்றனர்.அதேவேளை, முசலி பிரதேசசெயலாளர் பிரிவின் கீழ் உள்ள மறிச்சுக்கட்டிமுஸ்லிம் மக்கள் நடத்திவரும் போராட்டம் நேற்று 18 ஆவது நாளாகத் தொடர்ந்தது.
தமது பூர்வீகமான குடியிருப்பு நிலங்களையும் விவசாயக் காணிகளையும், மேய்ச்சல் தரைகளையும், மேட்டு நிலக்காணிகளையும் வர்த்தமானி அறிவித்தல் மூலம் அபகரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அவர்ககள் குற்றஞ்சாட்டுகின்றனர். புதிய வர்த்தமானி அறிவித்தலை உடனடியாக அரச தலைவர் இரத்துச் செய்ய வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற - 21,12)

# கரை எழில் நூல் தொடர்பில் அறிக்கை

கிளிநொச்சி, ஏப்.14
கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட கலாசார விழாவில் வெளியிடப்பட்ட கரை எழில் 2016 நூலில் கிளிநொச்சியும் மலையகத் தமிழர்களும் எனும் தலைப்பில் வெளியான கட்டுரை தொடர்பில் சமூகத்தில் கிளம்பிய எதிர்ப்புக் காரணமாக கரைச்சிக் கலாசார பேரவை நேற்று வியாழக்கிழமை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.
கலாசாரப் பேரவையின் தலைவரும், பிரதேச செயலாளருமான கோ. நாகேஸ்வரன் ஒப்பம் இட்டு வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது
கரை எழில் 2016இல் கிளிநொச்சியும் மலையகத் தமிழர்களும் எனும் தலைப்பில் வெளியான கட்டுரை அந்தச் சமூகம் கவலையுறும் விதத்தில் இடம் பெற்றுவிட்டது. அதையிட்டுக் கலாசார பேரவை வருத்தமடைகிறது. அதற்கான பொறுப்பையும் ஏற்றுக்கொள்கிறது. எதிர்காலத்தில் இத்தகைய தவறுகள் இடம்பெறாத வண்ணம் கவனத்தில் கொள்கிறது. கலாசார விழாவின் போது வழங்கப்பட்ட 15 பிரதிகளும் திரும்ப பெறப்பட்டு ஒட்டுமொத்த பிரதிகளிலும் சர்ச்சைக்குரிய கட்டுரை நீக்கம் செய்யப்பட்டு வெளியீடு செய்யப்படும் என்பதனையும் அறியத்தருகின்றோம். என்றுள்ளது.
(ற -35)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கிளிநொச்சி

# கறுப்பு நாளாக கடைப்பிடித்து ஆதரவளியுங்கள்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் உருக்கமாகக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.14
எமது உறவுகளை மீட்பதற்காக, அவர்களைக் காணத் துடிக்கும் எமக்காக வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த அனைத்து மக்களும் புதுவருடத்தைக் கறுப்பு நாளாகக் கடைப்பிடியுங்கள். அரசுக்கு அழுத்தம் கொடுங்கள். நீங்கள் எமக்குத் தரும் ஆதரவு உறவுகள் எமக்குக் கிடைப்பார்கள் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தும்.
இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள்.
காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வெளிப்படுத்தலையும், விடுவிப்பையும் வலியுறுத்தி அவர்களின் உறவினர்கள் கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்பாகத் தொடர் அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்களே இவ்வாறு உருக்கமாக வேண்டுகோள் விடுத்தனர்.
காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் வடக்கின் 4 மாவட்டங்களிலும், கிழக்கில் ஒரு மாவட்டத்திலும் தொடர் போராட்டங்கள் நடத்தப்படுகின்றன.
கிளிநொச்சியில் நேற்று 53ஆவது நாளாகவும், வவுனியாவில் 49ஆவது நாளாகவும், முல்லைத்தீவில் 37 ஆவது நாளாகவும், யாழ்ப்பாணம் மருதங்கேணியில் 30 ஆவது நாளாகவும், திருகோணமலையில் 40 ஆவது நாளாகவும் போராட்டங்கள் தொடர்கின்றன.
"இன்று இரு சிறப்பு தினங்கள். ஒன்று இந்துக்களுக்கு மற்றையது கிறிஸ்தவர்களுக்கு. இந்தத் தினங்களில் எங்கள் வேண்டுதல் ஒன்றுதான். காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகள் வர வேண்டும். இன்று எமக்குக் கரிநாள், அனைவரும் கறுப்பு ஆடை அணிந்து, கறுப்புப் பட்டி கட்டி எதிர்ப்பைத் தெரிவிக்கப் போகின்றோம். எமக்கான தீர்வு இழுத்தடிக்கப்படுகின்றது. நாம் பெரும் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளோம்" - என்று மருதங்கேணியில் போராட்டம் நடத்தும் மக்கள் தெரிவித்தனர்.
"மனதில் மகிழ்ச்சி இல்லை. புதுவருடமும் எங்களுக்கில்லை. காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகள் வர வேண்டும். அவர்களுக்கு என்ன நடந்தது என்ற சரியான தகவல் எமக்குத் தெரிய வேண்டும். இன்று நாம் கறுப்பு ஆடை அணிந்து எதிர்ப்புத் தெரிவிப்போம். எங்கள் தவிப்பை இந்த அரசு புரிந்து கொள்ளாது இழுத்தடிக்கின்றது." என்று முல்லைத்தீவில் போராட்டம் நடத்தும் மக்கள் தெரிவித்தனர்.
"புத்தாண்டைக் கொண்டாடும் மனநிலையில் நாம் இல்லை. நாளையும் (இன்று) நாம் எங்கள் குடும்பங்களுடன் போராட்டத்தில் பங்கேறபோம். இன்று பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கந்தசுவாமி கோயிலில் இருந்து ஆரம்பமாகி பிரதான வீதி வழியாக பேரணி மீண்டும் கோயிலை அடையும். எங்கள் போராட்டத்துக்கு மக்கள் ஆதரவு வழங்க வேண்டும் என்று வேண்டுகின்றோம்." - என்று வவுனியாவில் போராட்டம் நடத்தும் மக்கள் தெரிவித்தனர்.
"கறுப்பு ஆடை அணிந்தும், கறுப்புப் பட்டி அணிந்துமே இந்த நாளைக் கடைப்பிடிக்கின்றோம். தமிழ் உறவுகளை வேண்டுகின்றோம். எம்முடன் இணைந்து எமக்கு வலுச் சேருங்கள். 53 நாள்கள் கடந்துள்ளன. எம்மை யாரும் திரும்பிப் பார்க்கவில்லை. வெறும் காட்சிப் பொருளாகவே பார்க்கின்றனர். எங்கள் பிரச்சினையைத் தீர்க்க நினைக்கின்றார்கள் இல்லை. எம்மை எவரும் மனிதர்களாக மதிக்கின்றார்களில்லை." என்று கிளிநொச்சியில் தொடர் போராட்டம் நடத்தும் மக்கள் கண்ணீருடன் தெரிவித்தனர். (ற -21,12,7,6,26)

## மண்ணவர்க்கு மீட்பளித்த மகிமை சேர் புனித நாள்

கண் கூச்செறியும் வெயில் தகிக்கும் நண்பகல் வேளை அது ஒரு கரடு முரடான மலைப்பாதை. குற்றவாளிகளை வதைத்துக் கொல்லும் மண்டையோடு எனப்படும் கொல்கொதா நோக்கி ஒரு கும்பல் முன்னேறுகிறது. வீசும் கசைவால் ஓசையும் பேசும் தூஷண வசை மொழிக் கூச்சலும் வானைப் பிளக்க மாசறியா மாபரன் இயேசுவின் தோளில் பாரச்சிலுவை கனக்க, தூசும் குருதியும் தோய்ந்த அன்புருவான தூய செம்மறி விழுந்தெழுந்து மீட்புத் திட்டத்தை நிறைவேற்ற மூசும் சுவாச இளைப்புடன் பலிகளம் நோக்கி விரைகின்றது.
ஆடைகள் அகற்றி சிலுவை மேடையில் வீழ்த்தி, கால் கரம் ஆணிகள் துளைத்திட அறைந்து பாதகக் கள்வர் இருபோர்க்குச் சமமாய் காதகர் யூதர் களிப்புடன் சிலுவையை உயர்த்தியே உனை நீகாத்துக்கொள் என்றார். திருவுடல் சிதைந்து பெருந் துயர் கண்டும் தெள்ளிய அன்பின் அகராதியிலிருந்து துள்ளியே வந்தது தெரியாமற் செய்பிழை மன்னித்தருளும்
மூவுலகாரும் மன்னவன் இயேசு மும்மணி நேரம் சிலுவையில் தொங்கி மீட்பின் தாகத்தை உணர்த்தி தந்தையின் கையில் தன்னுயிர் ஒப்படைத்தார். இந்தத் தியாகப் பலியை நினைவு கூர்ந்து அஞ்சளித்து இயேசுவின் போதனைகள் நெறிமுறைகள் மனித விழுமி யங்களை வாழ் வாக்க உறுதிபூணும் நாளே புனித வெள்ளியாகும்.
இந்த சிவந்த சிலுவைப் பயணம் ஏதோ பொது வாழ்வின் இறுதியில் மட்டும் வரவில்லை. இயேசுவுக்கு கருவறையிலிருந்து கல்லறை வரை அமைந்திருந்தது. பாரமான சிலுவையும் தூரமான கொல்கொதாவும் அவருக்கு நெருக்கடியைத் தரவில்லை. இலட்சியத்தின் நிறைவாக அமைந்தன. "எல்லாம் நிறைவேறிற்று" (யோவான் 19_30) அவரைப் பொறுத்தவரை எல்லாம் நிறைவேறிற்று எம்மைப் பொறுத்தவரை எல்லாம் நிறைவேற்ற




எமக்கு வேண்டும் எமது பங்கேற்பும் பாரம் என்று நினைக்காது தூரம் என்று சளைக்காது தம்மையே வெறுமையாக்கி கீழ்ப்படிந்து இறைசித்தம் நிறைவேற்றும் மனப்பாங்கு அவரது சீடர்களாகிய எமக்கு அவசியமன்றோ? இதுவே இயேசு எமக்காகப் பலியானத்துக்கு நாம் செலுத்தும் நன்றிக்கடனாகும்.
கிறிஸ்துவின் நாமத்தைத் தாங்கிய கிறிஸ்து அவன், அவள், அவர் என்ற நாம் அன்புக்கு கொடுக்கும் அர்த்தம் என்ன? நீதிக்காகக் கரங்களை உயர்த்துகின்றோமா? பிறர்வாழ எம்மை அர்ப்பணிக்கின்றோமா? இன்றைய நாளில் கேளிக்கைகள் ஆடம்பரங்களைத் தவிர்த்து இயேசுவின் பாடுகளையும் மரணத்தையும் நினைவு கூர்ந்தவர்களாக சிலுவையின் பாதையில் பயணிப்போம்.

எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை

# ஆதரவு வழங்கி பலம் சேருங்கள்

கிளிநொச்சி, ஏப்.14
காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்தவும், விடுவிக்கவும் வலியுறுத்தி நடத்தப்படும் போராட்டங்களுக்கு மாகாணத்தைச் சேர்ந்த அனைத்துத் தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டும்.
கிளிநொச்சி மாவட்ட இளைஞர் திறன்விருத்திக் கழகம் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.
அந்தக் கழகம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.
அதில் உள்ளதாவது:
காணமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால்கிளிநொச்சி, வவுனியா, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களில் தொடர் போராட்டங்கள் நடத்தப்படுகின்றன.
வவுனியாவில் சுழற்சி முறையிலான உணவு ஒறுப்புப் போராட்டம் 49ஆவது நாளாகவும் இன்று (நேற்று) தொடர்கிறது. கிளிநொச்சி, கந்தசாமி கோவில் முன்றலில் 53 ஆவது நாளாகத் தொடர்கின்றது.
நீதிக்காகப் போராடும் எமது உறவுகளுக்கு கிளிநொச்சி மாவட்ட இளைஞர் திறன் விருத்திக் கழகம் முழுமையான ஆதரவை வழங்குகின்றது. எதிர்வரும் நாள்களில் உறவுகள் முன்னெடுக்கவுள்ள அரச எதிர்ப்புப் போராட்டங்களுக்கு முழுமையான ஆதரவை வழங்குவோம். அனைத்துப் பொது அமைப்புக்கள், வர்த்தக சங்கங்கள், கிராம மட்ட அமைப்புக்கள் சமயநிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களும் ஆதரவை வழங்கி வலுச் சேர்க்க வேண்டும் என்று பணிவன்புடன் வேண்டுகின்றோம். என்றுள்ளது. (ற -21,6)


வவுனியா


முல்லைத்தீவு

# நடுவீதியில் பிறக்கும் புத்தாண்டு

## கேப்பாபிலவு மக்கள் வேதனை

முல்லைத்தீவு, ஏப். 14
கடற்படை வசமுள்ள தமது பூர்வீகக் காணிகளை விடுவிக்க வேண்டும் என்று தொடர் போராட்டம் நடத்தும் கேப்பாபிலவு மக்கள் தமக்குப்புத்தாண்டுவீதியிலேயே பிறக்கவுள்ளது என்று வேதனையுடன் தெரிவித்தனர்.



"பாரம்பரியமாக, கௌரவமாக வாழ்ந்த எம்மை அரசு வீதியில் விட்டுள்ளது. நாளை (இன்று) புத்தாண்டு பிறக்கின்றது. ஆனால் எமக்குக் கரிநாளே. எங்கள் வாழ்விடங்களை இராணுவத்திடம் பறி கொடுத்து விட்டு அகதிகளாக வீதியில் இருக்கும் மக்கள் இருக்கும்வரை பண்டிகைக் கொண்டாட்டங்களில் மகிழ்ச்சி இருக்காது.
கொண்டாட்டங்களைத் தேசிய நிகழ்வாக விமரிசையாகக் கொண்டாடி எமது உரிமைகள் மறுக்கப்பட்ட நிலைமை மறைக்கப்படுகின்றது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனைத்து உரிமைகளையும் வழங்கினாலே பண்டிகைகள் கொண்டாடப்படுவதில் அர்த்தம் இருக்கும். எங்கள் கோரிக்கைகளுக்கு அரசு செவி சாய்த்து உடனடியாக எமது வாழ்விடங்களை விடுவிக்க வேண்டும்." என்று அவர்கள் தெரிவித்தனர்.
காணிகளை விட்டு பாதுகாப்புப் படையினர் வெளியேற வேண்டும் என்று வற்புறுத்தி கேப்பாபிலவு மக்கள் நடத்திவரும் போராட்டம் 44ஆவது நாளை எட்டியுள்ளது. (ற - 7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மன் சிலையை திருடிய மூவர் கைது

திருமலை,ஏப்.14
திருகோணமலை. பன்குளம் அவ்வை நகர் ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயத்தின் மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த அம்மன் சிலையை திருடிய மூன்று இளைஞர்களைக் கைது செய்துள்ளதுடன், சிலையையும் கைப்பற்றியுள்ளதாக மொறவெவ பொலிஸார் தெரிவித்தனர்.
இவ்வாறு கைது செய்யப்பட்ட மூவரும் அதே இடத்தைச் சேர்ந்தவர்கள். கைது செய்யப்பட்ட இளைஞர்களை திருகோணமலை நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இதேவேளை சம்பவம் தொடர்பில் வழங்கப்பட்ட முறைப்பாட்டையடுத்து, 8 மணித்தியாலத்துக்குள் தீவிர விடா முயற்சியால் சிலையையும் மீட்டு, இளைஞர்களையும் கைது செய்தமைக்கு ஆலய பரிபாலன சபையினர் நன்றிகளை தெரிவித்துள்ளனர். (45)

# பாம்பின் உயிரைக்காப்பாற்ற முற்பட்டவர் பாம்பு தீண்டி சாவு

திருமலை,ஏப்.14
வாகனமொன்றில் மோதுண்டு, வீதியில் துடித்தக் கொண்டிருந்த பாம்பை, மனிதாபிமான முறையில் கையால் எடுத்துக் காட்டுக்குள் விடுவதற்கு முயன்ற நபரொருவர் உயிரிழுந்துள்ளார்.
இந்தச் சம்பவம், மூதூர் வேதந்தீவு பகுதியில் இடம்பெற்றது. மூதூர், பாலநகரைச்சேர்ந்த குறித்தநபர், திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்த நிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்று வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

ஊடகவியலாளர்கள் கடத்தல், படுகொலைகளுடன் தொடர்புடைய

# இரு இராணுவ அதிகாரிகள் அடையாளம் காணப்பட்டனர்

கொழும்பு, ஏப். 14
ஊடகவியலாளர் நாமல் பெரேராவைத் தாக்கினர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இரு இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் நேற்று முன்தினம் நடைபெற்ற அடையாள அணிவகுப்பின் போது, அடையாளம் காணப்பட்டனர்.
இவர்கள் இருவரும் முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் , கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் கடத்தல் மற்றும் படுகொலைகளுடனும் தொடர்புடையவர்கள் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸாரால் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.
ஊடகவியலாளர் நாமல் பெரேரா, அவரது நண்பருடன் வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது 2008 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் திகதி நாராஹேன்பிட்டி மற்றும் கிருலப்பனை ஆகிய பிரதேசங்களுக்கு இடையில் வைத்து வழிமறிக்கப்பட்டு தாக்கப்பட்டிருந்தார்.
இந்தச் சம்பவத்தில் ஊடகவியலாளர் நாமல் பெரேரா படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். தாக்குதலின் போது அவரது நண்பரான , பிரிட்டன் தூதரகத்தில் கடமையாற்றிய மஹேந்திர ரத்னவீரவும் காயமடைந்திருந்ததுடன் , அவரது வாகனமும் சேதமாக்கப்பட்டிருந்தது.
இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் கிடப்பில் போடப்பட்டிருந்த நிலையில், தற்போதைய அரசு ஆட்சிபீடம் ஏறியதும் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.
இதற்கமைய நேற்று முன்தினம் கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றில் அடையாள அணிவகுப்பு இடம்பெற்றது. இதன் போது, இராணுவப் புலனாய்வாளர்கள் ஆறு பேர் நிறுத்தப்பட்ட நிலையில் அதில் இருவரை ஊடகவியலாளர் நாமல் பெரேரா அடையாளம் காட்டியுள்ளார்.
இதற்கமைய அடையாளம் காணப்பட்ட இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த மேஜர் மற்றும் கோப்ரல் தர அதிகாரிகள் இருவரையும் எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.
விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இரு புலனாய்வு அதிகாரிகளும் ஊடகவியலாளர்களான லசந்த விக்கிரமதுங்க படுகொலை, பிரகீத் எக்னலிகொட கடத்தின் காணால் ஆக்கப்பட்ட சம்பவம் மற்றும் கீத் நொயார் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட சம்பவம் உள்ளிட்டவைகளுடன் தொடர்புடையவர்கள் என்று குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.
(ஐ-10)

# சு.கவை பலவீனப்படுத்த முயற்சி

*மகிந்த குற்றச்சாட்டு*



கொழும்பு, ஏப். 14
ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள மக்கள் செல்வாக்குள்ள பிரபலங்களை நீக்கிவிட்டு, பலவீனமானவர்களைத் தொகுதி அமைப்பாளர்களாக நியமிக்கப்பட்டிருப்பது கட்சியைப் பலவீனப்படுத்துவதற்கான ஒரு முயற்சியேயன்றி வேறில்லை. இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
புதிய தொகுதி அமைப்பாளர் நியமனம் குறித்து கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது, "நாளுக்கு நாள் கட்சியின் நடவடிக்கைகள் வீழ்ச்சியை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. கட்சி மீது ஆதரவில்லாத, உணர்வற்றவர்களின் தேவையாக, கட்சியைப் பலவீனப்படுத்துவது மாறியுள்ளது. இத்தகையவர்களுக்கு, மக்கள் யார் பக்கம் இருக்கின்றார்கள் என்பதை விளங்கிக் கொள்ள முடியாதுள் ளது. சந்தர்ப்பம் வரும் போது மக்கள் உரிய பாடத்தைப் புகட்டுவார்கள்-என்றார். (ஐ-10)

# கூட்டுறவுச் சங்கங்களிலும் பட்டதாரிகளுக்கு வேலையுண்டு

## கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் எடுத்துரைப்பு

திருமலை,ஏப்.14
பட்டதாரிகள் கூட்டுறவுச் சங்கங்களில் காணப்படும் பொறுப்பை எடுப்பதற்கு முன்வருவார்களானால், கூட்டுறவிலும் நாம் பெரிய அபிவிருத்திகளை ஏற்படுத்தலாம். அங்கும் அதிகமான வேலை வாய்ப்புகள் இருக்கின்றன.
இவ்வாறு கிழக்கு மாகாண விவசாய அமைச்சரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளருமாகிய கி. துரைராசசிங்கம் தெரிவித்தார்.
குறுமண்வெளி மீனவர் கூட்டுறவுச் சங்கத்தினருடனான ஒன்றுகூடல் மற்றும் குறைகேள் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது, கூட்டுறவு அமைப்புகள் மூலம் எமது பிரதேசத்தின் தேவைகளை நாமே பூர்த்தி செய்யக்கூடிய நிலைமையைத் தோற்றுவிக்கலாம். அதே நேரத்தில் மேலதிகமாக வருகின்ற உதவிகளைக் கூட மற்றைய பிரதேச அமைப்புகளுடன் சேர்ந்து பல செயற்திட்டங்களை மேற்கொள்ள முடியும். எமக்கு வருமானங்களை ஈட்டுவது என்பது ஒரு புறம் இருந்தாலும், செலவுகளைச் சிக்கனமாக மேற்கொள்வதற்கும் நாம் பழகிக் கொள்ள வேண்டும். அரசிடம் எதிர்பார்ப்பது எமது தேவைதான். அதிலும் மக்கள் பிரதிநிதிகளாகிய நாங்கள் உங்களுக்குத் தேவையானவற்றை எடுத்துக் கொண்டு வர வேண்டும். அதே நேரத்தில் அடிப்படையான சில விடயங்கள் இருக்கின்றன அவற்றை மக்களும் மேற்கொள்வதற்கு முன்வர வேண்டும்.
எமதுபிள்ளைகள்படித்துபட்டதாரிகளாக மாற்றி தற்போது அவர்கள் எமது மாவட்டங்களில் பல்வேறு இடங்களில் தங்களது தொழில் வாய்ப்புக்காகப் போராட்டங்களை நடத்திக் கொண்டு வருகின்றார்கள். அவர்களது பிரச்சினை என்னவென்றால் பரீட்சை ஒன்று வைக்கப்பட்டது. அதில் சிலர் தேறினார்கள் அவர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது. இன்னும் ஆசிரியர் வெற்றிடங்கள் இருக்கின்றன. ஆனால் அவர்கள் சித்தியடையாததன் காரணமாக அவர்களைநியமிக்க முடியாமல் இருக்கின்றது. அவர்களுக்கு வேறு ஏற்பாடுகள் மேற்கொள்வதற்காக முயற்சித்துக் கொண்டிருக்கின்றோம். அதே நேரத்தில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களுக்கு ஆசிரியர்கள் தேவைப்பாடு இருக்கின்றது. ஆனால் சத்தியாக்கிரகம் இருக்கின்றவர்களுக்கு அந்த நியமனம் வழங்க முடியாது. ஏனெனில் அவர்கள் படித்திருக்கும் துறை வேறு. வேலைக்காகத் தேவைப்படுகின்ற பாடங்கள் வேறாக இருக்கின்றது.
இதன் காரணமாக அவர்களை அந்தப் பாடங்களுக்கு ஆசிரியர்களாக நியமிக்க முடியாது ஆனால் அந்தப் பாடங்களுக்குத் தான் எமக்கு ஆசிரியர் பற்றாக்குறையும் இருக்கின்றது. அவ்வாறான பட்டதாரிகள்வேறுதொழில்களை மேற்கொள்ள முடியும் என்கின்ற கருத்துக்கள் சொன்னால் அவர்கள் கண்டனம் வெளியிடுவார்கள், ஒருவேளை கொடும்பாவியும் எரிப்பார்கள். ஆனால் எமது கருத்தையே நாம் தெரிவிக்கின்றோம். எமது ஒவ்வொரு ஊர்களிலும் பட்டதாரிகள் இருக்கின்றார்கள் அந்த ஊரிலுள்ள பட்டதாரிகள் இவ்வாறான கூட்டுறவுச் சங்கங்களில் பொறுப்பை எடுப்பார்கள் என்றால் பெரிய அபிவிருத்தியை இந்தக் கூட்டுறவிலும் ஏற்படுத்தலாம்.
கடந்த வாரம் திருகோணமலையில் இடம்பெற்ற கூட்டுறவு கலந்துரையாடலிலே இந்தக் கூட்டுறவுச் சங்கங்களினுடைய முகாமையாளர்களாக பட்டதாரிகளை நியமிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளும் படியும் அவர்களுக்கான சம்பளங்களை அதிகரித்துக் கொடுக்கும் ஏற்பாடுகளை மேற்கொள்ளும் படியும் கூட்டுறவு ஆணையாளருக்கு வலியுறுத்தியருக்கின்றேன்.
அவ்வாறு மேற்கொள்ளும் போது பட்டதாரிகளின் பிரச்சினைகளையும் தீர்த்துக் கொள்ள முடியும் கூட்டுறவு அமைப்புகளையும் வளர்க்க முடியும். அவ்வாறு பட்டதாரிகள் முன்வருவார்களாக இருந்தால் அங்கும் அதிகமான வேலைவாய்ப்புகள் இருக்கின்றன. அவர்கள் இதனை ஏற்றுக் கொள்வார்கள் எனில் அவர்களின் சிறப்பான திறமைகள் மூலம் இந்த கூட்டுறவைச் சிறப்பான இடத்துக்குக் கொண்டுசெல்ல முடியும்-என்றார். (ஐ-101)



# துப்பாக்கிச் சூட்டில் நால்வர் காயம்

மட்டக்களப்பு,ஏப்.14
மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவில், காஞ்சரம் குடா பனையறுப்பான் பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பெண்கள் நால்வர் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
இதேவேளை, துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட நபர் என்ற சந்தேகத்தில் ஒருவரைக் கைது செய்துள்ளதாக கொக்கட்டிச்சோலை பொலிஸார் தெரிவித்தனர். குறித்த பிரதேசத்தில் சம்பவதினமான நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 10 மணியளவில் இரு குடும்பங்களுக்கிடையே தகராறு இடம்பெற்றது.
சம்பவம் தொடர்பாக பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடு செய்வதற்காக குடும்பஸ்தர் ஒருவர் மோட்டார் சைக்கிளை வீட்டில் இருந்து வாசலுக்கு எடுத்து வந்துள்ளார். இதன்போது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவர் மீது உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியால் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. அது மோட்டார் சைக்கிளின் பெற்றோல் தாங்கியில் பட்டு வெடித்து சிதறியதையடுத்து, அதன் அருகே இருந்த நான்கு பெண்கள் படுகாயமடைந்தனர். அவர்கள், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதனையடுத்து சம்பவ இடத்துக்கச் சென்ற பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்திய நபரைக் கைது செய்துள்ளதுடன், இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# இலங்கையில் பாலியல் தொழிலில் 40,000 சிறுவர்கள்

## பிரதிக் கல்விப் பணிப்பாளர் தகவல்

கொழும்பு.ஏப்.14
இலங்கையில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று மட்டக்களப்பு கல்வி வலய முன்பள்ளி அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளர் எம்.புவிராஜ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பயனியர் வீதியில் உள்ள மதர்ஸ் கெயார் முன்பள்ளியின் வருடாந்த உடல் திறனாய்வுப் போட்டி மட்டக்களப்பு மகாஜனாக் கல்லூரி உள்ளக அரங்கில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தின ராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்பிள்ளைப் பருவமானது சிறுவர்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கின்ற பருவமாக இருக்கின்றது. இந்தப் பருவத்தில் சிறுவர்களின் 85 தொடக்கம் 90 வீதமான மூளை வளர்ச்சி ஏற்படுகின்றது. இந்தப் பருவத்தில் நாங்கள் சிறுவர்களுக்குக் கொடுக்க வேண்டிய நல்லவிடயங்களைக் கொடுப்பதன் மூலம் அவர்கள் நல்ல விருத்தியை அடைய முடியும்.

இலங்கையில் 15 சதவீதமான சிறுவர்கள் மன அழுத்தத்துக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றார்கள். இது சிறியதொரு தொகையல்ல. அதே போல் எமது நாட்டில் 15 சதவீதமான சிறுவர்கள் நீரிழிவு நோய்க்கு ஆளாகியிருக்கின்றார்கள். அத்துடன் இலங்கையில் 40ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றார்கள். இது மிகவும் கவலைக்குரிய செய்தியாகும். 14 சதவீதமான சிறுவர்கள் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை எடுப்பதற்கு முன்னரே பாடசாலைகளிலிருந்து இடைவிலகுகின்றார்கள். 13 தொடக்கம் 15 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களில் 11 சதவீதமான சிறுவர்கள் புகைத்தல் மற்றும் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியிருக்கின்றார்கள். இவை சிறுவர்கள் தொடர்பாக சுகாதார அமைச்சு, சிறுவர் செயலகம் மற்றும் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட அண்மைக்கால தகவல்களாகும்.

> நாளாந்தம் இலங்கையில் 800 இற்கும் மேற்பட்ட கருக்கலைப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தற்கொலையில் உலகத்தில் நான்காவது இடத்தில் இலங்கை இருக்கின்றது. மது பாவனையில் மட்டக்களப்பு முன்னிலையில் இருக்கின்றது.

இலங்கையில் திருமண வயதை எட்டியுள்ள பெண்களில் 6 சதவீதமானவர்கள் திருமணத்துக்கு முன்னரே கர்ப்பம் தரிக்கின்றார்கள். நாளாந்தம் இலங்கையில் 800 இற்கும் மேற்பட்ட கருக்கலைப்புகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. தற்கொலையில் உலகத்தில் நான்காவது இடத்தில் இலங்கை இருக்கின்றது. மது பாவனையில் மட்டக்களப்பு முன்னிலையில் இருக்கின்றது. இவ்வாறான தொரு சமூகத்தை உருவாக்கியது யார் என்ற கேள்வி உங்கள் அனைவர் மத்தியிலும் இருக்கும். வேறுயாருமல்ல நாங்கள் எல்லோரும் சேர்ந்து தான் இவ்வாறானதொரு சமூகத்தை உருவாக்கியிருக்கின்றோம்.

முன்பள்ளிப் பருவச் சிறுவர்களின் வளர்ச்சியில் நீங்கள் மிக அக்கறையாக இருக்க வேண்டும். இந்தப் பருவத்தில் சிறுவர்கள் எழுத வேண்டும், வாசிக்க வேண்டும் என்கின்ற விடயத்தில் தான் பெற்றோர் மிகவும் கவனம் செலுத்திக்கொண்டிருக்கின்றார்கள். இதனால் சிறுவர்களின் வளர்ச்சிக்குத் தேவையான ஏனைய விடயங்கள் அவர்களுக்கு கிடைப்பதில்லை. அதனால்தான் இன்று நாங்கள் இவ்வாறானதொரு சமூகத்தை எதிர்கொண்டிருக்கின்றோம். ஆகவே சிறுவர்கள் சந்தோஷமாக இருப்பதற்கு என்னென்ன முயற்சிகளை நீங்கள் எடுக்கவேண்டுமோ அவற்றை எடுக்கத் தவறாதீர்கள்.

உலகிலேயே சிறுவர்கள் மிகவும் சந்தோஷமாக இருக்கின்ற நாடு பின்லாந்தாகும். அதற்குக் காரணம் அங்கிருக்கின்ற கல்வி முறையாகும். பின்லாந்து நாட்டின் கல்வி முறையில் பல விடயங்கள் சிறுவர்களுக்காகவே உள்வாங்கப்பட்டிருக்கின்றன. ஏழு வயதுக்குப் பின்னரே சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்வர். அங்கிருக்கின்ற அனைத்தும் அரச பாடசாலைகளாகும். தனியார் வகுப்புக்கலாசாரம் அங்கு கிடையாது. பாடசாலைக் கல்வி மாத்திரம் தான் அங்கு இருக்கின்றது. வீட்டுவேலைகள் கூட சிறுவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. அதனால்தான் அங்கு சிறுவர்கள் சந்தோஷமாக இருக்கின்றார்கள்- என்றார். (ஐ)

## மதுவரித்திணைக்கள அதிகாரிகளின் விடுமுறைகள் ரத்து

கொழும்பு, ஏப். 14
பண்டிகைக் காலத்தில், நாடளாவிய ரீதியில் சுற்றி வளைப்புக்களை மேற்கொள்ளும் நோக்கில், சகல மதுவரித் திணைக்கள அதிகாரிகளினதும் விடுமுறைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று திணைக்கள மேலதிக ஆணையாளர் எம்.பி. வகசூரிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,
இன்று வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை இவர்களின் விடுமுறை இரத்துச் செய்யப்பட்டுள்ளது. பண்டிகைக் காலங்களில் சட்டவி ரோதமாக மதுவிற்பனை செய்வ தைத் தடுப்பதற்காகவும், சட்ட விரோத நடவடிக்கைகளைச் சுற்றி வளைப்பதற்காகவுமே அதிகாரிகளின் விடுமுறைகள் இரத்துச்செய்யப்பட்டுள்ளது. புத்தாண்டு தினங்களான நேற்றும் இன்றும் நாட்டிலுள்ள சகல மதுபான நிலையங்களும் மூடப்படும்.

இந்தக் காலப் பகுதியில் திணைக்கள விதிமுறைகளை மீறும் மதுபான அனுமதிப் பத்திரக்காரர்களுக்கு எதி ராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ஐ-10)

## சாரதியைத் தாக்கி முச்சக்கரவண்டிக்கு தீ வைப்பு

திருமலை, ஏப்.14
திருகோணமலை கல்லாறு தெஹியத்த வீதியினூடாக பயணித்துக்கொண்டிருந்த முச்சக்கர வண்டியை நிறுத்தி, அதன் சாரதியை தாக்கி விட்டு முச்சக்கர வண்டிக்கு தீ மூட்டிய சம்பவம், நேற்று அதிகாலை 1.30 மணியளவில் சேறுநுவர பொலிஸ் பிரிவில் இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சேறுநுவர பிரதேசத்தில் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் கடமையாற்றும் நபரொருவர் கல்லாறு தெஹிவத்தை வீதியில், முச்சக்கரவண்டியை ஓட்டிச் சென்று கொண்டிருந்தபோது, ஒரு வாய்க்காலுக்கு அருகில் மது அருந்திக்கொண்டிருந்த சிலர் முச்சக்கர வண்டிக்குத் தீ மூட்டியதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இறப்பு வீடொன்றில் ஏற்கெனவே இடம் பெற்ற கருத்து மோதலே, இந்தத் தீ வைப்புச் சம்பவத்துக்கு காரணமென சேறுநுவர பொலிஸார் தெரிவித்தனர். தீ வைத்ததாகக் கூறப்படும் 4 பேரில் ஒருவரை கைது செய்துள்ளதாகவும் அவர், கல்லாறு பகுதியைச் சேரந்தவர் என்றும், ஏனைய மூவரையும் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் சேறுநுவர பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)



## இலங்கையில் சிறப்புப் பிரதிநிதியை நியமிப்பதற்கு ஜப்பான் ஆலோசனை

கொழும்பு, ஏப். 14
இலங்கையில் அபிவிருத்திச் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கான சிறப்புப் பிரதிநிதி ஒருவரை நியமிப்பதற்கு ஜப்பான் ஆலோசித்துள்ளது. ஜப்பானுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள தலைமை அமைச்சர் ரணில்விக்கிரமசிங்கவிடம், ஜப்பானிய அமைச்சரவைச் செயலர் யொஷிஹிடே சுகா இதனைத் தெரிவித்தார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ரோக்கியோவில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், ஜப்பானிய அமைச்சரவைச் செயலர் யொஷிஹிடே சுகாவுக்கும் இடையிலான சந்திப்பு அண்மையில் இடம்பெற்றது.

இதன் போதே, ஜப்பானியத் தலைமை அமைச்சருக்கான ஆலோசகர் கலாநிதி ஹிரடோ இசுமியை, இலங்கைக்கான சிறப்புப் பிரதிநிதியாக ஜப்பான் நியமிக்கவுள்ளதாக, யொஷிஹிடே சுகா தெரிவித்தார்.

இந்தியப் பெருங்கடல் கப்பல் பாதை, மற்றும் இந்தியப் பெருங்கடலின் பாதுகாப்பு ஆகிய விவகாரங்கள் குறித்து முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. பிராந்தியத்தின் கடல்சார் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய கடப்பாடு இலங்கைக்கு இருப்பதாகத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இந்தியப் பெருங்கடல் மாநாடு ஒன்றை நடத்த இலங்கை திட்டமிட்டுள்ளதாகவும், இந்தியப் பெருங்கடலின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவது தொடர்பான பொதுவான நிகழ்ச்சித் திட்டம் ஒன்றைப் பரிந்துரைத்துள்ளதாகவும் தலைமை அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இலங்கையின் தொலைக்காட்சிகளை இலத்திரனியல் மயப்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது. 2002ஆம் ஆண்டு இலங்கையில் அமைதியை ஏற்படுத்துவதற்கான சிறப்புப் பிரதிநிதியாக யசூஷி அகாஷியை நியமித்திருந்தது. இவர் இலங்கையில் போர்நிறுத்த காலத்திலும், போர்க்காலத்திலும், போருக்குப் பிந்திய காலகட்டத்திலும், 20 இற்கும் அதிகமான பயணங்களை இலங்கைக்கு மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-10)

## 2,716 நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தாக்குதல்

கொழும்பு, ஏப். 14
மனித நுகர்வுக்குத் தகுதியற்ற உணவு வகைகளைத் தயாரித்த 2 ஆயிரத்து 716 நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,
தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு, நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின் போது, மனித நுகர்வுக்குத் தகுதியற்ற நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் மேற்கொள்ளப்பட்ட இந்த சுற்றிவளைப்பில், 19 ஆயிரத்து 730 உணவு தயாரிப்பு நிறுவனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அதிகளவான சுற்றிவளைப்புக்கள் மேல் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைக்காக நாடு முழுவதும் 2 ஆயிரம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர் - என்றார். (ஐ-10)

## விபத்தில் இரு இளைஞர்கள் சாவு

கொழும்பு, ஏப். 14
மாலபே கடுவலை வீதியின் வெலிவிட்ட சந்திப் பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் இரு இளைஞர்கள் உயிரிழந்தனர் என்று தலங்கம பொலிஸார் தெரிவித்தனர்.

"இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றது. மோட்டார் சைக்கிள் ஒன்றும் டிப்பர் வாகனம் ஒன்றும் மோதிக் கொண்டன.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்களும் காயமடைந்து ஹோமாகம வைத்தியசாலையில் சேர்க்கும் போது உயிரிழந்தனர். 19 மற்றும் 28 வயதுடைய இரண்டு இளைஞர்களே உயிரிழந்தனர்.

டிப்பர் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆரம்பிக்கப்பட் டுள்ளன" என்று பொலிஸார் மேலும் தெரிவித்த னர். (ஐ-10)

## சீனன்குடா எண்ணெய்க் குதங்களை இலங்கை-இந்தியா கூட்டாக இயக்கும்

திருகோணமலை சீனன்குடாவில் உள்ள எண்ணெய்க் குதங்களை இந்தியாவும் இலங்கையும் இணைந்து, கூட்டாக இயக்கவுள்ளது என்று இலங்கையின் பெற்றோலியத் துறை அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

சீனன்குடாவில் உள்ள 99 எண்ணெய்க் குதங்களில், குறைந்தது 73 எண்ணெயக் குதங்கள் இந்தக் கூட்டு முயற்சித் திட்டத்தின் கீழ் இயக்கப்படவுள்ளன.

ஏனைய 10 எண்ணெய்க் குதங்களை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பயன்படுத்திக் கொள்ளவுள்ளது. எஞ்சிய 14 எண்ணெய்க் குதங்களும் இந்தியாவுக்கு நீண்டகாலக் குத்தகைக்கு வழங்கப்படவுள்ளன. இது தொடர்பான பேச்சுக்கள் தற்போது நடந்து வருகின்றன. 2003 ஆம் ஆண்டில் இந்த எண்ணெய்க் குதங்கள் மீது இந்தியா ஆர்வம் காட்டியிருந்தது. அப்போது ஓர் உடன்பாட்டின் மூலம் 99 எண்ணெய்க் குதங்களும் இந்தியா எண்ணெய் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது -என்றார். (ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிரழிவுக்கான இழப்பீட்டை ஒரே தடவையில் வழங்கவேண்டும்

## இரணைமடு விவசாயிகள் சம்மேளனம் வேண்டுகோள்

கிளிநொச்சி, ஏப்.14

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயி களுக்கான கொடுப்பனவை ஒரே தடவையில் வழங்கி விவசாயிகளின் கடன்களைத் தீர்க்க அரசு உதவ வேண்டும்.

இவ்வாறு இரணைமடு விவசாயிகள் சம்மேளனத்தின் செயலாளர் மு.சிவமோகன் வேண்டுகோள் விடு த்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது:

2016 - 2017ஆம் ஆண்டுக்கான காலபோகச் செய்கை மாவட்டத்தில் நிலவிய வறட்சியால் பெரும் அழிவைச் சந்தித்தது. இரணைமடுக்குளம் உள்ளிட்ட சிறுபகுதிகளில் மட்டும் காலபோகச் செய்கை பாதுகாக்கப்பட்டது.

பயிரழிவுகள் தொடர்பாக இழப்பீடுகள் வழங்கப்படும் என்று அரசு தெரிவித்தது. பயிரழிவு ஏற்பட்ட விவசாயிகள் இழப்பீட்டுக்கு விண்ணப்பித்தனர். இழப்பீட்டின் ஒரு பகுதியை வழங்குவதற்கு அரசு துரித நடவடிக்கை எடுத்துள்ளது. அதை வரவேற்கின்றோம்.

கடந்த காலங்களில் இழப்பீடுகள் வழங்கப்பட்டபோது சொற்ப தொகையே வழங்கப்பட்டது. அந்தத் தொகை அந்தப் பகுதிக்கான உணவுச் செலவாகவே அமைந்தது. வறட்சியால் பல ஏக்கர் பயிர்ச் செய்கை அழிவடைந்தபோதும், அதிகபட்சமாக 5 ஏக்கர் பயிரழிவுக்கே இழப்பீடு வழங்கப்படுகின்றது. ஒரு ஏக்கருக்கு 8 ஆயிரத்து 675 ரூபாவே வழங்கப்படவுள்ளது. ஒரு ஏக்கருக்கான பணம் தற்போது வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளது. ஏனைய 4 ஏக்கருக்குமான இழப்பீட்டுத் தொகை 4 கட்டங்களாகவே வழங்கப்படும் என்று கூறப்படுகின்றது.

விவசாயிகளைப் பொறுத்தவரை வங்கிகளில் கடன் பெற்றும், நகைகளை அடைவு வைத்துமே விவசாயம் மேற்கொண்டுள்ளனர். இழப்பீட்டுத் தொகையைப் பகுதி பகுதியாக வழங்கும் போதும் அது அன்றாடச் செலவுக்கே பயன்படும். அல்லது கடன்களுக்கு வட்டி செலுத்துவதாகவே அமையும். அவர்கள் கடனை மீளச் செலுத்துவதற்கு உதவாது. அரசு இந்த விடயத்தைக் கருத்திற் கொண்டு இழப்பீட்டுத் தொகையை ஒரே தடவையில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (ற-101)

## வெள்ளாங்குளம் வைத்தியசாலைக்கு நோயாளர் காவு வண்டி

மன்னார், ஏப்.14

வெள்ளாங்குளம் பிரதேச வைத்தியசாலைக்கு நோயாளர் காவு வண்டி பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. 3ஆண்டுகளுக்கு மேலாக நிலவி வந்த இடர்கள் முடிவுக்கு வந்துள்ளன என்று பிரதேச மக்கள் மகிழ்ச்சி வெளியிட்டனர்.

வெள்ளாங்குளம் வைத்தியசாலையில் 3 ஆண்டுகளுக்கு மேலாக நோயாளர் காவு வண்டி இல்லை. பிரதேச மக்கள் இதனால் இடர்களைச் சந்திக்க நேர்ந்தது.

இந்த விடயம் தொடர்பாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜி.குணசீலன் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. அவர் உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நோயாளர் காவு வண்டியைப் பெற்றுக் கொடுத்துள்ளார்.

அதேவேளை, வெள்ளாங்குளம் பிரதேச வைத்தியசாலையில் தற்காலிகமாக உபயோகிக்கப்பட்ட நோயாளர் காவு வண்டி மடுப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பெரியபண்டிவிரிச்சான் பிரதேச வைத்திய சாலைக்கு வழங்கப்பட்டது. (ற-56)

## 50 பேருக்கு சுயதொழில் ஊக்குவிப்பு கடன்கள்

முல்லைத்தீவு, ஏப்.14

இலங்கை வங்கியின் ஏற்பாட்டில் புத்தாண்டை முன்னிட்டு 50 பயனாளிகளுக்குச் சுயதொழில் ஊக்குவிப்புக் கடன் வழங்கும் நிகழ்வு நாளை மு.ப. 9 மணியளவில் புதுக்குடியிருப்பு இலங்கை வங்கிக் கிளையில் நடைபெறும் என்று வங்கி முகாமையாளர் தெரிவித்தார்.

வள்ளிபுனம், தேவிபுரம், கைவேலி ஆகிய கிராமங்களில் சுயதொழில் மேற்கொண்டுள்ள 50 பேருக்கே கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. (ற-7)

## கடத்தப்பட்ட முதிரைக்குற்றிகள் சிக்கின

கிளிநொச்சி, ஏப்.14

சட்டவிரோதமாகக் கொண்டு செல்லப்பட்ட 17 முதிரை மரக் குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை கிளிநொச்சி, தருமபுரத்தில் இருந்து ஹையேஸ் வாகனம் மூலம் முதிரை மரக் குற்றிகள் கடத்தப்படுகின்றன என்று பளைப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. பளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரஞ்சன பண்டார தலைமையில் சோதனையில் ஈடுபட்ட பொலிஸ் குழு எழுதுமட்டுவாழ் பகுதியில் மரங்கள் ஏற்றிச் சென்ற ஹையேஸ் வாகனத்தை மடக்கினர். இரு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர்.

விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் முற்படு த்தப்படுவர் என்று பளைப் பொலிஸார் குறிப்பிட்டனர். (ற-6)

## மினி சூறாவளியால் 46 வீடுகள் சேதம்

வவுனியா, ஏப்.14

வவுனியா மாவட்டத்தில் கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட மினி சூறாவளி மற்றும் மழையால் 46 வீடுகள் உட்பட 21 வட்சம் ரூபா பெறுமதியான அழிவுகள் ஏற்பட்டுள்ளன என்று பிரதேச செயலர் தெரிவித்தார்.

“காத்தார் சின்னக்குளத்தில் 40 வீடுகளும், சமனங்குளத்தில் 3 வீடுகளும், வெளிக்குளத்தில் 2 வீடுகளும், ஆசிக்குளத்தில் ஒரு வீடும் சேதமடைந்துள்ளன. வீட்டின் கூரைகளே அதிகம் சேதமடைந்துள்ளன. வீடுகளின் கூரைகளை மீள அமைக்க வேண்டியுள்ளது. சேதங்கள் தொடர்பான விவரங்கள் இன்றுதான் (நேற்று) திரட்டப்பட்டுள்ளது.

மினி சூறாவளியால் வவுனியா பிரதேச செயலர் பிரிவில் 21 லட்சம் ரூபா பெறுமதியான சேதங்கள் ஏற்பட்டுள்ளன என்று கண்ட றியப்பட்டுள்ளது. அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் ஆராயப்படுகின்றது.” என்று பிரதேச செயலர் தெரிவித்தார். (ற-101)

## முல்லைத்தீவு மாவட்டத்தில் 500 கல்வீடுகளுக்கு அனுமதி

முல்லைத்தீவு, ஏப்.14

2017ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேற்ற அமைச்சால் 500 கல்வீடுகள் அமைக்கப்படவுள்ளன என்று மாவட்ட செயலகத் தகவல்கள் தெரிவித்தன: வீடொன்று 8 லட்சம் ரூபா பெறுமதியானவை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த வீடுகள் மாவட்டத்தின் 5 பிரதேச செயலர் பிரிவுகளுக்கும் மக்களின் தொகைக்கு ஏற்பப் பகிரப்படவுள்ளன.

கரைத்துறைப்பற்று, புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவுகளுக்கு தலா 170 வீடுகளும், துணுக்காய், மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவுகளுக்குத் தலா 30 வீடுகளும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்கு 95 வீடுகளும், இந்தியாவில் இருந்து நாடு திரும்பியோருக்கு 5 வீடுகளும் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-101)



கிளிநொச்சியில் உள்ள பல தொடருந்துக் கடவைகளின் சிவப்பு சமிக்ஞை விளக்குகள் நேற்றுமுன்தினம் தொடர்ச்சியாக ஒளிர்ந்தன என்று கூறப்படுகின்றது. அதனால் மக்கள் குழப்ப நிலையை அடைந்தனர் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. இந்தத் தொழில்நுட்பக் கோளாறைச் சரி செய்து பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்ய வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ற-35)

## பனையில் ஏறியவரை தீண்டியது பாம்பு

கிளிநொச்சி, ஏப்.14

பாம்பு தீண்டிய நிலையில் ஒருவர் கிளிநொச்சி பொதுவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் கிளிநொச்சி சம்புக்குளம் பகுதியில் நடந்துள்ளது. சீவல் தொழிலாளியான கல்மடுநகர், சம்புக்குளத்தைச் சேர்ந்த எஸ். இந்திரச்சித்தன் (வயது-37) என்பவரையே பாம்பு தீண்டியுள்ளது.

தொழில் நிமித்தம் பனை மரத்தில் ஏறியபோது பனையிலிருந்த பாம்பு தீண்டியது என்று தெரிவிக்கப்பட்டது. (ற -21)

# வடக்குக் கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம் முன்வைத்த கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டது கூட்டுறவு அமைச்சு

## தொழிற்சங்கத்தின் தலைவர் தெரிவிப்பு

வடக்கு மாகாணக் கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் முன்வைத்த மூன்று கோரிக்கையை கூட்டுறவு அமைச்சு ஏற்றுக்கொண்டு செயற்படுத்த முன்வந்துள்ளது என்று தொழிற்சங்கம் தெரிவித்தது. தொழிற்சங்கத்தின் தலைவர் வ.சிவகுமார் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணக் கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசனை ஊழியர் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் அண்மையில் சந்தித்தனர். கூட்டுறவாளர்கள் எதிர்நோக்கும் பலதரப்பட்ட பிரச்சினைகள் குறித்து விரிவாக எடுத்துக் கூறப்பட்டது. அமைச்சரிடம் முன்வைக்கப்பட்ட மூன்று கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

இந்தக் கோரிக்கைகளை எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைப் படுத்த உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்று தொழிற்சங்கத்திடம் அமைச்சர் உறுதியளித்தார்.

கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரியும் ஊழியர் ஒருவர் தொடர்ச்சியாக 14 ஆண்டுகள் சேவை நிறைவு செய்தால் அவருக்கு விசேட படியாக ஆயிரம் ரூபாவும், 20 ஆண்டுகள் சேவையாற்றியிருந்தால் ஆயிரத்து 500 ரூபாவும், 25 ஆண்டுகளை நிறைவு செய்தால் 2 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட வேண்டும்.

கூட்டுறவு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் 15 வீத விசேட படி சுற்று நிரூபத்துக்கமைய மாதாந்தம் இலாபம் கிடைத்தால் மட்டுமே வழங்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டதை நீக்கி தொடர்ச்சியாக ஊழியர்களுக்கு வழங்கப்படல் வேண்டும்.

கூட்டுறவு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் வாழ்க்கைச் செலவுப் படியானது சங்கங்கள் மாதாந்தம் இலாபமீட்டும் பட்சத்தில் மட்டுமே மாதாந்தம் பெற்றுக் கொள்ள முடியும் என்ற விடயத்தை மாற்றி மாதாந்தம் இலாபமீட்டினால் மாதாந்தம் வாழ்க்கைச் செலவுப் படி வழங்கப்பட வேண்டும். மாதாந்தம் இலாபம் அடையாது வருட முடிவில் கணக்காய்வின் பின் சங்கம் இலாபமீட்டும் சந்தர்ப்பத்தில் அந்தப் படியைப் பெற்றுக் கொள்ளாத சகல மாதங்களுக்கான வாழ்க்கைச் செலவுப் படியை ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டும். இதற்கு கூட்டுறவுத் திணைக்களத்தின் அனுமதி பெறத் தேவையில்லை என்ற கோரிக்கைகளே முன்வை க்கப்பட்டன - என்றார். (ற - 17)

## ஒட்டுசுட்டானில் 20 வேலைத் திட்டங்கள்

முல்லைத்தீவு, ஏப். 14

``ஒட்டுசுட்டான் கமநல சேவைகள் பிரிவில் 20 மில்லியன் ரூபா நிதியில் முதன்மையாக இனங்காணப்பட்ட ஒன்பது வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று ஒட்டுசுட்டான் கமநல சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர் தெரிவித்தார்.

மாவட்டச் செயலகத்தால் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட நிதியில் இந்த வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. குடிதாங்கிக்குளம், தவசிக்குளம் என்பவற்றின் அணைக்கட்டு, துருசின் முழுமையான திருத்த வேலைகளும், புளியங்குளம், பழம்பாசிக் குளத்தின் கலிங்கு, சாளம்பன் குளத்தின் வாய்க்கால், கற்சிலைமடு குளத்தின் வாய்க்கால், பிராமனன் குளத்தின் வாய்க்கால், சாளம்பன் அணைக்கட்டு, குஞ்சு கோடா லிக்கல் பிராதன திருத்த வேலைகளும் நடை பெறுகின்றன என்றும் அவர் தெரிவித்தார். (ற-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அருளாசிச்செய்தி



திராதவினைகளெல்லாம் தீர்த்து வைக்கின்ற தனக்கு மேல் வேறு தலைவன் இல்லாத தனித்துவம் வாய்ந்த அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாய கருக்கு புதிய முகவுத்தர எண்கோண வடிவத்தில் அழகுற அமைக்கப் பெற்ற தேரிலே அடியார் களின் வினைபோக்குவதற்காக யாழ். தீவகம் மண்கும்பான் வெள்ளைப்புற்றடியில் எழுந்தருளி வீற்றிருந்து அருள்பாலிக்கின்றார்.

மண்குமாபான் என்னும் மாபதியில் விக்கினங்கள் தீர்க்கும் விநாயகர் ஓங்காரரூபமாக மலர்ந்துள்ள விஜய வருடப்பிறப்பில் அவ்வூர் மக்களுக்கு வரும் இடர் தீர்க்க புதிய தேரினிலே மாபவனி வருகின்றார்.

எல்லாம் வல்ல வீரகத்தி விநாயகப் பெருமான் மண்கும்பான் மக்கள் அனைவரும் சீரோடும் சிறப்போடும் வாழப்பிரார்த்திப்பதோடு நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து இறையருள் சுரந்து உலகம் செழிப்புற்றோங்க ஆசி வழங்கி வாழ்த்துகின்றேன்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

**" ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் "**

## ஆலயத்தின் வரலாற்றுச் சிறப்பு

மண்கும்பான் வெள்ளைப் புற்றடியில் வீற்றிருந்து அடியார்களுக்கு அருள்பாலிக்கும் விக்கின விநாயகர்ஏவிளம்பி வருடப் ...
எண்கோண முகபத்திரத் தேரேறி வருகிறார். அந்தத் தேர்த் திருவிழாவை முன்னிட்டு வெளிவரும் இம் மலரில் இவ்வா...
அடைகின்றேன். பண்டைக் காலத்துறைமுகமாக விளங்கியது ஊர்காவற்றுறை, அத்துறை வழியாக வைத்திலிங்கச் செட்டி...
கோயில் அமைக்க எடுத்து வந்தார். வரும் வழியில் களைப்பு மிகுதியால் ஓய்வு எடுப்பதற்காகக் குறித்த இவ் வெள்ளை...
தற்கு விக்கிரகங்களை எடுத்த போது எம் பிள்ளையாரைத் தூக்க முடியவில்லை. அதனால் அவ் இடத்திலேயே விட்டு...
பராமரிக்குமாறு கூறிச் சென்றுவிட்டார். அதன் பின்னர் ஊரவர்களாகிய எமது மூதாதையர் குடில் அமைத்து ஆலயமாக்...
பதிவேடு எடுத்துக் காட்டுகின்றது. யாழ்ப்பாணம் கச்சேரியில் உள்ள 1769,1832 ஆம் ஆண்டு பதிவேடுகளில் பதியப்பட்...
ன்றன. ஆலயம் அமைந்துள்ள காணி உறுதி விநாயகர் பெயரிலேயே தோம்பு இருப்பது சான்றாகும். இவ்வாலயம் அ...
ளமணல் கும்பிகளாகக் காணப்பட்டன. அம்மணல் கும்பிகளில் எலிகளாலே புற்றுக்கள் எடுக்கப்பட்டிருக்கலாம். அப்புற்று...
அச்சூலில் அமைந்த இந்த ஆலயத்துக்கு வீரகத்திப் பிள்ளையார் என அடியார்கள் பெயரிட்டு அழைத்திருக்கலாம் என...
ஓலைக்குடிலாக இருந்த ஆலயம் கற்களால் அமைத்து கிணறுகளும் கட்டி உள் வீதியைச் சுற்றி ஏறக்குறைய இரண்...
மதில்களும் அமைந்திருந்தன. ஆலயத்தின் வளர்ச்சியில் சுப்பிரமணியம் வினாசித்தம்பி அவர்கள் சிறப்பு இடம்பெறுவார்...
பத்தினையும் வெள்ளை வைரக்கல்லால் அமைத்து ஆலய வளர்ச்சிக்கு வித்திட்டார். 1951ஆம் ஆண்டு கும்பாபிஷேக நி...
அதன் பின்னர் குறிப்பிடத்தக்க வளர்ச்சி வந்ததனை வழிபடுவோர் சபையால் ஆலய நிர்வாகம் 1982 ஆம் ஆண்டு பொ...
ஷேகங்கள் சிறப்பாக நடைபெற்றன.1982 இல் இருந்து 1990ஆம் ஆண்டு காலப்பகுதியை ஆலயவளர்ச்சியின் பொற்கால...
ப்பட்டு தேர்த்திருவிழா ஆரம்பிக்கப்பட்டது.

இக்காலப்பகுதியாகும் . அழகான சுற்றுமதில் அமைக்கப்பட்டன . ஆலய வளர்ச்சியின் அடுத்தகாலகட்டம் இடப்பெயர்வி...
ரர்ராகும். இக்காலப்பகுதியில் ஆலயத்தின் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு 2005 ஆம் ஆண்டு ஆவணி 21 இல் கும்பாபி...
போடப்பட்டது. வசந்த மண்டபமும் தேர் முடியும் அமைக்கப்பட்டு உள்வீதி மடண்டபம் புதுப்பிக்கப்பட்டு,கலியாண மண்ட...
ப்புற்று விளங்குகின்றது. ஏவிளம்பி வருடப்பிறப்பில் நடைபெறும் தேர்த்திருவிழாவை முன்னிட்டு உதயன்பத்திரிகையில்...
தகவல்களை கூறுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

**நடராசா தனபாலசிங்கம் தலைவர் , மண்கும்பான் வெள்ளைப் புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயக... தேவஸ்...**


## விளம்பர அனுசரணை...

**மண்கும்பான் வெள்ளைப்புற்றடி விநாயகரின் தேர்த்திருவிழா சிறப்புற இடம்பெறவ...**



நடராசா கஜந்தன்
அனைத்து ...

# நியூ மைதிலி ஜு ...

அக்சுஷயதிருதியை முன்னிட்டு
(29.03.2017 தொடக்கம் 29.04.2017) தங்கநகைகளை கொள்வனவு செய்...
அதிர்ஸ்டலாபசீட்டு மூலம் நியூ மைதிலி ஜுவலர்ஸ் இன் வெற்றியா...

(குறிப்பு:- 10 பவுண் மற்றும், 5 பவுண், 2 பவுண் கொள்முதல் செய்யும் வாடிக்கையாளர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படு...
ஓடர் செய்யும் பொருளின் 90% பணத்தை செலுத்தி முற்பதிவு செய்துகொள்ள வேண்டும். பரிசில்கள் அனைத்தும் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்ப...

**அருள் விநாயகர் மோட்டோர்ஸ்**
இல. 108, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
கிளை: இல. 262, கண்டி வீதி,
சாவகச்சேரி.

**அருள் விநாயகர் றேடர்ஸ்**
இல. 106, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5558

**கந்தவேலன் றேடர்ஸ்**
110, Stanley Road,
Jaffna.
T.P. 021 222 2822,
Fax: 021 222 4496

**ஹரன் ரேடர்ஸ்**
சகல விதமான
மோட்டோர்ஸ் இயந்திர
உபகரணங்களை பெற்றுக்
கொள்ளலாம்.
71A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**புதிய நதியா நகைமாடம்**
உங்கள் ஓடர் நகைகளை குறித்த
தவணையில் நாகரிகமான டிசைன்களில்
உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்.
புதிய நதியா நகைமாடம்
103,73, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**சாரங்கா நாணயமாற்று சேவை**
**சாரங்கா நகை மாடம்**
157/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 021 222 6972

**சண் ரான்ஸ்போட் லொறி மற்றும் வட்டா**
(TATA)
வாடகைக்கு உண்டு.
153, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 077 959 5142, 077 345

**பாலவிநாயகர் மோட்டோர்ஸ்**
No. 8, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**ஐங்க...**
மோட்டே...
137, ஸ்ரான்...
யாழ்ப்ப...


## விசேட மேளக்கச்சேரி அனுசரணையாளர் : தேர்த்திரு...

1. அளவெட்டி MP.பாலகிருஸ்ணன் குழுவினர்
2. நாச்சிமார் கோயிலடி சுப்பிரமணியம் குழுவினர்
3. மறைந்தும் மறையாத தொட்... ...யசங்கர் குழுவினர்
4. மானிப்பாய் கந்தன் குழுவினர்
5. பஞ்சமூர்த்தி குமர...
6. ஆனந்தகனேஸ் வ...
7. உடுப்பிட்டியூர் தொ...
8. உடுப்பிட்டியூர் துள...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




ருடப் பிறப்புச் சித்திரை முதலாம் திகதி இன்று (14.04.2017) இவ்வாலயத்தின் தல வரலாற்றைக் குறிப்பிடுவதில் மகிழ்ச்சி செட்டியார் என்பவர் பல விக்கிரகங்களை யாழ்ப்பாணத்தில் வெள்ளைப் புற்றடியில் வைத்துள்ளார். களைப்பாறிச் செல்வ- விட்டு காவோலையால் நிழல் அமைத்து உள்ளவர்களைப் யமாக்கி வழிபட்டு இவ்வாலயத்தின் தொன்மையை கோயில் யப்பட்டுள்ளமை ஆலயத்தின் பழைமையைப் பறை சாற்றுகி- பம் அமைந்துள்ள சூழல் அன்று வெள்ளை மணல் கும்பிக- புற்றுக்கள் வெள்ளை மணல் புற்றுக்களாக இருந்ததனால் ம் எனக் கொள்ள இடமுண்டு.

இரண்டு அடி அகலம் கொண்ட சுண்ணாம்பால் கட்டப்பட்ட றுவார். மூலஸ்தானத்தையும் அதனை அடுத்த அர்த்த மண்ட- ஷேக நிகழ்வு அனைவராலும் சிறப்பாகப் பேசப்பட்டு வந்தது. டு பொறுப்பேற்கப்பட்டபின்னராகும். தொடர்ந்து பல கும்பாப- ற்காலமாகக் குறிப்பிடலாம். ஊள்வீதி ,மண்டபம் அமைக்க-

பயர்வின்பின் மீள் குடியேறிய 2000 ஆம் ஆண்டுக்குப்பின்ன- ம்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. நிலத்துக்கு றொசோ மண்டபமும் அமைக்கப்பட்டு ஆலயம் புதுப்பொலிவுடன் சிற- கையில் வெளிவரும் அம் மலரில் எனக்குத் தெரிந்த சில

தேவஸ்தானம்.

## மகோற்சவ குருவின் அருளாசியுரை

சிவபூமி என விளங்கும் இலங்கை மணித் திருநாட்டின் வடபால் அமைந்த பான் வெள்ளைப்புற்றடி என்னும் பதியில் எழுந்தருளி அடியவர்களின் இடர்களைக் களைந்து அருள் பாலித்துக் கொண்டு இருக்கும் ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானின் திவ்வியமான மகோற்சவ விழாவில் சர்வமங்கலம் பொருந்திய ஐய வருடப்பிறப்பான இன்று விக்கினங்களைத் தீர்க்கும் விநாயகப் பெருமான் அழகிய தேரில் ஆரோகணித்து மஹா ராஜவீதியில் வலம் வந்து அருள் பாலிக்கின்ற சுப வேளையில் ஆகமங்கள் கூறுகின்ற வகையில் அடியவர்களின் அனைத்துவித விருப்பங்களும் நிறைவேறவும் நீண்ட ஆயுள் பெறவும் லக்ஷ்மி கடாட்க்ஷம் கிடைக்கவும் பக்திநெறி வளரவும் விநாயகப் பெருமானின் பாதம் பணிந்து அருளாசி கூறுகின்றேன்.

**“கணேச உபாசகர் சிவானுபூதி”**
**மஹா கணபதிப்பிள்ளையார் கோயில் சித்தன்கேணி**

போக மறுத்தவன் தேரேறி வருகின்றான்!

பல்லவி

சித்திரத் தேரேறி வரும்
கண்கொள்ளாக் காட்சி-எங்கள்
சித்தமெல்லாம் குளிர்ந்திடுமே
அப்பன் அருளாட்சி,

அனுபல்லவி

போக மறுத்தவன் தேரினிலே
பவனி வரும் போதினிலே
தேக மெல்லாம் சிலிர்த்திடுமே
தெய்வ சுகம் கிடைத்திடுமே

சரணங்கள்

இடம்விட்டு நகரேனென அடம்பிடித்தவா-இங்கே
இடம் கொண்டு எம்மின்னல் உடன் துடைப்பவா.
இடம்விட்டு அலைகின்ற எம்மைக்காப்பவா –உந்தன்
வடம் தொட்டு இழுக்கின்றோம் வரம்நல்கவா

ஆக்கம்
கவிக்கதிரோன்
வேலணையூர் சுரேஷ்.

## ணையாளர்கள்

றவும் விநாயகர் அருள் எல்லோருக்கும் கிடைக்கவும் வேண்டி வாழ்த்துகின்றோம்.
ந்து வாடிக்கையாளர்களுக்கும் இனிய சித்திரைப் புதுவருட வாழ்த்துக்கள்

வலர்ஸ்

செய்து வாடிக்கையாளர்களின்
றியாளராகுங்கள்.
ங்கப்படும்)
சய்யப்படும்.

We accept mastercard & visa card
American Express

உங்களது தங்க நகைகளின் தரத்தை
துல்லியமாக உறுதிப்படுத்துவதற்கான
இலத்திரனியல் கருவி எம்மிடம் உண்டு



Karat Meter available here



இல. 38,40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 221 7878, 7877 newmaithily Jewellers newmaithily40@gmail.com

Yarl Maithely Jewellers
79z Sea Street, Colombo-11
T.P. 011 239 6239
Nagai Madam
மைதிலி நகை மாடம்
தங்கநகை வியாபாரி
89 V, Kasthuriyar Road,
Jaffna. 021 222 7902

நதியா நகைமாடம்
இல. 02, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 3479
உங்கள் ஆதரவுக்கு நன்றி!

சிறி மதனா நகை மாளிகை
தங்கப்பவுண் நகை வியாபாரம்
ஓடர் நகைகள் 22 கரட்டில் குறித்த
தவணையில் செய்து கொடுக்கப்படும்.
இல,155/M கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 7772

நியூ பிரியங்கா நகை மாளிகை
Genuine 22kt Jewellery
Manufacturing Jewellery
2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
Tel. 021 222 5644
69, யாழ். வீதி,(A9), கிளிநொச்சி,
(Front Kachcheri)
T.P. 021 320 8611, 077 717 5059

ங்கரன்
ட்டோர்ஸ்
ஸ்ரான்லி வீதி,
ழ்ப்பாணம்.

லலிதா ஜுவலர்ஸ்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
டுயடவைாய துநறநடடநசள
75இ கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 021 222 2863

அருள்நிலா நகை மாடம்
தங்கப்பவுண் நகைவியாபாரம்
22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு
உத்தரவாதத்துடன் செய்து
கொடுக்கப்படும்.
74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 710 6042

புதிய நவீனா நகையகம்
Navena Nakaiyakam
Genuine 22 Kt Jewellery
Manufacturing Jewellery
191, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 711 5625, 021 222 7114

அம்பிகை ஜுவலர்ஸ்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
22 கரட் தங்க நகைகள்
ஓடருக்கு உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.
T.P. 021 222 2538

## திருவிழா உபயகாரரும் கை.கணேசையா குடும்பத்தினர்

தமரன் குழுவினர் இனுவில்
ஸ் வசந்தன் குழுவினர் இனுவில்
தொட்டணா குழுவினர்
துளசி குழுவினர்

9. இனுவில் P.S.விசிகரன் குழுவினர்
10. பருத்தியூர் குட்டி குழுவினர்

இவர்களுடன்...
மங்கல வாத்தியம் P.S. பிச்சையப்பா
R. நாகசுதன் குழுவினரும்
இணைந்துகொள்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக விவசாயிகளுக்கு ஆதரவு தெரிவித்து கத்திப்பாரா மேம்பாலத்தில் திடீர்ப் போராட்டம்

சென்னை, ஏப். 14
டெல்லியில் போராடிவரும் தமிழக விவசாயிகளுக்கு ஆதரவு தெரிவித்து சென்னை கத்திப்பாரா மேம்பாலத்தில் இயக்குநர் கௌதமன் தலைமையில் நேற்றுக் காலை திடீர்ப் போராட்டம் நடத்தப்பட்டது.
பல்வேறுபட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழக விவசாயிகள் டெல்லி ஜந்தர் மந்தர் பகுதியில் ஒரு மாத காலமாகத் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.
நாளுக்குநாள் அவர்களுக்கு ஆதரவு பெருகி வருகிறது. இயக்குநர் கௌதமனும் அவர் தலைமையில் சில இளைஞர்களும் சென்னை கத்திப்பாரா மேம்பாலத்தில் திடீர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.
மேம்பாலத்தின் கதவுகள் அடைக்கப்பட்டதால் கிட்டத்தட்ட 30 நிமிடங்கள் போக்குவரத்துப் பாதிப்பு ஏற்பட்டது.
போராட்டக்காரர்கள் கைதுசெய்யப்பட்டதை அடுத்து போக்குவரத்து சரிசெய்யப்பட்டது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

# விவசாயிகள் போராட்டம் ஒரு மாதத்தை எட்டியது


## எனினும் கண்டுகொள்ளவில்லை மோடி

சென்னை, ஏப். 14
பல்வேறுபட்ட கோரிக்கைகளை முன்வைத்து இந்தியத் தலைநகர் டெல்லியில் தமிழக விவசாயிகள் முன்னெடுத்துவரும் அறப்போராட்டம் இன்றுடன் ஒரு மாதத்தை எட்டியது.
தேசிய, தனியார் மற்றும் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்றுள்ள பயிர்க்கடன்கள் அனைத்தையும் தள்ளுபடிசெய்வது, காவிரி மேலாண்மை வாரியம் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தமிழக விவசாயிகள் டெல்லியில் கடந்த மாதம் 14 ஆம் திகதியில் இருந்து தொடர்ந்து போராட்டம் நடத்திவருகின்றனர்.
பாம்பு, எலி போன்றவற்றைக் கடித்துக் கொண்டும், பாதி மீசையை வழித்துக் கொண்டும், அரை நிர்வாணமாகவும், நிர்வாணமாகவும், எலும்புக் கூடுகளுடனும், சாவு வீடு நடத்தியும், ஒப்பாரி வைத்தும் போராட்டங்களை நடத்தி உலகின் கவனத்தை ஈர்த்துள்ள இவர்களுக்கு நாளுக்கு நாள் ஆதரவு பெருகிக்கொண்டே வருகிறது. தமிழக அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட இந்திய அரிசியல் தலைவர்கள் பலரும் இவர்களை நேரில் சந்தித்து ஆதரவு வழங்கியுள்ள போதிலும் இந்தியப் பிரதமர் மோடி இந்த விடயத்தில் கண்டும் காணாத போக்கையே கடைப்பிடிக்கிறார். மோடி தம்மைச் சந்தித்து தமது குறைகளைக் கேட்கும் வரை போராட்டம் தொடரும் என்பதில் விவசாயிகளும் விடாப்பிடியாக உள்ளனர். மக்களவை துணைத்தலைவர் எம்.தம்பிதுரை தனது சகாக்களுடன் விவசாயிகளை நேற்று நேரில் சந்தித்தார்.
"தமிழக விவசாயிகளின் கோரிக்கை மனுக்களை அ.தி.மு. கழகத்தின் சார்பில் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் மத்திய நிதி அமைச்சர் அருண் ஜேட்லி ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒரு தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை இருப்பதால் விவசாயிகள் தங்கள் போராட்டத்தைக் கைவிட வேண்டும்" என்று அவர் கேட்டுக் கொண்டார்.
எனினும் தம்பித்துரையின் இவரின் கோரிக்கையை மறுத்து விவசாயிகள் தமது போராட்டத்தைத் தொடர்ந்து வருகின்றனர். (ம)



# குடியேறிகளுக்கு ஆதரவாக ட்ரம்புக்கு நிபுணர்கள் மடல்

அமெரிக்காவில் குடியேறுபவர்களுக்கு ஆதரவு தெரிவித்து அமெரிக்க அதிபர் ட்ரம்புக்கு பொருளாதார நிபுணர்கள் ஆயிரத்து 470 பேர் கடிதம் எழுதியுள்ளனர் என்று அமெரிக்க ஊடகங்கள் குறிப்பிட்டன.
குடியேறுபவர்களை வெளியேற்றுவதன் மூலம் கணிதம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் ஏற்படும் பொருளாதார இழுவை குறித்து கடிதத்தில் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர் என்று தெரிகிறது.
இது தவிர ஸ்மார்ட் குடியேற்றக் கொள்கை மூலம் சிறந்த குடியேற்றத்தை அளிக்கும் விதமாக, அவர்களின் நன்மைகளை அதிகப்படுத்தி செலவுகளைக் குறைக்க செய்வது உள்ளிட்டவற்றையும் அவர்கள் வலியுறுத்தியுள்ள னர்.
ட்ரம்புக்கு மடல் அனுப்பிய நிபுணர்களில் 6 பேர் நோபல் பரிசு வென்றவர்கள். முன்னாள் அதிபர் பராக் ஒபாமாவின் பொருளாதார ஆலோசகரான அஸ்டன் கூல்ஸ்பியும் ட்ரம்புக்குக் கடிதம் அனுப்பியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)




# 2,250 கோடி ரூபா இழப்பீடு மெலனியா ட்ரம்ப் பெற்றார்

*'பாலியல் தொழிலாளி' செய்திக்காக கொடுத்தது பிரிட்டன் டெய்லி மெய்ல்*

வொஷிங்டன், ஏப். 14
அமெரிக்காவின் முதல் பெண்மணியான மெலனியா ட்ரம்ப் ஒரு பாலியல் தொழிலாளி என்று செய்தி வெளியிட்ட டெய்லி மெய்ல் பத்திரிகை தனது செய்திக்காக இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 2 ஆயிரத்து 250 கோடி ரூபாவை இழப்பீடாகக் கொடுத்துள்ளது.
அமெரிக்க அதிபர் தேர்தல் கடந்த வருடம் நடைபெற்றது. குடியரசுக் கட்சியின் சார்பில் ட்ரம்ப் போட்டியிட்டு வெற்றிபெற்றார். தேர்தல் பரப்புரைக் காலத்தில் ட்ரம்பின் மனைவியான மெலனியா ஒரு பாலியல் தொழிலாளி என்று பிரிட்டன் டெய்லிமெய்ல் பத்திரிகை செய்தி வெளியிட்டது. எதிர்ப்பை அடுத்து செய்தி திரும்பப் பெறப்பட்டது.
இந்தச் செய்தி தனக்கு ஏற்படுத்திய களங்கத்துக்காக மெலனியா 150 மில்லியன் டொலர்களை (இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 2 ஆயிரத்து 250 கோடி) இழப்பீடாகக் கேட்டு வழக்குத் தொடர்ந்திருந்தார். இழப்பீடு கொடுக்க டெய்லி மெய்ல் ஒப்புக்கொண்டதை அடுத்து லண்டன் உயர்நீதிமன்றம் அந்தத் தொகையைப் பெற்றுக்கொடுத்தது. (ம)





ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரான மோசூலின் மேற்குப் பகுதியில் ஐ.ஸ்.எஸ். அமைப்புக்கு எதிரான போர் கடுமையாக இடம்பெற்று வருகிறது. மேற்கு மோசூலின் முக்கிய அடையாளங்களில் ஒன்றான பல்கலைக் கழகத்தின் தற்போதைய நிலையே இது. இதன் பல பகுதிகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. குறிப்பாக பல்கலைக் கழக நூலகத்தில் வைக்கப்பட்டிருந்த பெறுமதி வாய்ந்த அரிய புத்தகங்கள் பல தீயிட்டுக் கொழுத்தப்பட்டுள்ளன. பல்கலையின் முக்கிய ஆயுவு கூடத்தை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தமது இராணுவ நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தியுள் [illegible] (ம)




# அடிமைகள் விற்பனை லிபியாவில்

அடிமைகள் வியாபாரம் லிபியாவில் நடைபெற்று வருகிறது என்று பன்னாட்டு அகதிகள் அமைப்பின் அண்மைய அறிக்கையொன்று சுட்டிநிற்கிறது.
ஈராக், சிரியா, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், சோமாலியா, சூடான் ஆகிய நாடுகளில் உள்ள உள்நாட்டு போர்ச் சூழல் காரணமாக ஐரோப்பாவுக்குச் செல்ல முடிவெடுக்கும் மக்களில் பலரும் லிபியாவுக்கு வந்து அங்கிருந்தே மத்திய தரைக்கடல் வழியாக இத்தாலி நோக்கிப் பயணிக்கின்றனர். அவ்வாறு செல்பவர்களை சில ஆயுதக் குழுக்கள் பிடித்து லிபியாவில் அடிமைகளாக விற்கின்றன என்று அந்த அறிக்கை மேலும் குறிப்பிடுகிறது. (ம)

# பிரேசில் சிறையில் கலவரம்

பிரேசிலியா, ஏப். 14
பிரேசிலின் மாட்டோ கிராசோ மாகாணத்தில் உள்ள சிறைச் சாலையில் கைதிகளுக்கு இடையே நேற்றுமுன்தினம் ஏற்பட்ட கலவரத்தில் ஐந்து பேர் உயிரிழந்தனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
கைதிகள் இரு குழுக்களாகத் தமக்குள் மோதிக்கொண்டமையை அடுத்தே இந்த அசம்பாவிதம் இடம்பெற்றது. அளவுக்கதிகமான கைதிகளை அடைத்து வைத்திருந்தமையே இந்த மோதலுக்குக் காரணம் என்று பிரேசில் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னம்பிக்கையை எவருமே தவிடு பொடியாக்க முடியாது

கே.எஸ்.சிவஞானராஜா



"ஒவ்வொரு மாணவனையும் தன்னம்பிக்கையில் வல்லவனாக உருவாக்கி வாழ்வாங்கு வாழச் செய்வதற்கு உரித்தான கல்வியை வயதிற்கேற்க ஊட்டுவதாகும். ஒவ்வொரு பாடசாலையும் மாணவர்களை நல்ல பிரஜையாக்குவதற்கான தூரநோக்கு பணிக்கூற்று ஆகிய இரண்டையும் வெளிப்படையாகக் காட்சிப்படுத்தி மாணவ சமூகத்திற்குத் தன்னம்பிக்கையை ஊட்டி தமது இலக்கையடையப் பாடுபடுகிறது. ஆகவே ஒரு பாடசாலையின் குறிக்கோள் எதுவெனில், காலத்தின் தேவைக்கேற்ப நாட்டுக்குப் பயன்படுமாறு வினைத்திறன்மிக்க மாணவர்களை உருவாக்குவதாகும்.

விஞ்ஞானியும், மெஞ்ஞானியும் தாம்சார்ந்தபணிகளில்வெற்றி பெறுகிறார்கள் என்றால் அவரவர்களுக்குள்விளைந்திருக்கும் தன்னம்பிக்கையே பிரதான காரணமாகும். இது அடிமனதில் ஊற்றெடுப்பதனால்தான் அவர்களின் குறிக்கோள்கள் தோல்விபெற்றாலும் ஈற்றில் அபாரமாக ஈடேறியே வெற்றியைத் தழுவுகிறது.

**மகிமை**

ஆத்மார்த்தமாகநீங்கள்சாதிக்கமுடியும்என்ற ஒன்றைமட்டும்குறிக்கோளாக்கிக்கொள்வதே தன்னம்பிக்கையின் இருப்பிடமாகும். குறிக்கோளைத் திடமாகவும், உறுதியாகவும் எய்திவிட முனையும்போது பல சோதனைகளையும், வேதனைகளையும், தோல்விகளையும் சந்தித்தேயாக வேண்டும்.

இவையனைத்தையும் கண்டு மனம் சோர்ந்துவிடவோ துவண்டு விடவோ கூடாது. குறிக்கோள் என்பது சிறுபிள்ளைத்தனமாகவோ அல்லதுவேசமுள்ளதாகவோஇருத்தலாகாது. மிகவும் புனிதமுள்ளதாக, ஆன்மிகமுள்ளதாக தனக்குள்ளே பெருமிதம் அடைவதாக தன்னம்பிக்கை வேர் விடுவதாக, முகத்தில் பூரிப்படைவதாக, சலசலப்பில்லாததாக ஆரவாரம் இல்லாததாக இலக்கை நோக்கிப் பயணிப்பதாக இருத்தல் அவசியம்.

விஞ்ஞானிகளின் இலக்கும் மெஞ்ஞானிகளின் இலக்கும் அவர்கள் சார்ந்த தன்னம்பிக்கையும் ஒருபோதும் விளம்பரமாவதும் இல்லை, தவிடுபொடியாவதுமில்லை. முக்கியமாக எதிலும் ஆழமான ஆசையை வைப்பதில்விருப்பம்கொள்வதுமில்லை. வளர்ப்பதும் இல்லை. இல்லறத்தில்முற்றுமுழுதாகமூழ்குவதுமில்லை. கடமையில் மூழ்க மூழ்க கடவுள் துலங்குவான். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, தன்னம்பிக்கை, குறிக்கோள் இந்த ஐந்துமே ஒரு மனிதனின் வாழ்வுக்கு இலக்கணங்களாகும். இந்த ஐந்தினையும் பெற்றுத்தருவதாகவே ஆலயங்களும்பாடசாலைகளும் உயிர்பெற்று மிளிர்கின்றன. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சைவவினாவிடையில் மனிதப்பிறப்பின் நோக்கம் பற்றிக் குறிப்பிடும்போது,

"சமயநெறி நின்று
வாழ்வாங்கு வாழ்ந்து
முத்தி பேறடைவதாகும்"

எனவே சமயம்-வாழ்வு, முத்தி ஆகிய மூன்றினுள்ளேயும் நுழைந்து வெற்றியடைவதிலேதான் மனிதப் பிறப்பு வரமாகிறது.

**நல்ல பிரஜை**

கல்வியின் நோக்கம், நாட்டுக்கேற்ற நற்பிரஜையை உருவாக்குவதேயாகும். ஒவ்வொரு மாணவனையும்தன்னம்பிக்கையில்வல்லவனாக உருவாக்கி வாழ்வாங்கு வாழச் செய்வதற்கு உரித்தான கல்வியை வயதிற்கேற்க ஊட்டுவதாகும்.

ஒவ்வொரு பாடசாலையும் மாணவர்களை நல்ல பிரஜையாக்குவதற்கான தூரநோக்கு பணிக்கூற்று ஆகிய இரண்டையும் வெளிப்படையாகக் காட்சிப்படுத்தி மாணவ சமூகத்திற்குத் தன்னம்பிக்கையை ஊட்டி தமது இலக்கையடையப் பாடுபடுகிறது.

ஆகவே ஒரு பாடசாலையின் குறிக்கோள் எதுவெனில்,

காலத்தின்தேவைக்கேற்பநாட்டுக்குப்பயன்படுமாறு வினைத்திறன்மிக்க மாணவர்களை உருவாக்குவதாகும்.



**மாணவர்கள்**

வீட்டுக்கும் நாட்டுக்கும் பயன்படுமாறு கடமையாற்றக் கூடிய சேவைகளையே மாணவர்கள் இலட்சியமாகக் கொள்வார்கள். உதாரணமாக பின்வருமாறு கூறுவார்கள். நான் ஒரு டாக்டர் இன்ஜினியர், ஆசிரியன், ஜனாதிபதி பிரதமமந்திரி, நீதிவான் விவேகானந்தர், பாரதியார், மகாத்மா காந்தி அப்துல் கலாம், அப்பேத்கார், தங்கம்மா அப்பாக்குட்டி, சட்டத்தரணி இவ்வாறு ஒரு உன்னத இலக்கை அடையாளப்படுத்துவார்கள். அதுசரியானதே. அந்த இலக்கு தன்னம்பிக்கையோடுவெற்றிபெற, பெற்றோர் தொடக்கம், சமூகம், பாடசாலை, ஆலயங்கள் எனக்கூட்டுப்பொறுப்புடன்இயங்குவார்களாக இருந்தால் எடுத்துக் கொள்ளப்பட்ட குறிக்கோள் வெற்றிபெற்றே தீரும். ஏதாவது ஒரு அம்சம் தடங்கலை ஏற்படுத்துமாயின் அடிமனதில் ஆழவேபதிந்து மௌனிக்காது போராடிக் கொண்டேயிருக்கும். ஏதோ ஒரு விதத்தில் வெளிப்பட்டே தீரும்.

**டிஸ்ரேலி**

இங்கிலாந்தைச் சேர்ந்த பெஞ்சமின் டிஸ்ரேலிக்கு ஒரேயொரு ஆசை. அவர்இலக்கியவாதியாகஇருந்தபோதும்இங்கிலாந்துநாட்டின்பிரதமமந்திரியாகவர வேண்டுமென்பதேஅந்த ஆசையாகும். இதைதன் மனைவியிடமும் சொல்லி தன்னம்பிக்கையை வளர்த்துக் கொண்டார். மனைவியோ அந்த இலட்சியத்தை ஒருபோதும் ஏற்கவுமில்லை. அங்கீகரிக்கவும்இல்லை. தவிர்க்கமுடியாதசந்தர்ப்பதில்டிஸ்ரேலியை அவரது மனைவி கடிந்து கொண்டார். அப்போதுடிஸ்ரேலிதனது மனைவியிடம் கூறியதாவது:

எனதன்பே நீ இங்கிலாந்தின் வருங்காலப் பிரதமமந்திரியின்மனைவிஎன்பதைமறந்துவிட்டுப்பேசுகிறாய்"என்றுசொன்னபோது மனைவியோகெக்கட்டம்போட்டுச்சிரித்தாள். இத்தனைக்கும் அவர் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் கூட இல்லை. ஆனாலும் அவரது தன்னம்பிக்கையும் குறிக்கோளும் ஒன்றுசேர்ந்துடிஸ்ரேலியைஒருபிரதமராக மாற்றியே விட்டது. டிஸ்ரேலி ஒருவர் மட்டுமல்ல, இலங்கையிலும் தரம் 5 உச்சப்புள்ளியைப் பெற்றுக் கொண்ட ஒரு பிள்ளை தான் ஜனாதிபதியாவதுதான் தனது இலட்சியம் என்று ஊடகங்களுக்கு வழங்கிய ஒரு செல்வி வீண்போகாமல் நீடு வாழ வேண்டும். அதோடு நின்றுவிடாமல் அந்தப் பிள்ளையினுடைய தன்னம்பிக்கையும் தவிடு பொடியாகாமல் வெற்றிபெறவேண்டும் எனப் பிராத்திப்போமாக. இன்னுமொறு சம்பவம்.

**கண்ணதாசன்**

ஒரு இளைஞன். அவன் தமிழ்ப் பிரியன். இலச்சியச் சுவைஞன். இரச ஞானச் செம்மல். கேள்வி ஞானமுடையவன். இத்தகைய சூழ்நிலையில் ஒரு கவிதைப் போட்டி ஊடங்களில் பிரசுரிக்கப்படுகிறது.

மேற்படி இளைஞன் இக்கவிதைப் போட்டியில் பங்குபற்றுகின்றான். பரிசு கிடைக்கவேயில்லை. (எங்களைப்போல). ஆனால்பரிசுபெற்றவர்கள்எங்கேபோனார்கள் என்றுஇன்றுவரை அறிமுகமாகவில்லை. ஆனால் தோற்றுப்போன அந்த இளைஞன் வேறுயாருமல்ல. அவன்தான் என்றும் பிரபல்யமான கவிஞர் கண்ணதாசன். அவன் பரிசு கிடைக்கவேயில்லை என்றுசோர்ந்து போனாமல், விடாமுயற்சி, தன்னம்பிக்கையோடு குறிக்கோளை வென்ற பெருங்கலைஞனாக இந்த மண்ணில் உயிரோடு வாழ்கின்றான். எனவே ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்கும் தன்னம்பிக்கையும் குறிக்கோளையும் வென்று சரித்திரம் படையுங்கள். யாருமே அதைத்தவிடுபொடியாக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# வன்முறையைத் தவிர மக்களுக்கு வேறு வழியில்லையா?

எல்லாச்சட்டங்களும்வன்முறையைத்தவறு என்கின்றன. வன்முறையில் ஈடுபடுபவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். அவர்களின் கோரிக்கையில் எவ்வளவுதான் நியாயங்கள் இருந்தாலும் எவரும் வன்முறையில் ஈடுபட முடியாது. பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வன்முறை வழியல்ல. வன்முறையால் எந்தவொரு தீர்வையும் பெற்றுவிட முடியாது. இவையெல்லாம் நாம் கேள்விப்பட்ட விடயங்கள்தான்.

எல்லா அரசுகளும், சட்டம் ஒழுங்கு பாதுகாவலர்களும் இதனைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். வன்முறையில் ஈடுபடாதவர்கள், சட்டத்தை மீறதாவர்களே நல்லவர்கள் என்று எமக்குப் போதிக்கப்படுகிறது. ஆனால், வன்முறைக்குக்கொடுக்கும்முக்கியத்துவத்தைஇந்தஅரசுகள் அமைதிவழிப்போராட்டத்திற்குக்கொடுக்கின்றனவா? அப்படியானால் எது அதிகம் சக்தி வாய்ந்தது?

மாதக்கணக்கில்தொடர்ந்துவரும்போராட்டங்களைப்பார்க்கின்றபோது இந்தக் கேள்விகளைத் தவிர்க்க முடியவில்லை. அமைதியான, வன்முறையற்ற போராட்டங்களுக்கு இந்த அரசுகள்மதிப்பளிக்கின்றனவாஎன்கிறகேள்விதீவிரமாகவே எழுகின்றது.

தமது காணிகளைத் திரும்பக் கேட்கும் மக்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், படையினரிடம் கையளிக்கப்பட்ட பின்னர் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், பட்டதாரி மாணவர்கள் என்று போராட்டங்கள் தொடர்ந்து நடக்கின்றன. மாதங்களைக் கடந்தும் அவை தொடர்கின்றன. ஆனால், அவற்றுக்குஎந்தப்பதிலையும்அரசு இதுவரையில் தரவில்லை. இறங்கி வந்து போராட்டக்காரர்களுடன் பேசுவதற்குக்கூட அது தயாராக இல்லை.

இதுவே, அங்கே ஓர் வன்முறை நடத்திருந்தாலோ, குண்டு வெடிப்பு நிகழ்ந்திருந்தாலோ அரசு துடித்துப் பதைத்துக் கொண்டு அந்தப் பிரச்சினையின் மீது கவனத்தைச் செலுத்தியிருக்கும். அத்தகைய வன்முறையால் பாதகமான பலவும் நடக்கும் என்பதை எவரும் மறுக்க முடியாது என்கிற போதிலும் உரியவர்களின் கவனம் அதன் மீது உடனடியாகத் திரும்பியிருக்கும். இதற்கு அர்த்தம் வன்முறையால் பிரச்சினைக்குத்தீர்வுகிட்டிவிடும்என்பதல்ல. அரசினதோ அல்லது அதிகாரத்தினதோ கவனத்தை வன்முறையால் இலகுவில் ஈர்த்துவிட முடிகின்றது என்பதுதான்.

அதேயளவு ஈர்ப்பை அமைதிவழிப்போராட்டங்களால்பெற முடியவில்லை என்பதே யதார்த்தமாகி இருக்கிறது. இங்கு மட்டுமில்லை, இந்தியாவிலும் இதுதான் நிலமை. அங்கும் தமிழ்விவசாயிகள்தலைநகர்புதுடில்லியில்தொடர்ந்துநடத்திவரும் பேராட்டம் அந்த நாட்டு அரசின் கவனத்தை ஈர்க்கவில்லை.

இத்தகையபுறக்கணிப்பின்மூலம்அரசுகள்தமதுமக்களுக்குச் சொல்லமுயல்வதுஎன்ன? அமைதிவழியில்போராடுவதால் பயன் எதுவும் இல்லை என்கிற செய்தியா? மக்களைத் தவறானவழிக்குச்செல்லத்தூண்டிவிட்டபின்னர்அவர்கள்தவறு செய்துவிட்டார்கள்என்றுகொதித்துக்கொந்தளிப்பதில்பயன் ஏதும் இல்லை. மக்கள்தவறானபாதைக்குச்செல்லாமல்இருப்பதற்கு அவர்களுக்கு நல்ல பாதை காட்டப்படவேண்டும்.

ஒரு மாதத்துக்கு மேலாகப் போராடியும் அரசு தம்மைக் கண்டுகொள்ளாமல் இருப்பதைப் பார்த்து வெறுக்கும் அந்த மக்களை எத்தகைய முடிவையும் எடுக்கலாம் என்கிற மனோநிலைக்குச் செல்ல அரசுகள் தூண்டக்கூடாது. அவர்களின் அமைதி வழிப் போராட்டத்தை அங்கீகரித்து, அவர்களோடு பேசி, பிரச்சினையைத்தீர்ப்பதற்குஉடனடியாகநடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதிலும்குறிப்பாக, நீண்டவன்முறைப்போராட்டம்ஒன்றை நடத்தியதமிழ்ச்சமூகம்அதிலிருந்துநீங்கிஅமைதிப்போராட்டங்கள் மூலம் தனது கோரிக்கைகளை வென்றெடுக்க முற்படுகையில்அதனைஅரசுமதிக்காமல்புறக்கணிப்பது, மீண்டும் தமிழ்ச்சமூகம்வன்முறையின்மீதுநாட்டம்கொள்ள வைத்துவிடும். தமிழ் மக்களை மீண்டும் வன்முறைப் பாதைக்குள் தள்ளிவிடும்கைங்கரியத்தைகொழும்புஅரசுசெய்யக்கூடாது. அதைத் தவிர வேறு வழி யில்லை என்னும் நிலைக்குள் அவர்களைத் தள்ளிவிடக்கூடாது.

கட்டுரை

# வல்லரசுகளது பலப்பரீட்சையில் பகடைக்காயாகிப் போன சிரியா

வெ. சந்திரமோகன்

அந்தப்புகைப்படங்களைப் பார்க்கவேமுடியவில்லை. தளிர்களைப் போன்ற அந்தக் குழந்தைகள் உயிரற்ற உடல்களாகக் கிடக்கிறார்கள். கண்ணுக்குத் தெரியாத இரசாயன அரக்கன் அவர்களைமீளாத்துயிலில்ஆழ்த்தியிருக்கிறான். அந்தக்கொடுங்கரங்களின் மறுமுனையில் அதிகார வெறி, வல்லரசுகளுக்குஇடையிலானபோட்டி, வன்முறையின் ருசியைச் சுவைத்த கிளர்ச்சிக் குழுக்கள், ஐ.நா. மற்றும் பன்னாட்டுச் சமூகத்தின் பொறுப்பற்றதனம் என்று எத்தனையோ விசக்கிளைகள்.



சிரியாவின் வடக்கு மாகாணமான இட்லிப்பின், சேகுன் நகரில் கடந்த செவ்வாய்க்கிழமைஅதிகாலைநடத்தப்பட்ட கொடூரத் தாக்குதல் இது. குடியிருப்புப் பகுதிகளுக்கு மேலே பறந்து செல்லும் அடையாளம் தெரியாதவிமானம்இரசாயனவாயுஅடங்கியகுண்டுகளைவீசிவிட்டுச்செல்கிறது. என்ன நடக்கிறது என்றே தெரியாத நிலையில்வாயில்நுரைதள்ள, துடிக்கத் துடிக்க இறந்துபோகிறார்கள் மக்கள். மொத்தம் 86 பேர் என்கிறதுசிரியஅரசு. ஆனால், நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர் என்கிறது பன்னாட்டுச்சமூகம்.

அநேகமாக இட்லிப் மாகாணத்தின் எல்லா மருத்துவ மனைகளும் நிறைந்து வழிகின்றன. கடந்த ஆறு ஆண்டு களாக உள்நாட்டுப் போராலும், ஐ.எஸ். ஐ.எஸ். ஆயுததாரிகள் நிகழ்த்திவரும் கொடூரங்களாலும் சிதைந்து, துவண்டு கிடக்கும் சிரிய மக்கள், இந்தக்கொடுமையைஎப்படி எதிர்கொள்வது என்று தெரியாமல் திகைத்து நிற்கிறார்கள்.

### என்னதான் நடக்கிறது சிரியாவில்?

இது போர்க்குற்றம் என்று அறிவித்துள்ளது ஐக்கிய நாடுகள் சபை. வழக்கம்போல், இந்தப் படுகொலைகளுக்கு எவர் காரணம் என்று பரஸ்பரக் குற்றச்சாட்டுகள், மழுப்பல்கள். சிரிய அதிபர் அல் பசார் அசாத்தின் அனுமதியுடன் சிரிய இராணுவம் தான் இதை நடத்தியது என்று அமெரிக்காவும் பன்னாட்டுச் சமூகமும் குறிப்பாகஜேர்மன், பிரிட்டன்போன்ற நாடுகள்குற்றம்சாட்டுகின்றன. ஐ.நா. சபையும் அதைத்தான் சொல்கிறது. ஆனால், சிரியாவின் கூட்டாளியான ரஷ்யா அதை மறுக்கிறது. என்ன தான் நடக்கிறது சிரியாவில்?




2011இல் தான் சிரிய உள்நாட்டுப் போர் தொடங்கியது. அந்தக்காலகட்டத்தில்தான் 'அரபு வசந்தம்' எனும் பெயரில் துனீஷியா விலும், எகிப்திலும் மக்கள் புரட்சி மூலம் ஆட்சிகள் கவிழ்க்கப்பட்டன. சிரியாவிலும் அரபுப் புரட்சிக்கு ஆதரவான குரல்கள் எழுகின்றன. அதிபர் அல் பசார் அசாத்துக்குஎதிராகப்போராட்டங்கள் வெடிக்கின்றன. அரசுக்கு எதிராகச் செயற்பட்டதான குற்றச்சாட்டில் 15 இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு சித்திரவதை செய்யப்படுகிறார்கள். எதிர்ப்பாளர்களை ஈவுஇரக்கமின்றி நசுக்குகிறது சிரியா அரசு. இராணுவத்திலிருந்து வெளியேறும் அதிருப்தியாளர்கள் 'சுதந்திர சிரிய ராணுவம்' எனும்படையைத்தொடங்குகிறார்கள். அசாத் ஆட்சியைக் கவிழ்க்கும் முயற்சியில் இறங்குகிறார்கள். அமெரிக்கா, துருக்கி ஆகிய நாடுகள் இவர்களுக்கு ஆதரவளிக்கின்றன. ரஷ்யாவும் ஈரானும் சிரியா அரசை, ஆதரிக்கின்றன. இடையில், மனிதகுலம் இதுவரை பார்த்திராத கொடூரங்களைஈராக்கிலும்சிரியாவிலும் அரங்கேற்றுகிறது ஐ.எஸ். ஐ.எஸ். ஆயுதக்குழு.

### சிரிய மக்கள் எதிர்கொள்ளும் வலிகள்

இன்று வரை சிரிய நாட்டு மக்கள் 4.5 லட்சம் பேர் போரில் கொல்லப்பட்டிருக்கிறார்கள். 10 லட்சத்துக்கும்மேற்பட்டோர்காயமடைந்திருக்கிறார்கள். ஒரு கோடிக்கும் மேற்பட்டோர் அகதிகளாகியுள்ளனர். சிறார்களின் நிலைமைபடுமோசம். கடந்தஆண்டு மட்டும் 600 இற்கும் மேற்பட்ட குழந்தைகள்கொல்லப்பட்டிருக்கிறார்கள். சிரியக் குழந்தைகளின் மோசமான ஆண்டுஎன்று கடந்த ஆண்டை அறிவித்தது ஐ.நா. சபை. ஒருபக்கம், மேற்கத்திய நாடுகளின் ஆதரவு பெற்ற கிளர்ச்சிப் படையினர், மறுபுறம் அசாத் அரசு என சிரியா மக்கள் எதிர்கொள்ளும்வலிகள்வார்த்தைகளில் அடங்காதவை.

பன்னாட்டுச்சமூகத்தின்எதிர்வினைசரி, பன்னாடுகள், பன்னாட்டுச்சமூகத்தின்பொதுஅமைப்பானஐ.நா. சபை என்னதான்செய்கின்றன? உண்மையில், உருப்படியாக எதுவும் செய்யவில்லை என்பதுதான் கொடுமை. 2013 ஆகஸ்ட் 22இல், சிரியாவின் கிழக்குகவுட்டாபகுதியில்சரின்வாயு குண்டுகளைப் பயன்படுத்தி அசாத் அரசு தாக்குதல் நடத்தியது. இதில் 281 பேர் கொல்லப்பட்டார்கள். உலகத்தையே அதிரச்செய்த அரசபயங்கரவாதத்துக்குப் பிறகு, அமெரிக்காவும் ரஷ்யாவும் கொஞ்சம் முயற்சி எடுத்து, ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்தின. நல்லபிள்ளையாகஅந்தஒப்பந்தத்துக்கு சிரியா ஒத்துழைத்தது. ஒப்பந்தத்தின்படிதன்வசம்உள்ளஇரசாயனஆயுதங்கள்தொடர்பாக, தானே அறிக்கை அளிப்பதற்கு சிரியா அரசுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இது சிரியாவுக்குவசதியாகப்போய்விட்டது. இன்றைக்கு செகுன் நகரில் இளம் தளிர்கள் உட்படத் தனது சொந்த மக்களையே கொன்று குவித்துவிட்டு, எதுவும்தெரியாததுபோல்நாடகமாடுகிறது அசாத் அரசு. நட்பு நாடான ரஷ்யாவேறுகோணத்தில்விளக்கம் தருகிறது. 'சிரியா ராணுவ விமானங்கள் கிளர்ச்சிப் படையினரின் முகாம்கள் மீதுதான் தாக்குதல் நடத்தின. கிளர்ச்சிப் படையினரின் ஆயுதக் கிடங்கில் இருந்த ரசாயன ஆயுதங்கள் வெடித்துவிட்டன' என்று முரணான ஒருகருத்தைவெளியிட்டிருக்கிறார் ரஷ்ய பாதுகாப்புத் துறை செய்தித் தொடர்பாளர் தாக்குதல்களுக்குத்துருக்கி மீது பழிபோடுகிறது சிரிய அரசு. சிரியாவின் அண்டை நாடான துருக்கியே பயங்கரவாத அமைப்பினருக்கு உதவுவதாக அது குற்றஞ்சாட்டுகிறது. துருக்கியோ இரசாயனத் தாக்குதலுக்கு சிரிய அரசு தான்காரணம்எனக்குற்றஞ்சாட்டுகிறது. ஆனால், 'சிரிய ராணுவம் ஒரு போதும் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியதில்லை என்று கூசாமல் சொல்கிறார் சிரிய அயலுறவுத் துறைஅமைச்சர்வாலித்முவல்லெம். இதற்கிடையே, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் தந்த அழுத்தத்தின் காரணமாக ஐ.நா. பாதுகாப்புச்சபையின் அவசரக் கூட்டம் நடத்தப்பட்டது. அதில், சிரிய அரசின் மீது இரண்டு நாடுகளும்பகிரங்கமாகக்குற்றஞ்சாட்டின. இதுவரை, சிரிய விவகாரத்தில் தான்கொண்டிருந்த நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு, சிரியாவைக் கடுமையாகச் சாடும் ட்ரம்ப், சிரியாவின் மீது பொருளாதாரத் தடைகளை விதிக்கப்போவதாக அறிவித்திருக்கிறார். அமெரிக்கக்கடற்படைபோர்க்கப்பல்கள் சிரியா மீது 59 ஏவுகணைகளை வீசித் தாக்குதல் நடத்தியிருக்கின்றன.

சிரியா மீதான அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் குற்றச்சாட்டுகளைஏற்கரஷ்யாமறுக்கிறது. சிரியாவை அமெரிக்கா மீண்டும் தாக்கினால் கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று அமெரிக்காவை ரஷ்யா எச்சரித்துள்ளது. சிரியாவின்சிறார்கள்துடிதுடித்து இறந்த காணொலிக்காட்சிகளைக்கண்டவர்கள்மனதில்எதிரொலித்துக்கொண்டே இருக்கும் கேள்வி, வல்லரசுகளின் போட்டியால் அப்பாவி மக்கள் பாதிப்படைவது என்றுதான் முடிவுக்கு வரப் போகிறதோ? என்பதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சொந்த மண்ணை மீண்டும் மிதிக்க 27 ஆண்டுகள் தவமிருந்த மக்கள்

ந.லோகதயாளன்

"நாங்கள் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்த எமது சொந்த நிலத்தை எமது உயிர் போக முன்னர் ஒரு தடவை பார்த்துவிட வேண்டும் என்ற ஆசையோடு இருந்த எனது கணவர், இப்போது விடுவிக்கப்பட்ட எங்கள் சொந்த நிலத்தைப் பார்க்காமலேயே இரண்டு வருடத்திற்கு முன்னர் போய்ச் சேர்ந்திட்டார்" என மயிலிட்டித்துறை வடக்கைச் சேர்ந்த லிகோரி பாக்கியவதி என்ற பெண்மணி தெரிவித்தார்.

"போர் காரணமாக வலி.வடக்கில் இருந்து 1990ம் ஆண்டு ஜூன் மாதம், எங்களது 7 பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு வெறுங்கையுடன் கால்நடையாக வெளியேறினோம். இத்தனை ஆண்டுகளாய்ச் சிரமங்கள் பட்ட நாங்கள் தற்போது பருத்தித்துறையில் வசிக்கின்றோம்.

இப்போது விடுவிக்கப்பட்ட இந்த இடத்தில், எமது சொந்தக்காணியில் ஒரு கல் வீடு கட்டி நிம்மதியாக வாழ்ந்த அந்தக் கால வாழ்க்கையை இன்னமும் எங்களால் மறக்க முடியவில்லை. எமது வீட்டின் முன்னால் ஒரு வைரவர் ஆலயமும் இருந்தது. ஆனால் இவையெல்லாம் இருந்த இடம் தெரியாது அழிக்கப்பட்டு இன்று ஒரு மண்மேடு மட்டுமே எமக்கென விடுவிக்கப்பட்டுள்ளது. எனது நிலத்தைக்கூட என்னால் அடையாளம் காண முடியவில்லை."

**சொந்த மண் குறித்த ஏக்கத்தோடு வாழ்ந்தவர்கள் அவர்கள்**

"எமது சொந்த மண்ணை விடுவிக்கா விட்டாலும், ஒரு தடவை கண்ணால் பார்ப்பதற்காகவாவது அனுமதியுங்கள் என எனது கணவர் கெஞ்சாத இடமே இல்லை. ஆனால் இறுதி வரை சொந்த நிலத்தைப் பார்க்காமலேயே அவர் கண்ணை மூடிவிட்டார்." எனக் கூறிய அவர் தொடர்ந்து பேச இயலாமல் விம்மி விம்மி அழத் தொடங்கி விட்டார். தன்னை ஆசு வாசப்படுத்திக் கொண்ட பின்னர், "எனது கணவருக்குத்தான் அது வாய்க்க வில்லை. நான் என்றாலும் எமது மண்ணில் ஒரு தடவையாவது கால் பதிக்க வேண்டும் என எண்ணிக் காத்திருந்தேன். எனது ஆசை நிறைவேறிவிட்டது. எனது வீடுவாசல் அனைத்தையும் தடயமே தெரியாமல் அழித்து விட்டுத் தாம் மட்டும் உல்லாசம் அனுபவித் துள்ளனர்" எனப் பெருமூச்சு விட்டார்.

**காணி விடுவிப்பு**

வலிகாமம் வடக்கு ஊறணி மற்றும் மயிலிட்டித்துறை பகுதிகளிலுள்ள 28.1 ஏக்கர் நிலம் 27 ஆண்டுகளின் பின்னர் கடந்த 7ஆம் திகதி படையினரால் விடுவிக்கப்பட்டதையடுத்து தாம் வாழ்ந்த நிலங்களைப் பார்க்க ஆவலுடன் சென்ற அந்தப் பகுதி மக்களது மனநிலை குறித்துத் தெரிந்து கொள்ள நான் அங்கு சென்றிருந்தேன். அங்கு எனக்குக் கிட்டிய அனுபவம் குறித்த விவரிப்பே மேற்கண்டது.

குறித்த அந்தப் பெண்மணியுடனான கருத்துப்பகிர்வை முடித்துக் கொண்டு கடற்கரையில் தற்போது இராணுவத்தினர் அமைத்துள்ள வீதியை நோக்கி நகர்கின்றோம். அங்கே காவலுக்கு நின்ற இராணுவச் சிப்பாயொருவர் அதற்கு அப்பால் எம்மைச் செல்லவிடாது தடுக்கின்றார். "இந்த இடம் விடப்பட்டுள்ளதாக உனது அதிகாரி இப்போதுதானே கூறினார். நீ ஏனப்பா எங்களை மறிக்கிறாய்" ஓர் அம்மாவின் தழுதழுத்த குரல் ஓங்கி ஒலித்தது. அதற்கு அந்தச் சிப்பாயோ, "உங்களைப் போகவிடச்சொல்லி எனக்கு உத்தரவு கிடைக்கவில்லை" என்கிறார். உடனடியாக அந்தச் சம்பவம் மாவட்ட கட்டளைத் தளபதியின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படுகிறது. பத்து நிமிடம் வரை அந்த இடத்தில் சலசலப்பு. மீண்டும் அங்கே கூடியிருந்த அனைவரும் தமது காணிகளை நோக்கி வேகமாக நகருகின்றனர். அப்போது அந்தச் சிப்பாய் மௌனமாகவே நிற்கின்றான். அவனது மௌனத்தைத் தமக்கான அனுமதியாகக் கருதி அனைவரும் தமது காணிகளை நோக்கி நகர்கின்றனர். அந்த நகர்வில் 27 ஆண்டுகள் தமது நெஞ்சுக்குள் அடக்கி வைத்திருந்த ஓர் வேட்கையின் வெளிப்பாடு புலப்பட்டது.

அவ்வாறு சென்று தனது வீடு இருந்த நிலத்தில் நின்று உரத்த குரலில் பேசி தனது உள்ளக் கிடக்கையை கொட்டிய ஒரு முதியவரிடம் பேச்சுக் கொடுத்தேன். "எனது பெயர் பொன்னையா துரைசிங்கம், எனக்கு தற்போது வயது 64, எனக்கு 8 பிள்ளைகள். இந்த இடத்திலை ஒரு பரப்புக் காணிதான் எனது சொந்த நிலம். என்றாலும் அழகான வீடு; தனிக் கிணறு, அனைத்தோடும் சொந்தப் படகு வைத்திருந்து தொழில் செய்து நிம்மதியாக எனது குடும்பத்தோடு வாழ்ந்தேன். ஆனால் இத்தனை ஆண்டுகள் கழிஞ்ச பிறகு வெறும் மண் மேட்டைத்தான் பார்க்கின்றேன். வீடு தான் தரைமட்டம் என்றால், அருகில் இருந்த கிணற்றைக் கூடப் பாவியர் விட்டுவைக்கவில்லையே?" என்று கூறிய அவர் உரத்த குரலில் தொடர்ந்தார்.

**சொந்த நிலமாவது கிட்டியதே என்பதில் திருப்தியடைந்த தரப்பினர்**

"சரி, இந்த மண்ணையாவது நான் சாக முதல் தந்தானே, அது இப்போதைக்குப்போதும். உடனடியாக இந்த இடத்திலை தங்குவதற்கான பணியை ஆரம்பிக்க வேண்டும்" என்றார் அவர்.

அவரது கதையைக் கேட்டவாறு அப்பாதையின் வழியால் இப்போது விடுவிக்கப்பட்ட காணிகளின் எல்லை வரையில் சென்று பார்க்கப் பலர் ஓட்டமும் நடையுமாகச் சென்றனர். அந்தக் குழுவில் நானும் இணைகின்றேன். அவர்கள் பேசும் பேச்சைக் காது கொடுத்தேன். "ஐயோ எனக்கு மாமா அந்தநேரம் தந்த 3 சோடி முறுக்குக் காப்பையும் அம்மாவின்ரை இரட்டைப் பட்டுச் சங்கிலியையும் விற்ற காசிலை கட்டின வீட்டின்ரை ஒரு கல்லைக்கூட காண வில்லை" என்ற ஒரு மூதாட்டியின் வார்த்தையில் அவரது ஏக்கம் புலப்பட்டது.

விடுவிக்கப்பட்ட பகுதியின் எல்லையை நோக்கி நானும் நகர்கின்றேன். அப்போது ஓர் தாய் "இஞ்சையடி, எங்கட மணியக்காவின்ரை மோளின்ரை வீடு மட்டும் முழுசா[illegible] இடிக்காமல் விட்டுட்டாங்கள்" எனக் கூற, "இல்லையக்கா, அதுகளுக்கை அவங்கள் இருக்கிறாங்கள். அந்த வீடுகளை இப்ப விடமுடியாது எண்டு சொல்லிக்கிடக்குது" என அவரது மகள் விளக்கம் கொடுக்கி றார்.

அந்த வேலியோரம் மீண்டும் துப்பாக்கி ஏந்திய இராணுவ வீரரால் தடுத்து நிறுத்தப்படுகிறோம். அங்கே இரண்டு முதியவர்கள் இராணுவத்துடன் தர்க்கத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். "இப்பவே சாகிறவயதிலதான் இருக்கிறன். இந்த வேலியில் இருந்து மூன்றாவது காணிதான் என்ரை காணி. அதை ஒருக்கால் கண்ணாலை பார்த்திட்டுப்போறன்." எனப் பெரும் ஏக்கத்துடன் கேட்டு நிற்கின்றார் அவர்களில் ஒரு முதியவர். அங்கே நிற்கிற இராணுவச் சிப்பாய் தமிழிலேயே பதில் அளிக் கின்றான். "எனக்கு அதுக்கு அதி காரம் இல்லை. நீங்க பெரிய துரையோடதான் பேசவேண்டும்." இதைக் கேட்டு பெரு மூச்சு விடுகிறார் அந்த முதியவர், அவை அனைத்தையும் அவதானித்த பின்னர் நாங்கள் வந்த திசை நோக்கி நகர்ந்தோம். ஒரு வீட்டின் அத்திபாரம் மட்டும் முழுமையாக இருந்தது. அதில் ஒரு வயதான பெண்மணி ஏறி நின்றவாறு தனக்குத்தானே பேசிக் கொண்டிருக்கிறார் அவரோடு பேச்சுக் கொடுத்தபோது,

"ஆனந்தமயில் செல்வராணி என்ரை பெயர். எனக்கு இப்ப 60 வயது, 3 பிள்ளைகள். இந்தப் பிரதேசத்தில் ஓர் அடையாளமும் இல்லாமல் எல்லாமே அழிக்கப்பட்டுள்ளன. வீடுகள், கிணறுகள், எல்லைகள் எவையுமே இல்லை. ஆனால் எனது வீட்டின் அத்திபாரத்தை மட்டும் முழுமையாகக் கண்டதால் எனது சந்தோசத்துக்கு அளவில்லை" என்றார் அவர்.

இவற்றைத் தாண்டியவேளையில் வலி.வடக்கு இடம்பெயர்ந்தோர் மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கத்தின் தலைவர் குணபாலசிங்கம் அங்கே நின்றார். அவரிடம் அன்றைய நில விடுவிப்புத் தொடர்பான விவரங்களைக் கேட்டேன். "இவ்வளவு நாளும் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களை விடவும் எமது சமூகத்துக்கு மிகவும் பிரயோசனமான நிலவிடுவிப்பு, இந்த சிறு தொகையான 28 ஏக்கர் நில விடுவிப்புத்தான்.

ஏனெனில் இந்த 28 ஏக்கர் நிலப்பரப்பு சுமார் 350 குடும்பங்கள் வாழ்ந்த இடம். இந்த நிலையில் முகாம்களில் வாழும் மக்களில் 258 குடும்பங்களைச் சேர்ந்தோர் தற்போது உடனடியாக இங்கு குடியேறத் தயாராகவுள்ளனர்.

அவ்வாறு அவர்கள் உடனடியாகக் குடியேறும்போது அது அவர்களுக்கு மிகவும் பயன்மிக்கதாக அமையும். ஏனெனில், வாழ்விடமும் தொழிலிடமும் ஒருங்கே அமையப்பெற்ற இடமாக விளங்குவதுதான் அதற்குக் காரணம்" எனப் பதிலளித்தார். இவற்றைப் பதிவு செய்துகொண்டு அந்தப் பிரதேசத்தில் இருந்து வெளியேறினேன்.



## வாசகர் திருமுகம்

### எமது தமிழ்த் தலைமைகள் சிந்தித்து செயற்படுவார்களா?

கடந்த பல தசாப்த காலமாக இழந்த உரிமைகளைப் பெற்றிட அகிம்சை வழிப் போராட்டம், ஆயுதப் போராட்டம் எனப் பல்வேறு வடிவங்களில் போராடிய ஈழத் தமிழ் இனம், இன்று திட்டமிட்ட பன்னாட்டுச் சூழ்ச்சிகளால் போராட்டப் புரட்சித் தலைமைகள் அழிக்கப்பட்ட பின்னர், திக்குத் தெரியாது தடுமாறி நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. கொள்கைப் பற்றில்லாத, வரட்டுக் கௌரவம், சுய நலப் போக்கு மற்றும் தலைமைத்துவப் போட்டி என்பவற்றாலும், விட்டுக்கொடுத்து விட்டுக்கொடுத்து, இணக்க அரசியல் என்று சிங்கள தலைமைகளால் ஏமாற்றப்பட்டும் அனுபவப்பாடம் கற்றுக்கொள்ளாத எமது தமிழ்த் தலைமைகளால், அவர்களது அரசியல் நிலைப்பாட்டால் ஈழத்தமிழினம் திக்குமுக்காடித் தவித்துக்கொண்டு இருக்கின்றது.

ஒரே கட்சிக்குள்ளே போட்டி பொறாமை, ஒருவரை ஒருவர் தூற்றிக்கொள்ளல், உட்கட்சி முரண்பாடுகள், சொற்போர்களால் தமிழ் தலைமைகளும், தமிழ் பேசும் மக்களது வெவ்வேறு கட்சிகளும் மக்கள் கவலையடையும் விதத்தில் தரம் தாழ்ந்து தமிழ் இனத்தை நட்டாற்றில் கைவிட்டு நிற்கின்றன.

எமது பூர்வீக நிலங்கள் திட்மிட்ட விதத்தில் பறிப்புக்கு உட்பட்டதால், எமது உரிமைகள், அரசியல் அபிலாசைகள் பறிபோய் தமிழ் பேசும் இனம் நிர்க்கதியாகி நிற்கின்றது.

நாடு சுதந்திரம் அடைந்த நாள் முதல் சிங்கள இனவெறி அரசுகளாலும், இனவாதிகளாலும் தமிழ்த் தலைமைகள் திட்டமிட்டு ஏமாற்றப்பட்டனர். அவற்றைப் புரிந்துகொள்ளாமல் தமது பதவிகளைக் காப்பாற்றவும், சுயநலன்களுக்காகவும் மீண்டும் மீண்டும் சிங்கள அரசுத் தலைமைகளை நம்பி, அந்தத் தலைமைகளை போர்க்குற்ற விசாரணை மற்றும் ஏனைய மனித குலத்துக்கு எதிரான இன அழிப்புக் குற்றங்களில் இருந்து காப்பாற்ற தமிழ்த் தலைமைகள் துணை போவது குறித்து மனவேதனை அடைகின்றோம்.

தமிழ் பேசும் மக்களின் இழந்த உரிமைகளைப் பெறவும், இழந்த தாயக மண்ணை மீட்டெடுக்கவும் எமது அரசியல் தலைமைகள் இனியாவது அரசியல் காழ்புணர்ச்சிகள், போட்டிகளைக் கைவிட்டு, தமிழ் இனத்தைப் படுகுழியில் இருந்து மீட்டெடுத்து தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்த இலங்கைக்குள் அடிப்படை உரிமைகளுடன் நிம்மதியாக வாழ ஒன்றுபட்டுச் செயற்பட முன் வர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

வ.க.ஜெயபாலன் J.P

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேட்டையன்** @vettaiann

நீங்களாப் பார்த்து ஏதாவது செய்யுங்கள் என்று
துரோகிகளிடமும் எதிரிகளிடமும்
நம்மை விட்டுக் கொடுக்கிறது வாழ்க்கை...!

3 2

முதல் காதல் அழகை நோக்கி
கடைசி காதல் அன்பை நோக்கி...



கன்னம் சுருங்கிட நீயும், மீசை நரைத்திட நானும், வாழ்வின் அர்த்தங்கள் காணும் காலம் இது தானோ...

தந்தை: மகனே நீ பரீட்சையில் சித்தியடைந்த உனக்கு ஒரு சைக்கிள் வாங்கித் தாறேன்...
மகன்: சித்தியடையாவிட்டா...?



தந்தை: பத்து சைக்கிள் வாங்கித் தாறேன். சைக்கிள் கடை வச்சிப் பிழைச்சிக்கோ...!


# ஆசிரியை வேடத்தில் தேவயானி



1990ஆம்ஆண்டுகளில்முன்னணிவேடத்தில்நடித்த தேவயானிதற்போது ஆசிரியையாகஅவதாரம்எடுத்துள்ளார். 1994இல் வெளியான 'தொட்டா சிணுங்கி' படத்தின் மூலம் தமிழில் அறிமுகமானவர் தேவயானி. அந்தப் படத்துக்குப் பின்னர் தொடர்ந்து பட வாய்ப்புகள் வந்ததால், பல படங்களில் நடித்து முன்னணிகதாநாயகியாகவலம்வந்தார். மேலும்விஜய், அஜித் உள்ளிட்ட முன்னணிக் கதாநாயகர்களுடன் இணைந்து நடித்தார்.

பிரபல திரைப்பட இயக்குநர் ராஜகுமாரனைத் திருமணம் செய்துள்ள தேவயானிக்கு, 2004 ஆம் ஆண்டுக்குப் பின்னர் படவாய்ப்புகள் குறைவடைந்தால், தொலைக்காட்சித் தொடர்களில் நடித்து வந்தார். அவ்வப்போது, ஒருசில படங்களில் அக்கா, அம்மா வேடங்களிலும் நடித்து வந்தார்.

இந்த நிலையில், தேவயானி தற்போது மலையாளத்தில் 'மை ஸ்கூல்' என்ற படத்தில் நடித்து வருகிறார். இதில் அவருக்கு ஆசிரியை வேடம். பாடசாலையில் படிக்கும் ஒரு மாணவனை நாய் கடித்து விடுகிறது. அவனைக் காப்பாற்றுவதற்காக வகுப்பு ஆசிரியை போராடுவதே இந்தப் படத்தின் கதை. அடுத்து ஒரு தெலுங்குபடத்தில்இளம்நடிகரின்அக்காவாகத்தேவயானிநடிக்கிறார்.



**தமிழ் வாத்தியார்:** தமிழ் மொழிய விட சிறந்த மொழி எது?

**மாணவன் 1:** உங்கபொண்ணுதேன்மொழிதான் சார்.

**மாணவன் 2:** அவன் தப்பா சொல்றான் சார், உங்க மனைவி கனிமொழி தான் சார் சரியான விடை.....

**தமிழ் வாத்தியார்:** ???????????

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** சிறிய முயற்சியிலும் பெரிய நன்மை காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு உருவாகும். பணியாளர்களுக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்கும்.

**இடபம்:** எதிர்பார்ப்பு நிறைவேற்றுவதில் தாமதம்ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் சீரான முன்னேற்றம் உண்டாகும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**மிதுனம்:** பிறருக்காக, தகுதிக்கு மீறி வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சராசரி அளவில் இருக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும்.

**கடகம்:** மனதில் புத்துணர்ச்சி நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்ததைவிட ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள், சலுகைபெற்றுமகிழ்வர். மனைவியின் விருப்பம் நிறைவேற்றுவீர்கள்.

**சிங்கம்:** உங்களின் பேச்சு, சிலரைச் சங்கடப்படுத்தலாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர். பூர்வீகச் சொத்து மூலம் பணவரவு கிடைக்கும்.

**கன்னி:** சிலர் சுயநலத்துடன் உங்களிடம் பழகலாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சீராக இருக்கும். பாக்கிப் பணம் வசூலாகும். உடல்நலம் பலம் பெறும். பெண்கள், குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.

**துலாம்:** எதிலும் நிதானம் தேவைப்படும். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், சக ஊழியர்களுடன் கருத்து வேறுபாடு கொள்வர். பெண்கள், வீட்டுச் செலவுக்காகக் கடன் வாங்கலாம்.

**விருச்சிகம்:** நல்லவர் அறிமுகத்தால் நன்மை உண்டாகும். புதிய முயற்சியில் வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள், சலுகை கிடைக்கப் பெறுவர்.

**தனுசு:** தடைகளை முறியடித்து முன்னேறுவீர்கள். குடும்பத்தினரின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். பணக்கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள்.

**மகரம்:** முக்கிய பொறுப்புகளைப் பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் எதிர்ப்புக்கு ஆளாகலாம்.

**கும்பம்:** குடும்பத்தினரால் அதிருப்திக்கு ஆளாவீர்கள். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், பணிச்சுமையைச் சந்திப்பர்.

**மீனம்:** உழைப்பால், வாழ்வில் உயர்வு பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் படிப்படியாக உயரும். சேமிப்புக் கூடும். பணியாளர்களுக்கு, விரும்பிய இடமாற்றம் கிடைக்கும்.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | 2 | | 9 | | 7 | |
| 8 | | | | | | | | 1 |
| | | 6 | | | | 9 | | |
| 5 | | | 9 | | 1 | | | 4 |
| | 6 | | | 3 | | | 8 | |
| 3 | | | 8 | | 2 | | | 7 |
| | | 5 | | | | 6 | | |
| 7 | | | | | | | | 5 |
| | 8 | | 5 | | 3 | | 4 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 9 | 3 | 4 | 2 | 6 | 1 | 7 | 8 |
| 2 | 4 | 1 | 3 | 8 | 7 | 6 | 9 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 1 | 5 | 4 | 2 | 3 |
| 1 | 3 | 7 | 6 | 4 | 8 | 9 | 5 | 2 |
| 4 | 2 | 6 | 5 | 3 | 9 | 8 | 1 | 7 |
| 8 | 5 | 9 | 1 | 7 | 2 | 3 | 4 | 6 |
| 3 | 8 | 5 | 7 | 9 | 4 | 2 | 6 | 1 |
| 7 | 1 | 4 | 2 | 6 | 3 | 5 | 8 | 9 |
| 9 | 6 | 2 | 8 | 5 | 1 | 7 | 3 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏவிளம்பி வருடப் பிறப்பு 2017



**வாக்கிய பஞ்சாங்ம**

நிகழும் துர்முகி வருடம் பங்குனி மாதம் 31ஆம் திகதி (14.04.2017)வியாழக்கிழமை பின்னிரவு 12.48 மணிக்கு அபரபக்க திருதியைத் திதியில் விசாக நட்சத்திரம் 3ஆம் பாதத்தில் மகர லக்கினத்தில் மகர நவாம்சத்தில் புதன் கால வேரையில் "ஏவிள்ம்பி" எனும் பெயரையுடைய புதுவருடம் பிறக்கிறது. அன்று முன்னிரவு 8.48 மணிமுதல் பின்னிரவு 4.48 மணிவரை விசி புண்ணிய காலமாகும்.

**திருக்கணித பஞ்சாங்கம்**

நிகழும் துர்முகி வருடம் பங்குனி மாதம் 31ஆம் திகதி (14.04.2017) வியாழக் கிழமை பின்னிரவு 2.04 மணிக்கு ஏவிளம்பி எனும் புத்தாண்டு உதயமாகிறது. அன்று நட்சத்திரம் விசாகம் 3ஆம் பாதம் திதி அபரபக்க திருதியை உதயலக்கினம் மகரம் இது 60 வருட சுற்றுவட்டத்தில் 31ஆவது வருடமாகும்.

**மருத்துநீர் தயாரித்தல்**

தாழம்பூ, தாமரைப்பூ, மாதுளம்பூ, துளசி, விண்ணுகிராந்தி, சீதேவியார் செங்கழுநீர், வில்வம், அறுகு, பீர்க்கு, பால், கோசலம், கோமழிம், கோரோசனை, மஞ்சள், மிளகு, திப்பிலி, சுக்கு இவைகளை சுத்தமான நீரிலிட்டு காய்ச்சிக் கொள்க.

இந்தப் புண்ணிய காலத்தில் யாவரும் விதிப்படி சங்கற்பித்து மருத்துநீர் தேய்த்து சிர சில் வேப்பிலையும் காலில் கொன்றையிலையும் வைத்து நீராடி மஞ்சள் நிறமுள்ள பட்டாடையாயினும் தரித்து புஸ்பராகம், நீலக்கல், இழைத்த ஆபரணம் அணிந்து சுகந்த சந்தனம் பூசி, நறுமலர் சூடி விக்னேஸ்வரர் முதலிய குல தெய்வ வழிபாடு செய்து இயன்ற தான தருமங்கள் இயற்றி குரு, பெற்றோர் முதலிய பெரியோரை வணங்கி அவர்களின் ஆசி பெற்று பத்து மித்திரர்களுடன் அளவளாவி அறுசுவை சமைத்த உண்டிகளுடன் பாற்சோறு, தேன் என்பவை சேர்த்தருந்தி தாம்பூலம் தரித்து கண்ணாடி, தீபம், நிறைகுடம் முதலிய மங்கலப் பொருள்களைத் தரிசிக்க வேண்டும்.

ஏவிளம்பி புத்தாண்டு பிறப்பன்று மஞ்சள் மற்றும் கபில நிறத்திலான புத்தாடைகளை அணிவது சிறந்தது.

**சங்கிரம தோச நட்சத்திரங்கள்.**

புனர்பூசம், சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி இந்த நட்சத்திரங்களில் பிறந்தோர் தவறாது மருத்து நீர் வைத்து நீராட வேண்டும்.

**ஹேவிளம்பி வருஷ கைவிசேஷ தினங்கள்**

**திருக்கணித பஞ்சாங்கம்**

14.04.2017 வெள்ளிக்கிழமை முன்னிரவு 8.10 தொடக்கம் 9.40மணிவரை
16.04.2017 ஞாயிற்றுக்கிழமை முன்னிரவு 8.08 தொடக்கம் 9.30மணிவரை
17.04.2017 திங்கட்கிழமை பகல் 9.45தொடக்கம் 11மணிவரை

**வாக்கிய பஞ்சாங்கம்**

14.04.2017 வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12.09 தொடக்கம் 12.31மணிவரை
15.04.2017 சனிக்கிழமை பகல் 10.38தொடக்கம் 11.38 மணி வரை
17.04.2017 திங்கட்கிழமை பகல் 9.52 தொடக்கம் 11.51மணிவரை

## இது புதுசு



சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு பெண்களுக்கான பஞ்சாபி வகைகளில் குடவெட்டுடன் பிளேனாகவும், மேற்பக்கம் கல் பதித்த வேலைப்பாடுகளுடனும் பஞ்சாபிகள் தற்போது சந்தைக்கு வந்துள்ளன. இவை 5 ஆயிரத்து 500 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

# வெயில் காலங்களில் முகத்துக்கு பவுடர் – கிரீம் பயன்படுத்த வேண்டாம்



வெயில் காலங்களில் முகத்துக்கு பவுடர், கிரீம் பயன்படுத்தினால் தோலின்தன்மைமாறிபளிச்சென்ற நிறத்துக்குப் பதிலாக கருப்பாக மாற வாய்ப்புள்ளது.

வெயில் காலங்களில் காலை 10 மணி முதல் பகல் 3 மணி வரை புற ஊதா கதிர்களின் தாக்கம் அதிக மாக இருக்கும். இந்த நேரங்களில் வெளியில் நடமாடுவதைத் தவிர்க்கலாம். வெளியில் செல்ல கட்டாயம் ஏற்பட்டால் உடலை மறைக்கும் ஆடைகளை அணிய வேண்டும். அடர் நிறத்தால் ஆன ஆடைகளைத் தவிர்த்து விட்டு வெளிர் நிற ஆடைகளை அணிய வேண்டும். குடையை பயன்படுத்திக் கொள்ளலாம். பருத்தி ஆடைகள் மிகவும் நல்லது.

வெயிலில் அதிகம் நடமாடும் போது தோலில்சிறிய அளவில் குரு ஏற்படும். இதற்கு மருத்துவரை அணுகி உரிய கிசிச்சை எடுத்துக் கொள்ளவேண்டும். முகத்துக்கு டால்கம் பவுடர், வேர்க்குரு பவுடர் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். இவை தோலில் உள்ள நுண்ணிய துளைகளை மூடி வியர்வையை வெளியேற்றாமல் தவிர்த்துவிடும்.

அதேபோல், முகத்துக்கு பச்சைப் பயிறு, கடலை மாவு தடவுவதையும் தவிர்க்கலாம். சாதாரண தண்ணீரில் வழக்கமான சோப்பைப் பயன்படுத்தி குளித்தால் போதும். நீச்சல் குளத்தில் குளிப்பவர்கள் கண்டிப்பாக சாதாரண தண்ணீரில் குளிக்க வேண்டும். இறுக்கமான ஜீன்ஸ் ஆடைகளைத் தவிர்த்து காற்றோட்டமான ஆடைகளை அணிய வேண்டும். தொடை இடுக்கு, அக்குள் பகுதிகளில் அதிக ஈரப்பதம் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஈரப்பதம் மற்றும் அதிக வெப்பம் காரணமாக தொடை இடுக்கு, அக்குள் பகுதியில் பாக்டீரியா, பூஞ்சான் தொற்றுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. ஈரப்பதமான துணிகளை உடுத்துவதை தவிர்க்க வேண்டும்.

வெயில் நேரத்தில் நாம் அணிந்திருக்கும் துணிகள், உள்ளாடைகள் ஈரமானால் வேறு துணிகளை மாற்றிக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு வருக்கும் தோலின் தன்மை மாறுபடும். எனவே, அதற்கு ஏற்ப சன் கிரீம்களை பயன்படுத்தலாம்.

பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் பலர் தங்கள் முகத்துக்கு அழகு சேர்க்கும் அல்லது பளபளப்பாக வைத்திருக்க, விதவிதமாக விற்கப்படும் கிரீம்களை பயன்படுத்துகின்றனர். ஆரம்பத்தில் இது பளிச்சென்று இருப்பது போல காணப்படும்.

இந்தக் கிரீம்களை தொடர்ந்து பயன்படுத்தினால் தோலின் தன்மை மாறி பளிச்சென்ற நிறத்துக்குப் பதிலாக கருப்பாக மாற வாய்ப்புள்ளது. மேலும், தோலின் நோய் எதிர்ப்புச் சக்தியும் குறைந்துவிடும்.

சிலர் முகத்துக்கு அழகு கிரீம்களை பூசிக்கொண்டு இரவு முழுவதும் படுத்துவிட்டு மறுநாள் காலையில் சுத்தம் செய்வார்கள். இதுபோன்று செய்வது முற்றிலும் தவறானது. தோல் பாதிக்கப்படுவதுடன் ஒவ்வாமைப் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

## வரலாற்றில் இன்றைய தினம்

### 14.04.2017

1816 -பிரிட்டன் ஆட்சியிலிருந்த பார்படொசில் புஸ்ஸா எனும் அடிமை தலைமையில் அடிமைகள் எழுச்சி கொண்டபோது கொல்லப் பட்டார். இதனால் இவர் பார்படோஸ் முதலாவது தேசிய வீரராக நினைவு கூரப்படுகின்றார்.

1828 -நோவா வெப்ஸ்ரர் தமது முதலாவது பதிப்பு அகராதிக்கான பதிப்பு உரிமை பெற்றார்.

1849 -லாஜோஸ் கொசுவைத் தலைவராகக் கொண்டு, ஒஸ்ரியாவிடமிருந்து ஹங்கேரி சுதந்திரப் பிரகடனம் செய்தது.

1865 -அமெரிக்க அரச தலைவர் ஆபிரிகாம் லிங்கன், போட்ஸ் தியேட்டரில் வைத்த ஜோன் வில்க்ஸ் யூத் என்பரால் சுடப்பட்டார், லிங்கன் மறுநாள் இறந்தார்.

1894 -முதலாவது வர்த்தக சலனப் பட மண்டபம் நியூயோர்க் நகரில் திறந்து வைக்கப்பட்டது. படக் காட்சியைப் பார்வையிட 10 கினெ ரொஸ் கோப் கருவிகள் பொருத்தப்பட்டன.

1900-எக்ஸ்போ யூனிவேர்சல் உலக சந்தை, பாரிசில் தொடங்கப்பட்டது

1944-பம்பாய் துறைமுகத்திலேற்பட்ட பெரிய வெடிவிபத்தில் 300 பேர் வரை உயிரிழந்ததுடன் 20 மில்லியன் பவுண்ஸ் பொருளாதார இழப்பும் ஏற்பட்டது.

1999 -ஆஸ்திரேலிய வரலாற்றில் மிக மோசமான இயற்கைப் இடரான ஆலங்கட்டி மழைப்பொழிவில் 2.3 பில்லியன் ஆஸ்திரேலிய டொலர் பெறுமதியான சேதம் ஏற்பட்டது.

2010 -யூஷு திபெத்திய சுயாதீன அதிகார எல்லையுள் ஏற்பட் 6.9 மக்னிரியூட் அளவிலான நில நடுக்கத்தில் 2700 பேர் வரை உயிரிழந்தனர்.

2016 -கொடிகாமத்தில் இரு குழுக்களிடையே மோதல் இருவர் படுகாயம்.

## நாளை

**சித்திரை-02**
சனிக்கிழமை -15.04.2017
திதி: சதுர்த்தி மா.06.38
நட்சத்திரம்: அனுசம் பி.ப.12.34
சுபநேரம்:03.04-04.34 வரை
ராகுகாலம்:09.04-10.34 வரை
சங்கடஹர சதுர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

**மணமகன் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பத்தில் 1975 ஆம் ஆண்டு உத்தரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்த அரச உயர்பதவி வகிக்கும் மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை. (வீடு. சீதனம் வழங்கப்படும்).தரகர்கள் தவிர்த்து நேரடியாகத் தொடர்புகொள்ளவும்.

**தொடர்புகளுக்கு.0763943148**

**யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி பழையமாணவர் சங்கம், விசேட கலந்துரையாடலுக்கான அழைப்பு**

**தலைமை :-கல்லூரி அதிபர்**
**காலம் :-16.04.2017 (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணி**
**இடம் :- கல்லூரி பிரதான மண்டபம்**

கல்லூரி அபிவிருத்தி தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்றினை அவசரமாக நடத்த வேண்டியிருப்பதனால் கல்லூரியின் ஆசிரியர்கள். பெற்றோர்கள் பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**அதிபர் மற்றும் பழைய மாணவர் சங்கத்தினர்.**

# பாதீனியம்.!

## சத்தமின்றி ஆக்கிரமிக்கும் அழிவின் அந்நிய கோசம்

பாதீனியம் என்பது பூண்டு, சீதேவியார் செங்கழுநீர், செவ்வந்தி போன்ற தாவரங்களின் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு செடி வகையாக விளங்குகிறது. ஒன்றரை மீற்றர் உயரத்துக்கும் மேலாக வளரக் கூடியது.

பாதீனியச் செடிகள் வெற்று இடங்கள், தரிசு நிலங்கள், பயிர் நிலங்கள், குடியிருப்புப் பகுதிகள், பூங்காக்கள், பழத்தோட்டங்கள், வீதியோரங்கள், கரையோரங்கள்என அனைத்து இடங்களிலும் வளர்ந்து வருகின்றன.

இவை மிகப்பெரும் எண்ணிக்கையில் பரவிக் கொள்வதுடன் நெருக்கமாக முளைத்து, நிமிர்ந்து சடைத்து பார்த்து விரைவிலேயே பச்சைக் கம்பளம் விரித்தது போல நிலத்தை மூடிவிடுகின்றது.

பாதீனியச் செடிகள்களைகளுக்கெல்லாம் தலைமையாக விளங்குகிறது. இதன் தண்டுகள், கிளைகள் மற்றும் இலைகள் உரோமங்களால் மூடப்பட்டிருக்கும். இச்செடியானது அதிக எண்ணிக்கையிலான் பூக்களையும், குறைந்த நிறையுடைய விதைகளையும் உற்பத்தி செய்கிறது. விதைகள் குறைந்த நிறையைக் கொண்டுள்ளதால் காற்றின் மூலமாக ஏனைய இடங்களை நோக்கி படையெடுக்கிறது. எளிதிலும் விரைவாகவும் பரவுகிறது.

இதன்படி ஒரு பாதீனியச் செடியானது 2 ஆயிரத்து 500 முதல் 5 ஆயிரம் வரையிலான விதைகளை உற்பத்தி செய்கிறது. மேலும் இவற்றின் விதைகள் முளைப்பதற்குத் தேவையான சூழ்நிலைகள் இல்லாத போதும் சாதகமான சூழ்நிலை வரும் வரை காத்துக்கிடக்கிறது. குறிப்பாக 20 ஆண்டுகள் வரை உறக்கத்தில் இருந்து முளைக்கக் கூடிய சிறப்புத் தன்மையை இவை கொண்டுள்ளது.



அதேவேளை பாதீனியச் செடிகளின் கீழாக செடி கொடிகள் எதுவும் முளைத்து வளர முடிவதில்லை. தண்ணீருக்காகவும், சூரிய ஒளிக்காகவும், வேர்ப்பிடி மண்ணுக்காகவும் செடிகள் போராடிச் சாகின்றன. இவற்றின் மீது பாதீனியச் செடிகள் நஞ்சூட்டி அழிக்கிறது.

பாதீனியம் பார்த்தீனியன், அம்புரோசின் போன்ற நச்சு வேதிப்பொருள்களைச் சுரக்கிறது. இந்த நச்சுப் பொருள்களுடன் தாவர இனங்கள் போரடித் தப்பிப் பிழைக்க வழியின்றி அழிந்து விடுகின்றன. அந்தவகையிலே 'எதற்கும் அடங்காமல் எதனையும் அடக்காமல் ' பல நூறு ஆண்டு காலங்களாக இயற்கைச் சமநிலையில் பெரும் பங்காற்றி வருகின்ற உள்ளூர்த் தாவர இனங்களின் சாம்பல் மீது ஏறி நின்று கொண்டு பாதீனியம் கோலோச்சி வருகிறது.

### பாதீனியம் ஏற்படுத்தும் பாதிப்புகள்

• பாதீனியச் செடியானது கால்நடை தீவனங்களுக்கான அருமைத் தன்மை ஏற்படுத்துகிறது.
• வேளாண்மைப் பயிர்களின் வளர்ச்சியைப் பாதிக்கிறது. குறிப்பாக வேளாண்மை உற்பத்தியை 30 வீதமாக குறைக்கிறது.
• மண்ணில் கசிய விடும் நச்சுப் பொருள்களின் மூலம் பயிர்களின் வளர்ச்சியைத் கட்டுப்படுத்துகிறது.
• உளுந்து,பயறு போன்ற பயிர்களின் அருகாமையில் பாதீனியச் செடிகள் வளரும் போது பயிர்களின் வளர்ச்சியை வெகுவாகப் பாதிக்கிறது.
• அவரையினப் பயிர்களின் வேர் முடிச்சுக்களை பாதிப்படையச் செய்கிறது. குறிப்பாக அவற்றின் வேர்களில் இரைசோபியம் பக்றீரியாக்களைக் கொண்ட வேர் முடிச்சுகள் காணப்படுகின்றன. இவை நைதரசன் வாயுவைத் தாவரங்கள் உறிஞ்சக் கூடிய அயனநிலையை ஏற்படுத்துவதுடன் வளிமண்டலத்தில் நைதரசனின் சமநிலையைப் பேணியும் வருகின்றன.இந்த நிலையிலே பாதீனியச் செடிகளின் நஞ்சுகள் இந்த வேர் முடிச்சுகளை அழிவுநிலைக்குட்படுத்துவதாக தாவரவியல் அறிவியலாளர்கள் எச்சரிக்கின்றனர்.
• பாதீனியச் செடிகள் மனிதர்களுக்கும் ஒவ்வாமையை ஏற்படுத்துகிறது.
• பாதீனிய செடிகள் பரவியுள்ள இடங்களில் உள்ள காற்றில் மிதக்கும் மகரந்தங்களில் பாதீனியச் செடிகளின் மகரந்தங்கள் தான் அதிகம் உள்ளதாக சொல்லப்படுகிறது. இந்த மகரந்தங்கள் தம்மீது நச்சுப் பொருள்களை பூசி வைத்துள்ளன. இதனைச் சுவாசிப்பவர்கள் ஆஸ்துமா நோயின் பாதிப்புக்குள்ளாகின்றனர்.
• பாதீனிய செடியைத் தொடர்ச்சியாகத் தொடுகையுறுபவர்களுக்கு தோலில் அரிப்பும் தடிப்பும் ஏற்படுகிறது.
• பாதீனியச் செடிகளால் ஏற்படும் நோய்கள் எவ்வித மருத்துவ சிகிச்சைகளுக்கும் கட்டுப்படுவதில்லை.
• பாதீனிய செடிகள் கலந்த பசுந்தீவனங்களை உண்ணும் கால்நடைகளின் பால் கசப்புத் தன்மை பெறுகிறது.
• பாதீனியச் செடிகள் கரியமில வாயுவை அதிகமாக வெளிவிடுவதால் சுற்றுப்புறச் சூழலுக்கு பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.
• பாதீனிய செடிகள் பல்லுயிர் பெருக்கங்களை கட்டுப்படுத்துவதுடன் அவற்றை அச்சுறுத்துகிறது.

# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
01.10.1940

இறப்பு
12.04.2009

## அமரர் சின்னையா புலேந்திரன்

திதி - திருதியை

அயராத எமக்காக உழைத்த அன்புத் தந்தையே!
ஆண்டுகள் எட்டு ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
இங்கு உங்கள் அன்பை நாம் இழந்து தவிக்கின்றோம்
ஈரவிழிகளுடன் உங்கள் ஆத்மா சாந்தியடைய
ஈசனை வேண்டுகின்றோம்
உங்களுக்கே புத்திரராய் மீண்டும் பிறந்திடுவோம்
ஊரார் வியக்க வளர்ந்திட்ட பேரமக்களுடன்
எம் உறவின் புதிய தலைமுறையாய் உங்கள்
ஏற்றம் பெற உங்கள் ஆசி வேண்டுகின்றோம்
ஐயம் எதுவுமில்லை உங்கள் ஆசி எமக்குண்டு.

**புகையிரத வீதி,**
**சுன்னாகம்.**

**குடும்பத்தினர்.**
**077 784 2283**

**மரண அறிவித்தல்**

## சடையன் மாணிக்கம்



பிறப்பு 27.02.1922 இறப்பு 13.04.2017

கரவெட்டி நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் புதிய கொலணி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சடையன் மாணிக்கம் 13.04.2017 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சடையன் வள்ளிப்பிள்ளை தம்பதியரின் செல்ல புத்திரனும் காலஞ்சென்றவர்களான கணபதி, வேலுப்பிள்ளை, கண்ணம்மா, ஜோஜ்ரகுநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற தங்கம்மா அவர்களின் அன்புக் கணவரும் தவராசா, கணேசலிங்கம் (சாளினி வெல்டிங் வேக்ஸ் சொப்), கலைமகள், பிறேமா ஆகியோரின் அன்புத் தந்தையும் கமலா, யோகராணி, அலெக்ஸ் சாண்டர், மோகன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ரமேசன், அஜந்தன் (பிரான்ஸ்), சாளினி, அஜித், நிரோசன், அபியா, கௌதமி ஆகியோரின் பாசமிகு பேரனும் செலினா, செரோணி, சாரா, அஜய் ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை நிகழ்வு இன்று (14.04.2017) வெள்ளிக்கிழமை பி.ப. 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அடக்க நிகழ்வுக்காக அன்னாரின் உடலம் கல்வாரி சேமக்காலை தாவடிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: மகன் மா.கணேசலிங்கம்**
**(சாளினி வெல்டிங் வேக்ஸ் சொப்)**

**முதலாம் பக்கத் தொடர்ச்சி**

## ஆரவாரமில்லாமல்...

கடந்த காலங்களில் புத்தாண்டுப் பிறப்பின்போது பட்டாசுச் சத்தங்கள் தொடர்ந்து ஒலித்துக்கொண்டிருக்கும். ஆனால் இன்று அதிகாலைப் புத்தாண்டு பிறப்பின்போதே, நேற்றைய தினமோ வெடிச் சத்தங்கள் கேட்கவில்லை. அமைதியான முறையிலேயே மக்கள் புத்தாண்டை வரவேற்றுள்ளனர்.

வடக்கின் 5 மாவட்டங்களிலும் புத்தாண்டு களைகட்டவில்லை. புத்தாண்டுக்கான வியாபாரம் கூட முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களில் சூடு பிடிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-5)

## வைத்தியசாலையில்...

தெற்கைச் சேர்ந்த இளையதம்பி சபா ரத்தினம் (வயது-75) என்ற குடும்பத் தலைவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். தபால் திணைக்களத்தில் பணியாற்றி ஓய்வுபெற்ற அவர் நிலுவைப் பணத்தைப் பெறுவதற்காகக் கனடாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார் என விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

கனடாவிலிருந்து வந்த அவருக்குக் கடந்த 9 ஆம் திகதி காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அவர் சேர்க்கப்பட்டார். நேற்றுமுன்தினம் மலசலகூடத்துக்கு அவர் சென்றபோது விழுந்து தலையில் படுகாயமடைந்து கடும் குருதிப் பெருக்கு ஏற்பட்டது. அவசர சிகிச்சைப் பிரிவில் அவர் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை அளிக்கப்பட்டபோதும் சிகிச்சை பயனளிக்காது நேற்று முன்தினமிரவு உயிரிழந்தார். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மற்றும் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (த-4)

## சுழிபுரத்தில்...

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், தலைமை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் கலந்து கொள்ளவுள்ளார். வாழ்த்துரையை சிவபூமி அறக்கட்டளையின் தலைவரும், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவருமான கலாநிதி ஆறு.திருமுருகன் நிகழ்த்தவுள்ளார்.

முன்னதாக அன்றைய தினம் காலையில், புத்தாண்டு விளையாட்டு நிகழ்வுகள் கோயில் வடக்கு வீதியில் நடைபெறவுள்ளது. போர்த் தேங்காய் அடித்தல், தாச்சிப் போட்டி, கயிறு இழுத்தல், தலையணைச் சண்டை, கிறீஸ் மரம் ஏறுதல், தயிர் முட்டி உடைத்தல், சங்கீதக் கதிரை, யானைக்குக் கண் வைத்தல் என்பன நடைபெறவுள்ளன.

பிற்பகல் 3 மணிக்கு, இன்னிசை இரவு இசைநிகழ்ச்சியும், கிராமிய நடனமும் அதன் பின்னர் பரிசளிப்பு வைபவமும் நடைபெறவுள்ளது. உதயனின் ஏற்பாட்டில் ஐ.சி.பி.ரி. கம்பஸின் பிரதான அனுசரணையில் இந்த விழா நடைபெறவுள்ளது. (த-5)

## கிணற்றில்...

வைத்தியசாலைக்குக் கொண்டுவரும் வழியில் சாவடைந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று மட்டுவில் தெற்கில் இடம்பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த நடேசு பராசக்தி (வயது-53) என்னும் குடும்பப் பெண்ணே சாவடைந்தவராவார்.

இவரின் சடலம் சாவகச்சேரி வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது .

இவரது சாவு தொடர்பாகச் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ES Printers

357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

021 492 7471 / 021 492 7472
esprintersjaffna@gmail.com



சகல நிறுவனங்களுக்குமான
பட்டியலேடு (Bill Book)
காபன் பிரதி மற்றும் காபன்
பிரதி அற்ற, வர்ண மற்றும்
கறுப்பு வெள்ளை நிறத்தில்,
விரும்பிய அளவுகளில்
குறித்த நேரத்தில் குறைந்த
விலையில் தரமாக
செய்துதரப்படும்.




உங்கள் உறவினர்களுக்கு
அன்பளிப்பு பொருள்களை
எம் இணையத்தளம் ஊடாக
அனுப்பி மகிழுங்கள்

www.esgiftz.com
info@esgiftz.com

Poster | Notice | Lable | Wedding Card | Bag Print | Award | Frame Item | Batch
Vehicle Brand | T-Shirt | Cap | ID Card | Key Tag | Book Mark | Pen Print
Book Printing | Woodent Print



எம்மிடம் கலண்டர்கள், டயறிகள், போன்றவற்றை
மிக மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்



(C/23700)(10.18)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை...

ஏ.எவ்.பி. செய்திச் சேவை வெளியிட்டுள்ளது. இலங்கையில் நடைபெற்ற இறுதிப் போரின் போது, பாதுகாப்புத் தரப்பினர் பாலியல் துர்நடத்தைகளில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டுக்கள் பலமாக எழுந்திருந்தபோதும், அதனை இலங்கை அரசு நிராகரித்திருந்தது. இலங்கைப் பாதுகாப்புப் படையினர் ஒழுக்கமானவர்கள் என்று குறிப்பிட்டிருந்தது. இவ்வாறானதொரு நிலையிலேயே அமைதி காக்கச் சென்ற இலங்கைப் படையினருக்கு எதிராக மேற்படி குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் 2013 ஆம் ஆண்டிலும் ஹெய்ட்டியில் பணியாற்றிய இலங்கை இராணுவத்தினர் மீது பாலியல் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்க ப்பட்டிருந்த நிலையில் இப்போது மீண்டும் அதே குற்றச்சாட்டுசுமத்தப்பட்டுள்ளது. 'ஹெய்ட்டியில் பணியாற்றிய 130 இலங்கை இராணுவத்தினர் அங்குள்ள சிறுவர்களை துர்நடத்தைக்கு உள்ளாக்கியுள்ளனர். 12 வயதுடைய சிறுமிகள் மற்றும் சிறுவர்களுடன் இலங்கைப் படையினர் பாலியல் உறவு கொண்டுள்ளனர். சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சிறுமி, விசாரணை யாளர்களிடம் வழங்கிய தகவலில் சுமார் 50 அமைதிப் படையினர் தம்முடன் உறவு கொண்ட தாகத் தெரிவித்துள்ளார்.

இதன்போது தளபதி 75 சதங்களைத் தமக்கு வழங்கினார் என்றும் சிலவேளைகளில் தாம் இராணுவ கனரக வாகனத்தில் உறங்கியதாகவும் சிறுமி குறிப்பிட்டுள்ளார்.

குற்றச்சாட்டுக்கு உள்ளான அமைதி காப்புப் படையினர் எவரும் தண்டிக்கப்படவில்லை. பதிலுக்குக் குற்றம் சுமத்தப்பட்ட 130 பேரில், 114 பேர் இலங்கைக்கு அனுப்பப்பட்டனர்' என்று ஏ.எவ்.பி. செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது குறித்து இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொசான் செனவிரட்னவிடம் வினவிய போது, குற்றச்சாட்டுக்கு இலக்காகியிருந்த இராணுவத்தினரை இராணுவக் கட்டளைத் தளபதி சேவையிலிருந்து நீக்கியுள்ளார். பாலியல் துஸ்பிரயோகக் குற்றச்சாட்டுக்கு இலக்கான அனைத்துத் துருப்பினர்கள் தொடர்பிலும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றார்.

ஐ.நா. அமைதிப் படையில் உள்வாங்கப்படும் இலங்கைப் படையினர் மீது போர்க்குற்றக் குற்றச்சாட்டுக்கள் உள்ளதா என்பதை ஆராய்ந்து இணைத்துக் கொள்ளுமாறு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹூசைன், கடந்த 34 ஆவது மனித உரிமைகள் கூட்டத் தொடரின்போது குறிப்பிட்டிருந்தார்.

இத்தகைய குற்றச்சாட்டுக்கள் இலங்கைப் படையினர் மீது எழுந்துள்ள நிலையிலும், 700 படையினர் மாலியில் அமைதி காக்கும் ஐ.நா. படையுடன் அண்மையில் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-5)

## வங்கிக்...

மேற்கொண்டு வறட்சியால் பயிரழிவைச் சந்தித்த விவசாயிகளின் நலன் கருதி 4 மாதங்களுக்குத் தலா 10 ஆயிரம் ரூபா வழங்கும் திட்டத்துக்கு அமை வாகவே இது வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

விவசாயிகளுக்கான அழிவுக் காப்புறுதிப் பணம் 10 ஆயிரம் ரூபா. அதில் காப்புறுதிக் கொடுப்பனவு ஆயிரத்து 350 ரூபாவைக் கழித்து மீதிப் பணமாக 8 ஆயிரத்து 650 ரூபா விவசாயிகளின் தனிப்பட்ட வங்கிக் கணக்குக்கு வைப்பிடப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்துக்கு உட்பட்ட 8 கமநல சேவை நிலையங்களின் கீழ் காலபோக நெற்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது வறட்சியினால் பயிரழிவுக்குட்பட்ட 6 ஆயிரத்து 571 விவசாயிகளின் 18 ஆயிரத்து 587.25 ஏக்கர் பயிரழிவுக்கு என மொத்தம் 11 கோடியே 61 இலட்சத்து 65 ஆயிரத்து 50 ரூபா இழப்பீட்டுக் கொடுப்பனவு விவசாயிகளின் தனிப்பட்ட வங்கிக் கணக்குக்கு வரவிடப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப் பட்டது.

செட்டிகுளம் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள 253 விவசாயிகளின் 698.25 ஏக்கர் நெற்ப் பயிரழிவுக்கு 41 இலட்சத்து 86 ஆயிரத்து 500 ரூபாவும், உலுக்குளம் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள 145, விவசாயிகளின் 299.75 ஏக்கர் நெற் பயிரழிவுக்கு 17 இலட்சத்து 98 ஆயிரத்து 500 ரூபாவும், மடுக்கந்தை கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள 617 விவசாயிகளின் ஆயிரத்து 128 ஏக்கர் பயிரழிவுக்கு 58 இலட்சத்து 55 ஆயிரத்து 50 ரூபாவும், கோவில்குளம் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள 537 விவசாயிகளின் ஆயிரத்து 595 ஏக்கர் நெற் பயிரழிவுக்கு 95 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாவும், ஓமந்தை கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள ஆயிரத்து 232, விவசாயிகளின் 3 ஆயிரத்து 790.5 ஏக்கர் நெற்ச் செய்கையின் பயிரழிவுக்கு 2 கோடி 27 இலட்சத்து 52 ஆயிரம் ரூபாவும், பம்பைமடு கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள ஆயிரத்து 381 விவசாயிகளின் 3 ஆயிரத்து 704 ஏக்கர் நெற் பயிரழிவுக்கு 2 கோடி 22 இலட்சத்து 24 ஆயிரம் ரூபாவும், கனகராயன்குளம் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள 895 விவசாயிகளின் 2 ஆயிரத்து 996 ஏக்கர் நெற் பயிரழிவுக்கு ஒரு கோடி 79 இலட்சத்து 76 ஆயிரத்து ரூபாவும், நெடுங்கேணி குளம் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள ஆயிரத்து 511 விவசாயிகளின் 4 ஆயிரத்து 375.75 ஏக்கர் நெற்ப் பயிரழிவுக்கு 2 கோடி 62 இலட்சத்து 54 ஆயிரத்து 500 ரூபாவுமாக மொத்தம் 6 ஆயிரத்து 571 விவசாயிகளின் 18 ஆயிரத்து 587.25 ஏக்கர் நெற் பயிரழிவுக்கு 11 கோடி 61 இலட்சத்து 65 ஆயிரத்து 50 ரூபா பணம் இழப்பீட்டுத் தொகையாக வழங்கப் படுகின்றது என்று திணைக்களத் தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் புதன்கிழமை தொடக்கம் தங்களின் வங்கி கணக்குகள் ஊடாகப் பணத்தைப் பெற்று வருவதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, அடுத்த கட்டமாக 2016 - 2017 ஆம் ஆண்டு காலபோக நெற் செய்கையை மேற்கொள்ளத் தவறியவர்களுக்கும், இதே போன்று கடந்த காலபோகத்தின்போது மேட்டு நிலப் பயிர்ச் செய்கையாக மரக்கறி, பழச் செய்கை உட்பட தானியப் பயிர்ச்செய்கையை மேற்கொண்ட நிலையில் வறட்சியினால் பயிரழிவுக்குட்பட்ட விவசாயிகளுக்கும் 10 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (து-4-101)

## வடக்குப்...

சந்திப்புத் தொடர்பில் அரச தலைவரின் செயலாளர் அலு வலகத்திலிருந்து நேற்று அறிவிக்கப்பட்டதாக வேலைதேடும் பட்டதாரிகள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் முன்பாகக் காலவரையற்ற போராட்டத்தில் வடக்கு மாகாண வேலைதேடும் பட்டதாரிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

அரச வேலை வாய்ப்பை வழங்குமாறு கோரி கடந்த 46 நாள்களாக நாங்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். தொண்டர் ஆசிரியர்களின் நியமனங்களில் உரிய நடைமுறையைப் பின்பற்றுமாறும் நாம் கோருகிறோம்.

எமக்கு உரிய தீர்வு கிடைக்காமையால் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். புதுவருட தினத்தை நாம் கறுப்புப் புத்தாண்டாக கொண்டாடவுள்ளோம்.

புதுவருடம் கழித்து உரிய தீர்வு கிடைக்கும் என்று அரச தரப்புத் தகவல்கள் எமக்குக் கிடைத்திருந்தன. இந்த நிலையில் அரச தலைவரின் செயலாளர் பீ.பீ.அபயக்கோன் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் போராட்டம் நடைபெறும் யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் முன்பாக எமது பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாட வருகை தரவுள்ளார் என்று எமக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது-என்றார். (து-4, ரி)

## சுவாமிநாதன்...

சுவாமிநாதன் தெரிவித்துள்ள நிலையில், அப்படி எதுவுமே நடைபெறவில்லை. அமைச்சர் சொல்வது 'பச்சைப் பொய்' என்று உயிரிழந்த மாணவர்களின் குடும்பத்தினர் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், கொக்குவில் குளப்பிட்டிச் சந்திப் பகுதியில் கடந்த ஆண்டு யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் 5 பொலிஸார் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். கொல்லப்பட்ட மாணவர்களின் குடும்பத்தினருக்கு வீடு அமைத்துக் கொடுப்பதாக, மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வைத்துப் பெற்றோருடன் நடத்திய சந்திப்பில் உறுதியளித்திருந்தார்.

அமைச்சர் வழங்கிய உறுதிமொழி தொடர்பில் அவரிடமே கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளித்த அமைச்சர் சுவாமிநாதன், படுகொலை செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களின் குடும்பங்களுக்குக் கட்டிக் கொடுக்கவேண்டிய வீடுகளை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. பாதிக்கப்பட்ட இரண்டு குடும்பங்களில் ஒரு குடும்பத்தினருக்கு வீடு அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. இவர்களுக்காக அமைக்கப்படும் வீடுகளுக்கான நிதிகளும் கொடுத்துவிட்டேன் என்று பதில் வழங்கினார்.

படுகொலை செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களில் ஒருவரான கஜனின் குடும்பத்தினருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, சம்பவம் நடைபெற்ற காலப் பகுதியில் மீள்குடியேற்ற அமைச்சர், பல்கலைக்கழகத்தில் வைத்து எங்களுடன் கலந்துரையாடினார். இரண்டு குடும்பங்களுக்கும் வீடுகள் கட்டித் தருவதாகவும், எங்கள் குடும்பங்களில் படித்தவருக்கு அரச உத்தியோகம் வழங்குவதாகவும் உறுதியளித்திருந்தார். உறுதியளித்த பின்னர் ஒரு தடவை மட்டும் சில அதிகாரிகள் வந்தனர். அவர்கள் வந்து நீண்ட காலமாகியும் இன்றுவரை எமக்கு வீடு கட்டித் தருவதற்கான எந்த முயற்சிகளுமே எடுக்கப்படவில்லை. எங்களை அனைவரும் கைவிட்டுவிட்டனர் என்றார்கள்.

படுகொலை செய்யப்பட்ட மற்றொரு மாணவனான சுலக்சனின் குடும்பத்தாரிடம் கேட்ட போது, எங்களுக்கு வீடு கட்டித் தருவதாக மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் உறுதியளித்திருந்தார். இதுவரை அதற்கான வேலைகள் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை. எங்களுக்குக் காணி இல்லாததால் காணியை அடையாளப்படுத்தி அதன் உறுதி, வரைபடம் போன்றவற்றை அதிகாரிகளிடம் கொடுத்துள்ளோம். கட்டித் தரப்படும் என்று எங்களிடம் கூறியுள்ளனர். எவ்வாறாயினும் இன்றுவரை வீடு கட்டும் பணிகள் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை என்று குறிப்பிட்டார்கள்.

இதேவேளை, படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் குடும்பத்தினருக்கு மீள்குடியேற்ற அமைச்சினால் வருடாந்தம் மாவட்டத்துக்கு வழங்கப்படுகின்றவீட்டுத்திட்டத்தினுள்ளேயே வீடு வழங்குமாறே மீள்குடியேற்ற அமைச்சு வாய்மூலமாக மாவட்டச் செயலகத்திற்கு அறிவித்துள்ளதாக, மாவட்டச் செயலக அதிகாரிகள் குறிப்பிட்டனர். (து-5,8)

## இலங்கைக்கு...

இலங்கைக்கான ஜப்பானிய தூதரும், ஜப்பானுக்கான இலங்கைத் தூதரும் இதுதொடர்பான உடன்பாட்டில் கையெழுத்திட்டனர்.

ஜப்பான் வழங்கவுள்ள 6 ஆயிரத்து 300 கோடி ரூபா நிதியில் (45 பில்லியன் ஜப்பானிய யென்) இரண்டு கடன் உதவித் திட்டங்கள். ஒன்று நன்கொடைத் திட்டம். மூன்று அபிவிருத்தித் திட்டங்கள்.

கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டத்துக்காக ஜப்பான் 12.957 பில்லியன் யென்னைக் கடனாக வழங்கவுள்ளது. களுகங்கை நீர் விநியோக விரிவாக்கத் திட்டத்துக்கு 31.81 பில்லியன் யென் கடன் அடிப்படையில் வழங்கப்படவுள்ளது. பொருளாதார சமூக அபிவிருத்தித் திட்டத்துக்கு ஒரு பில்லியன் யென் கொடையாக வழங்கப்படவுள்ளது.

இதில், கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டத்துக்காக வழங்கப்படும் நிதி உதவி, வடக்கு, கிழக்கு, வடமத்திய, ஊவா மாகாணங்களில், உள்ளூர்ச் சாலைகள், சிறிய, நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்கள், சிறியளவிலான நீர் விநியோகத் திட்டங்கள், மேற்படி மாகாணங்களின் வாழ்வாதார மற்றும் உற்பத்தியுடன் நேரடித் தொடர்புடைய திட்டங்களுக்காக பயன்படுத்தப்படும்.

பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்காக வழங்கப்படும் ஒரு பில்லியன் யென் நிதி, திருகோணமலைத் துறைமுகத்தின் அபிவிருத்திக்காகப் பயன்படுத்தப்படும்.

ஜப்பான் வழங்கியுள்ள கடன்கள் இரண்டுக்கும் ஆண்டுக்கு 1.4 வீதப்படி வட்டியைச் செலுத்த வேண்டும் என்பதுடன், 25 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தவேண்டும். (து-4)

## இலங்கையில்...

முயற்சியாளர்கள் பங்கேற்ற வர்த்தக மாநாடு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. அதில் உரையாற்றுகையிலேயே தலைமை அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

உலக சுற்றுச்சூழல் பற்றிய இலங்கையின் வாசிப்பும், ஜப்பானின் முக்கியத்துவமும் என்ற தொனிப்பொருளில் தலைமை அமைச்சர் ரணில் அங்கு உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது:

வங்காள விரிகுடா வலய நாடுகளின் எதிர்காலச் சனத்தொகையைக் கருத்தில் கொண்டு முதலீட்டுத் திட்டங்களை வகுக்கவேண்டும். தெற்காசிய மற்றும் வங்காள விரிகுடா கரையோர நாடுகளின் எதிர்கால நலன்கருதி முதலீட்டு மற்றும் உற்பத்தித் திட்டங்களை அபிவிருத்தி செய்வது அவசியம். இந்தப் பிராந்தியங்களைச் சேர்ந்த நாடுகளின் சனத்தொகை அடுத்து வரும் 20 வருடங்களில் பெருமளவு அதிகரிக்கக்கூடும். அதற்கு ஏற்ற திட்டங்களை வகுப்பது ஜப்பானிய அரசுக்கு மாத்திரமன்றி, ஜப்பானிய தொழில் முயற்சியாளர்களுக்கும் உள்ள பொறுப்பு-என்றார்.

இந்த மாநாட்டை ஜப்பானிய பன்னாட்டு வர்த்தக சங்கம், வர்த்தக கைத்தொழில் சபை, இலங்கை - ஜப்பானிய ஒத்துழைப்புக் குழு முதலான அமைப்புக்கள் கூட்டாக ஏற்பாடு செய்திருந்தன. (து-4)

## ஜி.எஸ்.பி....

இவ்வாறு கூட்டு அரசு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

அதற்காகச் சிறப்புக் குழு எதிர்வரும் திங்கட்கிழமை பெல்ஜியம் பயணிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஜி.எஸ்.பி. வரிச் சலுகையை மீண்டும் இலங்கைக்கு வழங்குவது தொடர்பில் மதிப்பீடு செய்வதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர் மட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு இலங்கை வந்துள்ளது.

இந்தக் குழுவினரால் இலங்கை தொடர்பில் தயாரிக்கப்படும் தொழில்நுட்ப அறிக்கை எதிர்வரும் புதன்கிழமை பெல்ஜியம் பிரஸ்சல்ஸ் நகரில் இடம்பெற உள்ள ஐரோப்பிய ஒன்றியக் கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இலங்கையின் தற்போதைய பொருளாதார ஸ்திரத்தன்மை, மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர்களின் உரிமை உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பில் அரசு வழங்கியுள்ள முன்னேற்ற அறிக்கையை மதிப்பீடு செய்வது ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர்மட்டத் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பணியாக உள்ளது.

எவ்வாறாயினும் எதிர்வரும் 19ஆம் திகதி புதன்கிழமை இடம்பெற உள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் கூட்டத் தொடரில் மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை சாதகமான தன்மைகளை வெளிப்படுத்தினால் மே மாதத்தில் இருந்து ஜி.எஸ்.பி வரிச்சலுகை மீண்டும் இலங்கைக்கு கிடைக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் சிறப்புக் கூட்டத் தொடரில் கலந்துகொள்வதற்காக இலங்கைக் குழு திங்கட்கிழமை பெல்ஜியம் செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (து-4)

## முப்படைத்...

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் பாதுகாப்புத் தரப்பினர் வசம் உள்ள காணிகளை விடுவிக்குமாறு கோரி மக்கள் தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். காணிகளை விடுவிப்பது தொடர்பில் பாதுகாப்புத் தரப்பினருடன் நேரடியாகப் பேச்சு நடத்துவதற்கு கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது. ஒவ்வொரு மாவட்டங்களிலும் பாதுகாப்புத் தரப்பினர் வசம் உள்ள காணிகளின் விவரங்கள் கூட்டமைப்பினால் திரட்டப்பட்டுள்ளன.

இந்த விவரங்களைச் சமர்ப்பித்து காணி விடுவிப்புத் தொடர்பில் கூட்டமைப்பு பேச்சு நடத்தவுள்ளது. முப்படைத் தளபதிகள், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உள்ளிட்ட கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை காலை 11 மணிக்கு பாதுகாப்பு அமைச்சில் இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளதாக, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தச் சந்திப்பு எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறும் என்று மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், யாழ்ப்பாணத்தில் வைத்து நேற்று முன்தினம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (து-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நோபல் பரிசு

நாம் வாழும் இந்த நூற்றாண்டில் உலகனைத்துக்கும் உதவக் கூடிய செயற் கருஞ் செயல்கள் செய்த பெரியார்களைக் கௌரவிக்கும் முகமாக அளிக்கப்படும் பாராட்டுக்களிலும் பரிசுகளிலும் மிகச் சிறந்ததாக விளங்குவது நோபல் பரிசாகும். இது சுவீடன் தேசத்தவரான அல்பிறெட் நோபல் என்னும் வள்ளலால் உருவாக்கப்பட்டது. சாதி, மத, இன, தேச பேதங் கடந்து முழு உலகையும் தழுவி வழங்கப்படும் பரிசு இது. இந்தப் பரிசைப் பெறும் பெரியார் உலகப் புகழ் பெறுகிறார். அவரைப் பெற்றெடுத்த நாடு அவரால் பெருமதிப்பைப் பெறுகிறது. 19ஆம் நூற்றாண்டில் எமானுவல் நோபல் என்பவர் வெடி மருந்து தயாரிப்பில் ஈடுபட்டார். அவர் தயாரித்த வெடி மருந்துகளால் பல விபத்துக்களும் அகால மரணங்களும் ஏற்பட்டன. இதனால் இவரை எல்லோரும் வெறுக்க இவர்தன் தாய் நாடான சுவீடனை விட்டு ரஸ்சியா சென்றார். தந்தைக்கு ஏற்பட்ட களங்கத்தைப் போக்க வந்த அவரது மகன் அல்பிறெட் நோபல் 1833 இல் பிறந்தார். தந்தையின் தொழில் நிறுவனத்தில் அவருடன் வேலை செய்து கொண்டு ஆபத்தில்லா வெடி மருந்து கண்டு பிடிக்கும் தனது ஆய்வில் பல தோல்விகளுக்குப் பின் வெற்றி கண்டார். அவர் கண்டறிந்த பாதுகாப்பும் பயங்கர மற்றதுமான 'டைனமைட்' பல ஆக்க முயற்சிகளுக்கு பயன்பட்டது. மலைகளைப் பிளந்து ஊடறுத்து பெரு வீதிகள் சமைக்கவும் ஆழமான நெடுங் கிணறுகள், சுரங்கங்கள் தோண்டுவதற்கும் பயன்பட்டது. இவரது கண்டு பிடிப்பு உலகப் புகழ் பெற்று அவருக்கு பெரும் செல்வத்தைக் குவித்தது. ஆனால் ஆக்கத் துறைக்கான இந்தக் கண்டு பிடிப்பு, பீரங்கி, கடற் கண்ணி முதலிய அழிவுச் சாதனங்களுக்கும் பின்னாளில் பயன்படுத்தப்படுவதை அறிந்து அவர் பெரும் வேதனை அடைந்தார். இதற்குப் பரிகாரமாக உலக ஆக்கத்துக்காக எதிர்காலத்தில் அருஞ் செயல்கள் புரிவோரை ஊக்குவிக்கும் முகமாக தனது செல்வங்களைப் பயன்படுத்த எண்ணினார். அதன்படி ஆண்டு தோறும் உலக நன்மைக்காக பௌதீகம், இரசாயனம், மருத்துவம், இலக்கியம், சமாதானம் என்னும் ஐந்து துறைகளில் அருஞ்செயல்கள் புரிபவர்களுக்கு தனது நிதிகளை வழங்க தீர்மானித்தார். அவரால் ஏற்படுத்தப்பட்ட இந்தப் பரிசே நோபல் பரிசு என வழங்கப்படுகிறது. இந்தப் பரிசு 1901 ஆம் ஆண்டு முதல் ஆண்டு தோறும் சுவீடன் நாட்டு விஞ்ஞானக் கழகத்தினால் வழங்கப்பட்டு வருகிறது. பரிசு ஒவ்வொன்றும் ஒரு லட்சத்து இருபதினாயிரம் ரூபா பெறுமதியான பொற்குவை (குவியல்), கழகத்தின் நற்சான்றிதழ், விலைமதிப்பற்ற பதக்கம் என்பனவாகும். 1913இல் வங்கத்து கவிஞர் ரவீந்திரநாத் தா கூர் இலக்கியத் துறையிலும் 1930இல் தமிழ் நாட்டைச் சேர்ந்த ஸி.வி.இராமன் என்வருக்கு பௌதீகத்துறைக்கும் இந்தப் பரிசு கிடைத்தது. இந்தப் பரிசை இரண்டு முறை பெற்ற பெருமைக்குரியவர் மேரி கியூறி அம்மையார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அன்பினால் ஆகாதது....



கடை ஒன்றில் விதம் விதமான இனிப்புப் பண்டங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அந்தக் கடைக்குள் நுழைந்த ஓர் எலி அங்குமிங்கும் நோட்டம் விட்ட பின் எதனை எடுத்துச் செல்லாமென யோசனை செய்தது. அந்த நேரம் திடீரென கடையினுள் கடைக்காரர் வந்து விடவே எலி துள்ளிக் குதித்து கடையை விட்டு வெளியேறி தெருப் பக்கமாக ஓடியது. அந்த நேரம் தெருவோர மதிலில் இருந்த காகம் எலியைக் கண்டு விட்டது. தனக்கு நல்ல இரை கிடைத்து விட்டதாக எண்ணிய அது எலியை விரட்டிப் பிடிக்க முயன்றது. தனதுதடித்த அலகினால் எலியைக் கொத்தப் போனது. காகம் தன்னைக் கொத்த வருவதைக் கண்ட எலி 'கீச் கீச்' என்று கத்தியவாறு காகத்தைப் பார்த்து "நீங்கள் என்னைப் பிடித்துக் கொல்ல நினைக்கிறீர் களே! என்மீது கொஞ்சமாவது கருணை காட்ட மாட்டீர்களா?" என்று அன்போடு கேட்டது. காகமோ "எலியே! எனக்கு மிகவும் பசியாக இருக்கிறது. என் பசி தீர்க்க இப்போது உணவு தேவை. அதனால் உன்னை இரையாக்கிக் கொள்ளப் போகிறேன். அடம்பிடிக்காமல் எனக்கு இரையாகி விடு" என்றது.

"காகம் அண்ணா! உங்கள் பேச்சில் ஒருவித நியாயம் இருப்பதாக உணர்கிறேன். ஆனால் உங்கள் குஞ்சுகளுக்கு இதைப் போல் ஓர் ஆபத்து நேர்ந்து அந்தக் குஞ்சுகள் வேறு ஏதாவது பறவையிடமோ விலங்கிடமோ சிக்கிக் கொண்டால் அவைகள் என்ன பாடுபடும் என்று கொஞ்சம் எண்ணிப்பாருங்கள். உங்கள் குஞ்சுகளில் ஒன்றாக என்னை நினைத்து எனக்கு உயிர்ப் பிச்சை கொடுப்பீர்களா?" என்றது வினயமாக.

சிறிது நேரம் யோசனை செய்த காகம் "எலியே! உன்னைக் கண்டவுடன் எப்படியாவது உன்னை என் இரையாக்கி விடவேண்டுமென்ற எண்ணமே எனக்குத் தோன்றியது. ஆனால் உன் அன்பான, பணிவான வார்த்தைகள் என் மனதில் இருந்த அந்த எண்ணத்தை அகற்றி விட்டன. மேலும் அவ்வார்த்தைகள் என் பிள்ளைப் பாச உணர்வினையும் தட்டி எழுப்பி விட்டன. இனி என்னால் உன்னை இரையாக்க முடியாது. நீ பயமில்லாமல் செல்லாம்" என்று கூறியபடி வேறு இரை தேடிப் பறந்து சென்றது. எலியோ "எனது அன்பான வார்த்தைகளுக்கு இத்தனை சக்தி உள்ளதா? அன்பான வார்த்தைகள் எதிரியைக் கூட மாற்றி விடுமா? என்று வியந்து நின்றது. இனி மேல் தானும் எல்லோரையும் அன்பு செய்ய வேண்டும் என்ற உறுதியோடு தன் வளையை நோக்கி ஓடிப்போனது.


**அறத்திற்கே அன்பு சார்(பு)என்ப அறியார்**
**மறத்திற்கும் அஃதே துணை குறள் - 76**
**பொருள்:- அறச் செயல்களைச் செய்வதற்கே அன்பு.துணையாக நிற்கும் என்பார்கள். அறியாதவர்கள். ஆனால் மறச் செயல்களை நீக்குவதற்கும் அந்த அன்பே துணையாகும்.**

## சிறு துரும்பும் பல் குத்த உதவும்


இது பொருள் பொதிந்த ஒரு சொற்றொடர். நாம் உண்ட உணவில் ஏதாவது ஒரு சிறு பகுதி பல் இருக்கில் சிக்கிக் கொண்டால் அதனை எடுப்பதற்கு சிறு குச்சி தேவைப்படுகிறது என்பதுதான் இதன் நேர்பொருள். எதையும் நாம் அற்பமாக நினைத்து விடக் கூடாது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு காரியத்துக்கோ பல காரியங்களுக்கோ பயன்படக்கூடும். எனவே நாம் எதை யும் சிறியது என்றோ அற்பமானது என்றோ புறக்கணித்து விடு தல் கூடாது. உலகில் பயன்படாதது எதுவும் இல்லை என்பதை நாம் உறுதியாக நினைத்தல் வேண்டும். என்பதே இது கூறும் உட்பொருளாகும்.



## வர்ணம் தீட்டுவோம் வாருங்கள்



## ✓ அடையாளமிட்டு எண்ணுவோம். எண்ணில் எழுதுவோம்



மீன்களின் எண்ணிக்கை.........

## எமது வீட்டுத் தோட்டத்தில்...

1. எமது வீட்டில் உள்ள தோட்டமே வீட்டுத் தோட்டமாகும்.
2. எமது வீட்டைச் சுற்றி தோட்டம் வைத்துள்ளோம்.
3. எமது தோட்டத்தில் பல வகைத் தாவரங்கள் உள்ளன.
4. மா, பலா, வாழை, மாதுளை என கனி தரும் மரங்களும் உள்ளன.
5. எல்லா வகையான மரக் கறிப் பயிர்களும் உண்டு.
6. கத்தரிச் செடியில் அழகான ஊதா நிற காய்கள் தொங்கும்.
7. தக்காளி, காய்களும், செக்கச் சிவந்த கனிகளுமாய் நிறைந்திருக்கும்.
8. பந்தல்களில் பயற்றை, பாகல், புடோல் என்பன காய்த்துத் தொங்கும்.
9. பூசனிக் கொடி பூக்களுடனும் காய்களுடன் நிலத்தில் படர்ந்திருக்கும்.
10. கீரை பாத்திகளில் செழித்து அசையும். மிளகாய் கரும் பச்சையும் சிவப்புமாக காய்த்துத் தொங்கும்.
11. மரவள்ளி நிலத்தினுள் கிழங்களை மறைத்து நிற்கும்.
12. வாழை குலை தள்ளி நாணி நிற்கும்.
13. தென்னைகளில் பாளைகள் வெடித்துச் சிரிக்கும்.
14. எங்களுக்கு தேவையான மரக்கறி வகைகள் எமது தோட்டத்திலேயே கிடைக்கின்றன.
15. எமது தோட்டத்தில் வேலை செய்வது எமக்கு மகிழ்ச்சியான பொழுது போக்கு.
16. ஒவ்வொரு வீட்டிலும் வீட்டுத்தோட்டம் வைத்தல் வேண்டும்.
17. வீட்டுத் தோட்டத்தால் நல்ல பயன் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூஸ்ரார் லூட்ஸ் இறுதிக்கு சென்றன

யாழ்ப்பாணம், ஏப். 14

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் நவரட்ணராஜா ஞாபகார்த்த கிண்ணத்துக்கான தொடரில் நியூஸ்ரார், சென். லூட்ஸ் அணிகள் இறுதிக்குத் தகுதி பெற்றன.

இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் நியூஸ்ரார் அணியை எதிர்த்து அராலி அண்ணா விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் கோலெதனையும் பதிவுசெய்யாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றிபெற வேண்டிய நிலை ஏற்பட்டது. நியூஸ்ரார் அணி 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியில் சென். லூட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா ஓர் கோலைப் பதிவுசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதையில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. சென். லூட்ஸ் அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)




# 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு வடக்கு கிரிக்கெட் அணி அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 14

இலங்கை கிரிக்கெட் சபை தேசிய ரீதியில் நடத்தவுள்ள 19 வயதுக்குபட்பட்ட ஆண்கள் அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடருக்கான வடக்கு அணி அண்மையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

வடமாகாண அணி விவரம் - வி.யதுசன் (அணித் தலைவர் சென்.ஜோன்ஸ் கல்லூரி), எம்.நிதுசன் (கிளிநொச்சி மகா வித்தியாலயம்), எஸ்.கௌதமன் (யாழ். மத்திய கல்லூரி), எஸ்.மதுசன் (யாழ். மத்திய கல்லூரி), எஸ்.தசோபன் (யாழ். மத்திய கல்லூரி), கே.கபில்ராஜ் (சென். ஜோன்ஸ் கல்லூரி), ஜீ.ரதீஸ்சன் (சென். பற்றிக்ஸ் கல்லூரி), ஏ.றொசாந்தன் (சென். பற்றிக்ஸ் கல்லூரி), அஸ்மித பிரமோதய (மடுகந்த மகா வித்தியலயம்), எஸ்.ருசாந்தன் (வவுனியா விபுலனந்தாக் கல்லூரி), எ.அனுக்சன் (கிளிநொச்சி இந்துக் கல்லூரி), கே.பானுயன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), ரி.தயூஸ்சன் (மாகாஜனக் கல்லூரி), வை.சஜீவன் (பூநகரி மத்திய கல்லூரி), ரி.சூரியகுமார் (மன்னார் சித்தி விநாயகர் தேசிய பாடசாலை), எஸ்.கஜன் (மன்னார் புனித வளனார் றோ.க.தமிழ் வித்தியாலயம்), எம்.யசிக்குமார் (கிளிநொச்சி மகா வித்தியலயம்), ஆர்.தனுசன் (முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி), சி.தனுசியன் (கிளிநொச்சி மகா வித்தியலயம்), எஸ்.பிரதீசன், (கிளிநொச்சி இந்துக் கல்லூரி).

இந்த அணிக்குத் தலைமைப் பயிற்றுனராக அமிலபின்னத்துவ, துணைப் பயிற்றுனர்களாக கார்த்திகேசன், லக்சிதகேரத், ஜெயக்குமாரன், கெங்காதரன், இணைப்பாளராக நிசாந்தன் ஆகியோர் செயற்படவுள்ளனர். (ம-23)

# விக்னேஸ்வரா அணி வென்றது கிண்ணம்

யாழ்ப்பாணம் கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான கபடியில் 17 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவில் வாதரவத்தை சிறி விக்னேஸ்வரா வித்தியாலய அணி கிண்ணம் வென்றது.

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் வாதரவத்தை சிறி விக்னேஸ்வரா வித்தியாலய அணியை எதிர்த்து கல்வியங்காடு செங்குந்தா இந்துக் கல்லூரி அணி மோதியது. இதில் வாதரவத்தை சிறி விக்னேஸ்வரா வித்தியாலய அணி 21:14 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம-422)

# லக்கி ஸ்ராரை வென்றது கோல்டன் ஸ்ரார்

யாழ்ப்பாணம், ஏப். 14

வவுனியாநியூபைட் விளையாட்டுக் கழகத்தின் 21ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கோல்டன் ஸ்ரார் அணி வெற்றிபெற்றது.

நியூபைட் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கோல்டன் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து லக்கி ஸ்ரார் அணி மோதியது. இந்த ஆட்டத்தில் கோல்டன் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)



# ஓமந்தை மைதானக் கட்டுமானம் இந்த வருடத்தில் முழுமைபெறும்

யாழ்ப்பாணம், ஏப். 14

இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சினால் ஓமந்தையில் அமைக்கப்பட்டுவரும் பன்னாட்டுத் தர மைதானத்தின் கட்டுமானங்கள் இந்த வருடத்துக்குள் முழுமையாக நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

23 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுவரும் இந்த மைதானக் கட்டுமானங்கள் மூன்று பிரிவாக நடைபெற்று வருகின்றன. நீச்சல் தடாகத்துக்கான கட்டுமானப் பணிகள் 65 சதவீதமும், உள்ளரங்குக் கட்டுமானப் பணிகள் 40 சதவிதமும் நிறைவடைந்துள்ளன. திட்டத்தின் படி நீச்சல் தடாகத்தின் கட்டுமானங்கள் மே மாதத்துடனும், உள்ளக அரங்குக்கான கட்டுமானப் பணிகள் செப்ரெம்பர் மாதத்துடனும் முடிவடைய வேண்டும். கட்டுமானங்கள் குறித்த திகதியில் முடிக்கக்கூடிய வகையில் வேலைகள் நடைபெற்று வருகின்றமையால் இந்த வருடத்துக்குள் மைதானத்தின் பணிகள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மைதானத்துக்கான சுற்றுமதில்கள் அமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-23)



# சென். ஜேம்ஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், ஏப். 14

யாழ்ப்பாணம் கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான கபடியில் 17 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் குருநகர் சென். ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை அணி கிண்ணம் வென்றது.

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் சென். ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை அணியை எதிர்த்து சுண்டுக்குழி மகளிர் கல்லூரி அணி மோதியது. இந்த ஆட்டத்தில் சென். ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை அணி [illegible] என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனானது. (ம-422)

# மகுடம் சூடியது கிங்ஸ்

யாழ்ப்பாணம், ஏப். 14

அரியாலையின் 98 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் மாவட்ட ரீதியில் நடத்தப்பட்ட மென்பந்துத் துடுப்பாட்டத் தொடரில் சங்கானை கிங்ஸ் அணி கிண்ணம் வென்றது.

அண்மையில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சங்கானை கிங்ஸ் அணியை எதிர்த்து கொக்குவில் இந்திரா அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய சங்கானை கிங்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து 63 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சூரி 29 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திரா அணி 4.5 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 38 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. இதனால் 25 ஓட்டங்களால் சங்கானை கிங்ஸ் அணி வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## சென். பீற்றர் வி.கழகம் அரையிறுதிக்கு தகுதி பெற்றது

யாழ்ப்பாணம், ஏப். 14
பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமராட்சி அணிகளுக்கு இடையிலான குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கால் பந்தாட்த் தொடரில் பொற்பதி சென். பீற்றர் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. திக்கமுனை மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் பொற்பதி சென். பீற்றர் அணியை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனீஸ் அணி மோதியது. முதல் பாதியாட்டத்தில் இரு அணிகளும் சம பலத்துடன் மோதின. 11 ஆவது நிமிடத்தில் பொற்பதி சென். பீற்றர் அணி வீரர் அசோகன் தனது அணிக்கான முதலாவது கோலை பதிவு செய்தார். 22ஆவது நிமிடத்தில் மணற்காடு சென். அன்ரனீஸ் அணி வீரர் பதிலடி கொடுக்க முதல் பாதியின் முடிவில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றிருந்தன. இடைவேளைக்கு பின்னரான ஆட்டத்திலும் விறுவிப்புக்குப் பஞ்சம் இருக்கவில்லை. அசோகன் மற்றுமொரு கோலைப் பதிவு செய்ய 2:1 என்ற கோல் கணக்கில் சென். பீற்றர் அணி வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதிபெற்றது. இரண்டு கோல்களைப் பதிவுசெய்த அசோகன் ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ம-422-108)




# சரிவில் இருந்து மீண்டு சாதித்தது ரியல்மட்ரிட்

ஐரோப்பிய கால்பந்துக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ்லீக் தொடரில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு (இலங்கை நேரப்படி) நடைபெற்ற ஆட்டத்தில் வெற்றிபெற்றது ரியல் மட்ரிட். முதலாம் பாதியில் மட்ரிட் பின்தங்கியிருந்தபோதிலும் இரண்டாம் பாதியில் சரிவில் இருந்து மீண்டு வந்து அந்த அணி சாதித்துக் காட்டியது.
மட்ரிட்டை எதிர்த்து பெயர்ன் மூனிச் அணி மோதியது. எதிர்பாராப் போராட்டத்தை வெளிப்படுத்தியது மூனிச். அந்த அணியின் நட்சத்திர வீரர் விடால் 25 ஆவது நிமிடத்தில் கோலொன்றைப் பதிவுசெய்ய முதல்பாதியின் முடிவில் 1:0 என்று ஆதிக்கம் செலுத்தியது பெயர்ன் மூனிச். இரண்டாம் பாதியின் ஆரம்பத்தில் அதாவது ஆட்டத்தின் 47ஆவது நிமிடத்தில் ரொனால்டோ பதில்கோலைப் பதிவுசெய்தார். 1:1 என்ற நிலையில் ஆட்டம் நகர்ந்துகொண்டிருந்தது. 77 ஆவது நிமிடத்தில் ரொனால்டோ மற்றொரு கோலைப் பதிவுசெய்தார். முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வென்றது மட்ரிட். (ம)

## இலக்குக் காப்பாளரின் பாதுகாப்பு அதிகரிப்பு

### *வருகிறது புதிய விதி*

பன்னாட்டு கிரிக்கெட் ஆட்டங்களுக்கான விதிமுறைகளை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்து வரும் இங்கிலாந்தில் உள்ள மெரிலிபோன் கிரிக்கெட் கிளப் (எம்.சி.சி) இலக்குக் காப்பாளர்களின் கூடுதல் பாதுகாப்பை கருத்தில் கொண்டு சில மாற்றங்களை ஏற்படுத்த முடிவு செய்துள்ளது.
துடுப்பாட்ட வீரர் போல்ட் முறையில் ஆட்டமிழக்கும் போது இலக்கில் வைக்கப்பட்டிருக்கும் பெய்ல்ஸ்கள் இலக்குக் காப்பாளரைத் தாக்குவதுண்டு. அவ்வாறு மேலெழும்பிய பெய்ல்ஸ் கண்ணைத் தாக்கியதில் தென்னாபிரிக்கா இலக்குக் காப்பாளர் பவுச்சரின் கிரிக்கெட் வாழ்க்கை பாதியில் முடிந்தது. இவற்றை கவனத்தில் கொண்டுள்ள மெரிலிபோன் கிரிக்கெட் கிளப் பெய்ல்ஸ் அதிகதூரம் பறக்காதவாறு இலக்குக்கும் பெய்ல்ஸுக்கும் இடையில் கூடுதல் இணைப்பொன்றை அறிமுகப் படுத்தியுள்ளது. (ம)




## சென். ஜேம்ஸ் மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், ஏப். 14
யாழ்ப்பாணம் கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான கபடியில் 20 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் குருநகர் சென். ஜேம்ஸ் பாடசாலை அணி கிண்ணம் வென்றது.
கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் சென். ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை அணியை எதிர்த்து சுண்டுக்குழி மகளிர் கல்லூரி அணி மோதியது. இதில் சென். ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை அணி 43:8 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (ம-422)



## பும்ராவுக்குப் பாராட்டு ரோகித்திடமிருந்து

ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மும்பை, ஹைதராபாத்தை வீழ்த்தியது. இந்த ஆட்டத்தில் தமது வெற்றிக்கு பந்துவீச்சாளர்களே காரணம் என்று அந்த அணியின் தலைவர் ரோகித் சர்மா பாராட்டுத் தெரிவித்தார். குறிப்பாக அவர் வேகப்பந்து வீச்சாளர் பும்ராவை மிகையாகப் பாராட்டினார்.
"இந்த வெற்றிக்கு பந்துவீச்சு வரிசையின் அபாரச் செயற்பாடே முக்கிய காரணம். குறிப்பாக பும்ரா மிகவும் நேர்த்தியாகப் பந்துவீசினார். வோர்ணர், யுவராஜ் போன்ற அதிரடி வீரர்களைக் கட்டுப்படுத்தியது அபாரமானது" என ரோகித் மேலும் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






# பஞ்சாப் படுதோல்வி

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் கொல்கத்தாவிடம் படுதோல்வியடைந்தது பஞ்சாப் அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. பஞ்சாப்பின் ஆரம்ப இணையான அம்லா - வோக்ரா இணை 50 ஓட்டங்கள் வரை தாக்குப்பிடித்தது. அணி 53 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் வோக்ரா. ஸ்ரொய்னிஸை போல்ட் செய்தார் நரைன். அம்லா 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதற்காக அவர் 27 பந்துகளை எதிர்கொண்டார். மக்ஸ்வெல், மில்லர், சகா முறையே 25, 28, 25 ஓட்டங்களைச் சேர்க்க முடிவில் 9 இலக்குகளை இழந்து 170 ஓட்டங்களைக் குவித்தது பஞ்சாப்.

பதிலுக்குக் களமிறங்கிய கொல்கத்தாவுக்கு ஆரம்ப வீரர்களாக கம்பீர் மற்றும் நரைன். சுழல் பந்துவீச்சாளரும் பகுதி நேரத்துடுப்பாட்ட வீரருமான நரைனை ஆரம்ப வீரராகக் கொண்டுசென்ற கம்பீரின் வியூகம் ஆரம்பத்தில் விமர்சிக்கப்பட்டாலும் நரைன் 18 பந்துகளில் 37 ஓட்டங்களைக் குவித்து வியக்க வைத்தார். 34 பந்துகளில் அரைச்சதம் கடந்தார் கம்பீர். அவர் தொடர்ந்தும் சிறப்பாகச் செயற்பட்டார். மற்றொரு இலக்கை இழந்தாலும் முடிவில் 8 இலக்குகளால் வென்றது கொல்கத்தா. கம்பீர் 72 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

(ம)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.04.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.